
தங்கள் குடும்பத்தை
வாழ வைக்க வந்த
நண்பரின் கட்டளையை
ஏற்றுச் சிக்கலான
செயலை நிறைவேற்றக்
சிக்கலான பணியை
ஏற்கிறாள்.
நூறு - இருநூறு
வருடங்களுக்கு முன்பு
நடந்ததாய்க் கற்பனைச்
செய்யப்பட்ட புதினம்.
நேற்றைய சமூகம்
இன்றைய வரலாறு.



நான் எழுதிய ஆறு சமூகப் புதினங்களை வெளியிட யாழினி பதிப்பகத்தார் ஒப்புக் கொண்டுள்ளனர்.

'இரத்தின ஹாரம்' - 112 பக்கங்களிலுள்ள பெருங்கதை. படித்துப் பாருங்கள்; சுவையாக இருந்தால் பாராட்டுங்கள்; ஆதரவு தாருங்கள்.

எனக்கும் ஊக்கமும் உற்சாகமும் அளியுங்கள்.

வணக்கம்.

விக்கிரமன்

# இரத்தின ஹாரம்

## 1

**பி**ள்ளையார் சிலைக்கு விளக்கேற்றிவிட்டு, மெல்லத் திரும்பினாள் மரகதவல்லி. பொழுது சாய்ந்து, இருள் மெல்ல மெல்லக் கௌவத் தொடங்கியதால் அந்த மாளிகையின் நடுக்கூடத்தில் இருள் அடர்ந்து சூழ்ந்துவிட்டது.

நடுக்கூடத்தின் மையத்திலுள்ள சுவரிலுள்ள சிறு மாடத்தில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது. காலையிலும், மாலையிலும் மாளிகைப் பணிப்பெண் விநாயகருக்கு விளக்கேற்றி மலரிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

பணிப் பெண்ணாகவும், அதே சமயம் ஓர் அதிகாரி போலும் விளங்கிய மரகதவல்லி நாள்தோறும் பிள்ளையாருக்கு விளக்கேற்றும் பொறுப்பை ஏற்றிருந்தாள்.

அன்று விளக்கேற்றித் திரும்பியவுடன் மேல் மாடத்துப் படிக்கட்டோரத்தில் யாரோ குதிக்கும் மெல்லிய ஓசை கேட்டது. ஒரு கணம் மரகதவல்லி திடுக்கிட்டாள்.

"யாரது?" என்று தைர்யத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள். இருந்த இடத்தை விட்டு நகரவில்லை.

உயரமான மேல் விதானமும், தூண்களும், சித்திர விசித்திரமான இருக்கைகளும், கட்டில்களும், நாற்காலிகளும், உட்கார்ந்து உரையாடப் பஞ்சணைத் திண்டு கொண்ட மேடையும் நிறைந்த அந்தக் கூடத்தில் 'லஸ்தர்' விளக்குகள் பூங்கொத்து போல் தொங்கின. இன்னும் சிறிது நேரத்தில் விளக்கு ஏற்றுபவன் ஒவ்வொரு விளக்காக ஏற்ற வருவான். இருளை ஒட்டிப் புதுச் சோபையுறும்படி செய்யும் அவ்விளக்குகள் ஒளி வீசத் தொடங்கும்.

வழவழப்பான தூண்களில், பளபளப்பான பித்தளைப் பிடிகளுடன் கண்ணாடிக் கூண்டுகளுக்குள் புதியவித விளக்குகள் பதிக்கப்பட்டிருந்தன. கடல் கடந்து வந்த சில வணிகர்கள் அளித்த விளக்குகள் அவை. அவை விசேட நாள்களில் மட்டும் ஏற்றப்படும். அவை ஏற்றப்பட்டால் ஏற்படும் ஒளி பகல்பொழுது வந்து விட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்தும்.

மரகதவல்லிக்கு உள்ளூரப் பயம்தான் என்றாலும் அவள் மெல்ல எச்சிலை விழுங்கித் தைர்யத்தை வரவழைத்துக் கொண்டு, "யாரது?" என்று மறுபடியும் சற்று உரக்கக் குரல் கொடுத்தாள்.

இருளில் அந்த உருவம் மெல்ல நடந்து வருவது தெரிந்தது. மரகதவல்லியின் உடல் சிலிர்த்தது. அந்த உருவம் மெல்லியதாகச் சிரிப்பதும் அவள் செவிகளில் வீழ்ந்தன. அந்த மாளிகைக்குள் அப்படிச் சுலபமாக அந்நியர் எவரும் நுழைந்துவிட முடியாது. அப்படியும் யாரோ மேல் மாடத்திற்கு வந்து கைப்பிடிச் சுவர் வழியாகப் படிக்கட்டுகள் அருகே குதித்து மறைந்து நிற்கிறார் என்றால்... அது எப்படி முடிந்தது. மிகவும் சாமர்த்தியசாலியாகவோ... மாளிகையின் உள் உளவு அறிந்தவராகவோ இருக்க வேண்டும்.



மரகதவல்லி மாடிப் படிக்கட்டுகளில் மிக அருகே மெல்ல அடி வைத்துச் சென்று, "யாரது" என்று மீண்டும் குரல் கொடுத்தாள்.

அந்த உருவம் அவள் காதில் மட்டுமே சிரித்தது கேட்டது.

"என்ன மரகதம் என்னை மறந்துவிட்டாயா?" என்று மெல்லிய குரலில் கேட்டது. இருளை விட்டு உருவம் வெளிச்சத்திற்கு வரவில்லை.

இருட்டிலிருப்பவருக்கு வெளிச்சத்திலிருப்பவரைத் தெரியும். வெளிச்சத்திலிருப்பவர்களால் இருட்டிலிருப்ப வரை அறிந்துகொள்ள முடியாது. "யார் என்று எனக்குத் தெரியவில்லை. யாராயிருந்தாலும் நேர் வழியாக வராமல் மறைந்து வருவானேன்?" என்று மரகதம் மெல்ல ஆனால் அழுத்தமாகக் கண்டிப்பான குரலில் பேசினாள்.

அவள் அவ்வளவு பேசியிருக்க வேண்டாம். கையொலியை எழுப்பி "பீம் குமார்" என்று அழைத்தால் போதும், ஆஜானுபாகுவாய், மாளிகைக் காவல்காரன் ஓடி வந்து நிற்பான். நொடியில் அனுமதியின்றி உள்ளே வந்தவனின் கை கால்களைத் தனித் தனியே பிய்த்து எடுத்திருப்பான். பீம்குமார் வடக்கே வெகு தொலைவில் இமாலய மலைச் சரிவிலுள்ள ஊரொன்றிலிருந்து வந்தவன். நம்பிக்கை மிகுந்தவன், தோள் வலிமை மிகுந்தவன். ஒருவனே பலரை எதிர்த்து வெல்லக் கூடியவன். அந்த மாளிகைக் காவலனாகப் பல ஆண்டுகளாக இருப்பவன். செஞ்சி அரசர் அன்புப் பரிசாக அவனை அளித்திருந்தார்.

அந்த உருவம் இரண்டு கரங்களையும் கொட்டி, "சபாஷ்... சபாஷ்... மரகதம் நன்றாகப் பேசவும் கற்றுக் கொண்டுவிட்டாய். நீ இனி பிழைத்துக் கொள்வாய்" என்றது.

மரகதம் புரிந்து கொண்டாள். அந்தக் குரலுக்கு உரியவர் யார் எனத் தெரிந்து கொண்டு விட்டாள். அவளுக்குச் சிரிப்பு ஒரு பக்கமும், பயம் ஒரு பக்கமும் சூழ்ந்தன. அழகாகப் பேசுவதாக அந்த உருவம் கூறிற்றே, அந்த உருவத்தின குரலைத் தெளிவாகப் புரிந்து கொள்ளத்தான் அவள் அவ்வாறு பேசினாள். தெரிந்து கொண்டு விட்டாள் யாரென்று.

"ஆ, நீங்களா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஆம்; நானே தான், மரகதம், நானே தான். அதே ராஜ வல்லப பூபதிதான். என்னை மறந்தாலும், என் குரலை நீ மறக்காதவரை நான் பிழைத்தேன்..." என்று கூறி அவன் சற்று வெளிச்சத்திற்கு வந்தான். ஒவ்வொரு படியாக இறங்கி, கடைசிப் படிக்கட்டில் வந்து நின்றான்.

கூடத்துத் தரையில் விரிக்கப்பட்டிருக்கும் இரத்தினக் கம்பளத்தில் அடியெடுத்து வைக்க வேண்டியதுதான். ஏனோ சற்றுத் தயக்கங் காட்டினான்.

"ராஜ அத்தான்" என்று மரகதம் அழைக்கும்போது ராஜ வல்ல பூபதி நெகிழ்ந்தே போனான். அவள் குரலுக்குத் தான் எத்தனை வசீகரம். மரகதவல்லி என்பதற்குப் பதிலாக மதுரவல்லி என்று பெயர் வைத்திருக்கலாம். அவன் சிரித்துக் கொண்டான்.

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்ட மரகதம் தானும் மெல்ல முத்துப் பல்வரிசையைக் காட்டினாள்.

"பழைய சம்பவம் ஒன்றை நினைத்துக் கொண்டேன். சிரிப்பு வந்தது."

"பழைய சம்பவங்களில் சிரிப்பு வரக்கூடியதாக ஏதும் நடந்ததாக எனக்கு நினைவுக்கு வரவில்லையே..." என்று மரகதம், நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள். பிறகு, "ஐயோ, தங்களை இங்கேயே நிற்க வைத்துப் பேசுகிறேனே - கூடத்திற்கு வந்து ஆசனத்தில் அமர்ந்து பேசலாமே" என்றாள்.



அவளிடம் ஒருவித நடுக்கமிருப்பதை ராஜ வல்லப்பன் காணத் தவறவில்லை.

"மரகதம், ஏன் உன் உடல் நடுங்குகிறது?" என்று கேட்டான் அவன்.

தன்னிடம் ஏற்படும் மாறுதலை மிகத் துல்லியமாக அறியும் ராஜ வல்லபனின் திறமையைத் தனக்குள்ளேயே வியந்த மரகதம் குரலில் கவலையை மெல்ல வரவழைத்துக் கொண்டு, "அத்தான் நான் பயப்படுகிறேனா, கவலைப்படுகிறேனா என்று தாங்கள் பிரித்து உணர முடியாது. இரண்டுமே எனக்கு... மதிப்பும் மரியாதையும் மிகுந்த தாங்கள் இப்படி ஒருவரும் அறியாமல் மாளிகையின் பின்புறமாக வந்தீர்களே என்ற கவலை. அப்படித் தாங்கள் வந்ததை யாராவது பார்த்துவிட்டால் ஏற்படும் ஆபத்தை நினைத்துப் பயம்..." என்றாள்.

ராஜவல்லபன் அவளைக் கூர்ந்து கவனித்தான். முன்பு எப்போதையும் விட மரகதவல்லியின் மேனி மிகவும் எழில் நிறைந்திருந்தது. மாளிகையின் ராஜபோக வாழ்க்கை உடலில் புதுச் சேபையை அளித்திருந்தது. வயதின் மினுமினுப்பு அவளுடைய உடலெங்கும் பரவிப் பருவத்தைப் பறை சாற்றியது.

"கவலைப்படுவது நியாயம். ஆனால் நீ பயப்படுவதன் காரணம் எனக்குப் புரியவில்லையே. இந்த மாளிகை எசமானரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் நீ வைத்ததுதானே இங்குச் சட்டம். உன்னைக் கேட்கக்கூட ஒருவருக்கு இங்குத் துணிவு இருக்கிறதா?" என்று கூறி ராஜவல்லபன் பெரிதாகச் சிரித்தான்.

"உஸ்; ரொம்பவும் பலமாகக் குரல் கொடுக்காதீர்கள். மனிதர்களை விடப் பிராணிகளுக்கு அறிவு

அதிகம். கரும்புலியின் காதில் வீழ்ந்தால் அது சும்மாயிராது" என்றாள் மரகதம்.

"அது என்ன கரும்புலி? இங்கே மனிதர்களைத் தவிர காட்டு மிருகங்களும் உள்ளனவா?" - ராஜவல்லபன் கேட்டான்.

"என்ன செய்வது? இங்கே மனிதர்களைத் தவிர மிருகங்களும் சில சமயம் நுழைந்து விடுகின்றன. எசமானர் சில மாதங்களுக்கு முன்பு தெற்கே ஸ்ரீவில்லிபுத்தூர் வரை சென்றிருந்தார். வரும்போது இரண்டு நாய்களைக் கொண்டு வந்தார். ஒன்று இறந்துவிட்டது. மற்றொன்று சிறுத்தைப் புலி போல் உறுமும். அதன் பார்வையே வயிற்றைக் கலக்கும். ஆனால் வாலை ஆட்டிக்கொண்டு நன்றி விசுவாசத்துடன் குழைந்து அருகே வரும். அதனுடைய அன்புக்கு இணை சொல்லவே முடியாது. இந்த மாளிகையின் காவலில் பாதியை அதுதான் செய்கிறது. கரும்புலி என்று எசமானர் அதை ஆசையுடன் அழைப்பார். வாலை ஆட்டிக்கொண்டே அது அவரருகே கம்பீரமாக வந்து அமரும்போது நம் குலை நடுங்கும்." என்று சொல்லும்போது உண்மையிலேயே மரகதத்தின் மேனி சிலிர்த்தது.

"நாயென்றால் பயமா?" - ராஜவல்லபன் கேட்டான்.

"எனக்குப் பயமில்லை. என்னிடம் நன்றாகப் பழகிவிட்டது. ஆனால், அதனால் மற்றவர்களுக்கு ஏதாவது நேர்ந்து விடப்போகிறதே என்று பயப்படுகிறேன்" என்றாள் மரகதம்.

"அதற்கும் தெரியும்: எசமானரிடம் பிரியமானவரைக் கண்டால் அது குழையும். என்னைக் கண்டால் கூட அது வாலை ஆட்டி வரும். ஒரு தடவைப் பார்த்தால் கூடப் போதும். கூப்பிடட்டுமா..." என்றான் வல்லபன்.



மரகதம் பரபரப்புடன், "வேண்டாம், வேண்டாம்... விஷப் பரீட்சை வேண்டாம். கரும்புலி வரும். அதனுடன் பீம்குமார் ஓடி வருவான். மாளிகையின் முன் வாயில் வழியாக வராமல், நீங்கள் எப்படி வந்தீர்கள் என்று சந்தேகப்படுவான். அப்படித் தெரியாமல் நுழைந்த நீங்கள், என்னுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைப்பான். சந்தேகப்படுவான். அதன் விளைவு என்னவென்று சொல்ல முடியாது. அதனால்... என்று" என்று நிறுத்தினாள்.

"அதனால்..." என்று புருவத்தைச் சற்றுச் சுருக்கிய ராஜவல்லபன், "என்னவோ சொல்ல வந்தாயே... அதனால் வந்த வழியே ஒருவருக்கும் தெரியாமல் போய் விடு என்கிறாய் அல்லவா?" என்று கேட்டான். குரலில் கடுமை தெரிந்தது.

"கோபப்படாதீர்கள் ராஜ்: பீம் வந்துவிட்டால் உங்களுக்கு ஆபத்து நேரிடும். அவனிடம் எசமானர் மிகக் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். மாளிகைக்குள் யாரையும் அனுமதிக்காதே என்று சொல்லியிருக்கிறார். யார் வந்தாலும் வெளி வாசல் கதவுக்கருகேயே அவன் நிறுத்திவிடுகிறான். குதிரை, வீரர்கள் செஞ்சியிலிருந்து வந்திருந்தார்கள். அவர்களைக் கூட அவன் நுழைவாயிலிலேயே நிறுத்திவிட்டான். இங்கிதம் தெரியாதவன் என்று மரகதம். குரலில் கவலையும், பயமும் கலந்து நிற்கக் கூறினாள்.

ராஜ் சிரித்தான். "பீம் குமாருக்கு என்னைத் தெரியாதா? அவனுடைய எசமானர் என் தோள்மேல் கையைப் போட்டுக் கொண்டு தோட்டத்தில் உலவும்

போது பல தடவை என்னைப் பார்த்திருக்கிறான். காவல்காரர்களுக்கு யார் நண்பர்கள், யார் துரோகிகள் என்பது தெரியாதா?" என்று சொல்லிவிட்டு மரகதத்தைக் கூர்ந்து நோக்கினான். அவளுடைய இதயத்தைக் குத்துவது போல் சொல்லிவிட்டதாக அவன் நினைவு.

மரகதம் புரிந்தும் புரியாததுபோல், முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் புலப்படுத்திக் கொள்ளாமல், "தங்களை அவனுக்குத் தெரிந்திருக்கலாம். நேர்வழியாக வரும்போது அவன் மிகுந்த மரியாதை செலுத்துவான். முகத்தில் மகிழச்சியை வரவழைத்துக் கொள்வான். ஆனால் இங்கே இந்த நேரத்தில் நீங்கள் எப்படி வந்தீர்கள் என்று ஒரு கணம் யோசிப்பான். பிறகு அவன் வேண்டியவர், வேண்டாதவர்கள் என்று பார்க்க மாட்டான். அவனை விட அந்தக் 'கரும்புலி' - ஐயோ அதை நினைக்கும்போதே என் குலை நடுங்குகிறது..."

ராஜ் இருக்கையிலிருந்து சீற்றமுடன் எழுந்தான். "நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குத் தெரிகிறது மரகதம். இந்த மாளிகைக்கு வந்த ஆறு மாதங்களில் நீ ரொம்பவும் மாறிவிட்டாய். சரி நான் வருகிறேன்..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

மரகதம் பரபரத்தாள். "ராஜ், ராஜ் நான் கூறியதை நீங்கள் தவறாக எடுத்துக்கொண்டு விட்டீர்கள். நான் முன்பு எப்போதையும் போல் தான் இருக்கிறேன். நீங்கள் ரகசியமாக வந்ததைப் பற்றித்தான் கவலையுடன் பேசினேன். சற்று இருங்கள், ஏதாவது சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும்" என்று கூறி, முகத்தில் மகிழ்ச்சியைப் பலவந்தமாக வரவழைத்துக்கொண்டு, கையொலி எழுப்பினாள்.



"யாரங்கே?" என்று குரல் கொடுத்தாள். பிறகு உட்புறம் எழுந்து சென்றாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம், பளபளவென்று மின்னும் தட்டொன்றில் வெள்ளிச் செம்புடன் பணிப்பெண் ஒருத்தி வந்து எதிரே இருந்த விசித்திர வேலைப்பாடமைந்த தேக்குமர முக்காலியில் அதை வைத்துவிட்டுச் சென்றாள். செம்பிலிருந்து மெல்லிய புகைபோல் ஆவி பறந்து கொண்டிருந்தது. குங்குமப்பூ, பச்சைக் கற்பூர மணம் மூக்கைத் துளைத்தது.

"இருந்து உணவருந்திச் செல்லுங்கள் என்று நான் உபசாரம் செய்யலாம். சமையற்காரர் இரு தினங்களாக வரவல்லை. ஏதோ, எளிமையாக நானே பகலில் செய்ததை வைத்து இரவு தள்ளி விடுகிறேன். அந்தப் பகல் உணவைத் தங்களுக்கு அளிப்பது சரியா?" என்று கூறிக் கலகலவென்று சிரித்தாள் மரகதம்.

"அப்பாடா... மரகதம், உன்னைச் சாதாரணப் பெண் என்று நினைத்து இருந்தேன். வேங்கடநாதனுக்கு எல்லாவிதத்திலும் உதவ நீ கிடைத்ததற்கு அவன் எனக்கு நன்றி கூற வேண்டும்" என்று அவளையே உற்று விழுங்கி விடுபவன் போல் நோக்கினான்.

மரகதம் தலையை அசைத்துக்கொண்டு மெல்லச் சிரித்து, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் தாங்களிட்ட பிச்சை. உங்கள் உப்பைத் தின்று வளர்ந்த இந்த உடலில், தங்கள் நற்பெயரைக் காப்பாற்றும் உணர்ச்சி சிறிதாவது இல்லாவிட்டால்..." என்று கூறியவள், "உம்... ஆறிப்போய் விடப்போகிறது. சாப்பிடுங்கள்" என்றாள்.

செம்பிலிருந்த பாலைக் கோப்பையில் ஊற்றினாள். ராஜவல்லபன் மரகதத்தைப் பார்த்துக் கொண்டே பால் பாத்திரத்தை வாங்கிக் கொண்டான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? பார்வையில் கனிவு இல்லையே..." என்றாள் மரகதம்.

"எப்படி இருக்கும்? வார்த்தை ஜாலங்கள், உபசரணைப் பூச்செண்டு என்று, என்னை மயக்கி, வந்த காரியத்தை மறந்து, சென்று விடுமாறு சொல்ல நினைப்பது முகத்தில் தெரிகிறதா என்று பார்க்கிறேன்..." பாலை மெல்ல உறிஞ்சியவாறு பேசினான் ராஜ்.

மரகதம் திடுக்கிட்டாள்.

"ஆமாம்; நீ எனக்குப் பழைய மரகதமாகத் தோன்றவில்லை. மாறிவிட்டாய். வாக்குக் கொடுத்ததை மறந்துவிட்டாய். ஏதோ ஒரு சதி செய்கிறாய். அந்தக் கபட எண்ணம் முகத்தில் தெரிகிறதா என்றுதான் நான் பார்த்தேன்..." என்று கூறிவிட்டு, பாலை உறிஞ்சியவாறு அவளை மீண்டும் நோக்கினான்.

"ஐயோ, ராஜ் நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள். நான் தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை எப்படி மறப்பேன்? தங்களை ஏமாற்றிவிட்டு, தங்களுக்கு விரோதமாகச் சதி செய்வதற்காகவா இந்த உயிரை இவ்வளவு நாள் வைத்துக் கொண்டிருக்கிறேன்... அப்படிச் சொல்லாதீர்கள் ராஜ். சமய சந்தர்ப்பத்தைப் பார்க்க வேண்டாமா? உங்களுடைய அருமை நண்பரான வேங்கடநாதனைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? மிகக் கண்டிப்பும், முன் கோபமும் கொண்ட அவரிடம் நற்பெயர் வாங்குவது அவ்வளவு எளிதில்லை என்று தங்களுக்குத் தெரியாதா? தக்க தருணத்தை எதிர்பார்த்திருக்கிறேன் ராஜ்..." என்று கூறும்போது அவளுடைய குரல் தழுதழுத்தது.

வெளியே கரும்புலி குரைக்கும் சப்தம் கேட்டது. மாளிகையின் அந்த நடுக் கூடத்திற்கும், வெறிப்புற நுழைவாயிலுக்கும் சற்றுத் தொலைவுதான் அங்கே



குறைப்பது மெல்லியதாக எங்கிருந்தோ ஒலி வருவது போல் கேட்டது.

"ராஜ், ராஜ், சீக்கிரம் புறப்படுங்கள். கரும்புலி மோப்பத்தால் ஏதாவது உணர்ந்தால்தான் இப்படிக் குரைக்கும் காவல்காரனும் நாயுடன் இங்கே வரலாம். தயவுசெய்து... தயவுசெய்து..." என்று மரகதம் பரபரப்புடன் கூறும்போது அவள் விம்மினாள்.

ராஜவல்லபன் எழுந்து நின்றான்.

"சரி, நான் வருகிறேன். இப்படிப் பயப்படும் நீ பணிப்பெண்ணை அழைத்து எனக்குப் பருகப் பால் தருமாறு சொன்னாய். அவள் அருகே இருப்பது தெரிந்தும் என்னுடன் பேசினாய்... இதில் ஆபத்து இல்லையா? பணிப்பெண் காவல்காரனிடம் சொல்லமாட்டாளா?" என்று ராஜ் கேட்டான்.

"அவள் செவிட்டூமை" என்று மட்டும் பதில் சொன்ன மரகதத்திடம் பரபரப்பு மிகுந்திருந்தது. 'நீங்கள் எப்படி வெளியே போவீர்கள்?' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

"வந்த வழியில் செல்வேன். மரகதம், என்னை வெளியேற்றுவதில் இன்று நீ வென்று விட்டதாக நினைக்கலாம். ஆனால் என் குணம் உனக்குத் தெரியாததன்று. நான் மீண்டும் அடுத்த அமாவாசை அன்று வருவேன். அன்று அந்த இரத்தினஹாரம் எப்படியும் என் கைக்கு வந்தாக வேண்டும். இன்று நடத்தைப் போல் பருகப் பால் கொடுத்துதக் கனிவான வார்த்தை கூறி பயத்தையும் காட்டி என்னைத் தட்டிக் கழித்து விட முயன்றாயானால் நான் மிகப் பொல்லாதவனாக இருப்பேன்" என்று கூறி மாடிப்படிக் கட்டுகளில் ஏறச் சென்றவன் மீண்டும் திரும்பி, "மரகதம், நினைவில் வைத்துக் கொள். வாக்குத் தவறினால் இந்த

உலகத்தை விட்டே உன்னை ஒழித்து விடுவேன். ஜாக்கிரதை" என்று சற்றுக் கடுமையாகக் கூறி படிக்கட்டுகளில் தாவி ஏறி வந்தது போலவே இருளில் மறைந்தான்.

மரகதவல்லி திக்பிரமை பிடித்தவள் போல் நின்றாள். பிள்ளையார் மாடத்து விளக்கு எண்ணெய்க்காக ஏங்கியது.

பீம்குமார் உள்ளே சென்று கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து கம்பீரமாக அந்த கரும்புலிக் என்ற நாயும் வந்து கொண்டிருந்தது.

மாடிப் படிக்கட்டுகளையும், அதன் பின்னணியில் அடர்ந்த இருளையும் ஒருமுறை திரும்பிப் பார்த்து பார்ளைப் பிடித்துக் கொண்டு அப்பாடா என்று பெருமூச்சு விட்டாள் மரகதவல்லி.

## 2

**பா**லாற்றங்கரையை ஒட்டி அமைந்திருந்த அந்தமாளிகை வேங்கடநாதனுடைய தந்தை அச்சுதநாதனால் கட்டப்பட்டது. மாமரங்களும், தென்னை மரங்களும் வளர்ந்திருந்த தோப்பின் நடுவே அந்த மாளிகை வெண்ணிறத்துடன் கம்பீரமாகக் காட்சியளித்தது. ஒரு காலத்தில் அச்சுதநாதனுடைய உறவினர்கள் பலர் வசித்து வந்ததால் எப்போதும் கலகலப்புடன் விளங்கும், பணியாட்களுக்கும் குறைவில்லை. மாளிகை மேல்மாடத்தில் அந்தப்புரத்தில் பெண்டிர்களும், பணிப்பெண்களும் நிறைந்திருந் தார்கள். மடைப்பள்ளியில் எப்போதும் அடுப்பு எரிந்து கொண்டிருக்கும். அதன் புகை சுருளாக மேகம்போல் வெளியே பரவும்.



சதுரங்கப் பட்டணத்துக்குச் செல்லும் சாலையின் மிக அருகே அந்த மாளிகை இருந்ததால் வணிகர்கள் அந்தப் பக்கம் செல்லும்போது அங்கே வந்து சிறிது தங்கிவிட்டுச் செல்வர். அச்சுதநாதர் விஜயநகரப் பேரரசரின் நெருங்கிய உறவினர். செல்வந்தர். வணிகர் களுக்கு அவ்வப்போது கடன் கொடுத்து வட்டி பெற்று செல்வத்தைப் பன்மடங்கு பெருக்கியவர்.

அச்சுதநாதரின் ஒரே மகன் வேங்கடநாதன். சிறுவயதிலிருந்தே தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், உருது மொழிகளில் புலமை பெற்றதால் செஞ்சி அரசர் கிருஷ்ணப்ப நாயக்கரின் அபிமானத்தைப் பெற்று விட்டான். செஞ்சிமாளிகையின் பொருளாதார விஷயங் களைச் சீர்திருத்தம் செய்வதிலும், பொக்கிஷ வரவு செலவுகளை மேற்பார்வையிடுவதிலும் மன்னருக்குப் பெரிதும் உதவும் பொறுப்பு இளம் வயதிலேயே அவனுக்குக் கிடைத்தது. அதனால் மாதத்தில் பாதி நாட்கள் செஞ்சியிலேயே தங்கும் நிலை ஏற்பட்டது. கிருஷ்ணப்ப நாயக்கரின் மதிப்பை மிகுந்து பெற்றதால் அவனுக்குப் பல கிராமங்கள் கிடைத்தன. சிறுவயதி லேயே அடைந்த ராஜ வெகுமதியை அச்சுதப்பன் கண்டு, தனக்குப் பிறகு மகன் மேலும் செல்வத்தைப் பெருக்கி விடுவான் என்ற பெருமையுடனிருந்தார். மகனுக்கு வேலூரில் தங்கி விஜயநகர சாம்ராஜ்யத்தை ஆளும் அரசரது குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை மணம் புரிவிக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்.

வேங்கடநாதன் அந்த சம்பந்தத்திற்குச் சம்மதிக்க வில்லை. அவனுடைய நோக்கமெல்லாம் பொருளை மேலும் மேலும் எப்படி ஈட்டுவது என்பதிலேயே இருந்தது. அச்சுதநாதன் தன் முதுமை நிலையை உணர்ந்தார். தான் கண் மூடுவதற்குள் மகனுக்கு

எப்படியும் மணம் புரிவித்து விட விரும்பினான். வேங்கடநாதன் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

வேங்கடநாதனுடன் நெருங்கிப் பழகக்கூடியவன் ராஜ வல்லப பூபதி ஒருவன் தான். முன்கோபமும், எடுத்து எறிந்துவிடுவது போல் பேசும் குணமுடைய வேங்கடநாதனுக்கு பூபதி உற்ற நண்பனாக அமைந் திருப்பதில் அச்சுதநாதனுக்கு உள்ளூர மகிழ்ச்சியே. ஆனால் அதை வெளிக்குப் புலப்படுத்திக்கொள்வ தில்லை. பூபதியிடம் எப்போதாவது ஓரிரு வார்த்தைகள் பேசுவார். மற்ற நேரத்தில் வியாபாரிகளுடன் பண விஷயமாகப் பேசிக் கொண்டிருப்பதே அவருக்குப் பொழுது சரியாக இருக்கும். அப்படியிருப்பவர் ஒரு நாள் பூபதியை அழைத்துச் பேசலானார். அவனுடைய பாட்டனாரும், அச்சுதநாதனுடைய தந்தையும் நெருக்கிய உறவினர்கள் என்ற உண்மையையும் ஒருநாள் சொன்னார்.

பூபதியின் தந்தை காஞ்சிமாநகரத்தில் பொன் ஆபரணங்கள் தயாரித்து விற்று வந்தார். அது தவிர அயல்நாட்டிலிருந்து பண்டங்களை மொத்தமாக வாங்கி விற்று வந்தார். துறைமுகத்திலிருந்து வரும் பண்டங் களை வண்டியில் ஏற்றி வரும்போது எப்போதாவது அச்சுதநாதனுடைய மாளிகைக்கு விஜயம் செய்வார். பிறகு ஏனோ அவர் வருவதை நிறுத்திவிட்டார். அவரது காலமும் கழிந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு வேங்கடநாதனும், ராஜ வல்லப பூபதியும் காஞ்சி புரத்தில் நெருங்கிய நட்பினரானார்கள். செஞ்சி மன்னருக்குச் சில வைர நகைகளை வாங்குவதற்குக் காஞ்சிபுரம் வந்தான் வேங்கடநாதன். பூபதியின் தோற்றமும் பேச்சும் அவனைக் கவர்ந்தன. முதலில் இருவரும் உறவினர்கள் என்று அறிந்து கொள்ளமுடிய வில்லை. தன்னைப் போன்ற வணிகநோக்கு மிக்க பூபதியை வேங்கடநாதனுக்கு மிகவும் பிடித்துவிட்டது.



உத்திரமேரூர் வட்டாரத்தில் வரிவசூல் செய்யும் அதிகாரியாக அவனை நியமிக்க செஞ்சி மன்னரிடம் சொல்வதாக வேங்கடநாதன் கூறினான். பூபதி மறுத்து விட்டான். "ஒருவரிடம் நான் கைகட்டி சேவகம் செய்ய விரும்பவில்லை" என்றான்.

வேங்கடநாதன் புன்முறுவல் பூத்தான். "அப்படி யானால் நான் கைகட்டிச் சேவகம் செய்வதாகக் கூறுகிறாயா?" என்று கேட்டான். உதட்டில் புன்னகை நெளிந்ததே தவிர உள்ளத்தில் சீற்றம் பொங்கியது. பூபதி என்ன பதில் சொல்கிறான் என்பதைக் கொண்டு, பலமாகப் பதிலடி சொல்மூலம் கொடுக்க வேண்டும் என்று மனத்துள் முடிவு செய்து கொண்டான்.

"உன்னுடன் என்னை ஒப்பிட முடியுமா? நீ தான் செஞ்சி மன்னர். செஞ்சி மன்னர்தான் நீ. அப்படி யிருக்கும் போது கைகட்டி உத்தியோகம் செய்பவன் என்று உன்னை எப்படிக் கூறமுடியும். நாளைக்கே நீ செஞ்சி இளவரசராக ஆகிவிடலாம்!' என்று கூறிக் கண்களைச் சிமிட்டினான்.

செஞ்சி மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு ஆண் வாரிசு இல்லை. ஒரே மகள் தான். தக்க மாப்பிள்ளையை மன்னர் தேடிக் கொண்டிருந்தார். பரவலாக வேங்கடநாதனைச் சம்பந்தப்படுத்தி வெளியே பேசிக் கொள்வார்கள். கிருஷ்ணப்ப நாயக்கர் தன் மகளை வேங்கடநாதனுக்குத் தான் மணம் புரிந்து கொடுக்கப் போகிறார் என்று பேசப்படுவதை பூபதியும் அறிந்திருந்தான்.

வேங்கடவன் தந்தை அச்சுதனோ வேலூர் சம்பந்தத்தை விரும்பினார். அவருடைய மனக் கோட்டை வேறு உருவில் எழுந்து கொண்டிருந்தது. வேலூரை ஆட்சிபுரிந்த அரசர் இரண்டாம் வேங்கடவ னின் சகோதரியை மணம்புரிந்து கொண்டால், அடுத்துத்

தன் மகனே விஜயநகர சாம்ராஜ்ய மன்னராகலாம் என்று கனவு கண்டார். ஆனால் மகன் வேங்கடநாதனோ திருமணப் பேச்சிற்கே பிடிகொடுப்பது இல்லை.

செஞ்சி மன்னரின் மகளைத் தான் மணம் புரிந்து கொள்ளப் போவதாக வதந்தி நிலவுவது பற்றி வேங்கடநாதனுக்கே தெரியும். அதைத்தான் பூபதி மறைமுகமாகக் குறிப்பிடுகிறான் என்றுணர்ந்த வேங்கடவன் தன் உள்ளத்திலிருந்து சீற்றத்தைக் கணத்தில் மாற்றிக் கொண்டு, "பூபதி, அமைதியான உள்ளத்துடன் நான் காலத்தைத் தள்ளுவது உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டான்.

"காலத்தைத் தள்ளுவதா? வேங்கடநாதா, என்ன வயது முதிர்ந்தவன் போல் பேசுகிறாய்? காலம் உனக்குக் கைகட்டிச் சேவகம் செய்கிறதே" என்று கேட்டான் பூபதி.

"என் மனத்தில் இருப்பது ஒருவருக்கும் தெரியாது" என்று பெருமூச்சுவிட்டுக் கொண்டான் வேங்கடநாதன்.

"நீ யாருடன் மனம் விட்டுப் பழகுகிறாய்? உன்னைக் கண்டாலே பயந்து ஒதுங்குகிறார்கள். உன் அதிகாரம் ஒருபுறமிருக்கட்டும், சுமுகமாகவே உனக்குப் பேசத் தெரியாது என்று சொல்லுகிறார்கள்" என்றான் பூபதி.

"அப்படியா?" என்று மெல்லச் சிரித்த வேங்கடவன், "பூபதி, உன்னிடம் நான் எப்படிப் பழகுகிறேன்?" என்று கேட்டான்.

"என்னிடம் பழகுவது வேறு. நான் உனது உறவினன். அத்துடன் ஏதோ ஆண்டவன் அருளால் உன்னுடன் சமதையாகப் பழகக் கூடிய செல்வத்தையும் கொடுத்திருக்கிறான்" என்று கூறி பூபதி, வேங்கட நாதனின் முகத்தை உற்று நோக்கினான்.



"சமதையான செல்வத்தையா! இரண்டுமில்லை பூபதி! உறவினன் என்பது நமது தந்தையார் தலைமுறையுடன் சரி. நான் உறவினர்களை மதிப்பதில்லை. என் மாளிகையில் பல ஆண்டுகளாகத் தண்டச்சோறு சாப்பிட்டுத் தேர்த் திருவிழாபோல் கூட்டம் கூடிக் கொண்டிருக்கும் உறவினர்கள் என்று கூறிக் கொள்பவர்களை மாளிகையிலிருந்து ஓட்டும் நாளை எதிர்பார்க்கிறேன்..." என்று கூறினான் வேங்கடநாதன்.

அவனுடைய உள்ளக் குமுறலை மேலும் வெளிப்படுத்த விரும்பிய பூபதி, "ஏனப்பா உறவினர்கள் மீது அவ்வளவு வெறுப்பு. உன் தந்தை புண்ணியம் பெறுவதற்காக அவர்களை ஆதரிக்கிறார். அன்னதான பலன் ஒரு தலைமுறைக்கு உதவும் என்பது உனக்குத் தெரியாதா?" என்றான்.

"புண்ணியமா?" வேங்கடநாதன் சீறினான். "அப்படிப்பட்ட புண்ணியம் வராவிட்டால் போகிறது. ஒரு வேலையும் செய்யாமல் சோம்பலை வளர்ப்பவர்களுக்குச் சோறு போட்டால் பாவம் தான் மிஞ்சும். ஏழை எளியவர்களிடம் வரி வசூலித்து மன்னரின் கஜானாவை நிரப்பிய எனது தந்தை ஏழைகளிடம் கருணை காட்டியிருக்கலாம். வயிறெரிந்து சாபமிட்ட அவர்கள் சாபம் தொலையவா அன்னதானம்?"

"நீ சொல்வது புரியவில்லையே. உன் தந்தை தன் கடமையைத் தானே செய்தார். அரசர் இட்ட உத்தரவை நிறைவேற்றினார். அதெப்படிப் பாவமாகும்." சீண்டினான் பூபதி.

"மன்னருக்கு நாட்டு நடப்பை, மக்கள் நிலையை எடுத்துக் கூறுவது தனாதிகாரியின் கடமை." வேங்கடநாதன் அழுத்தமாகப் பேசினான்.

"பொக்கிஷம் காலியாக வேண்டியது தான்." பூபதி மெல்லக் கூறினான்.

"பொக்கிஷத்தில் செல்வத்தைக் குவித்து என்ன பயன்? போர், போர் என்று பொக்கிஷம் வீணே கொள்ளைபோகிறது. பொக்கிஷத்தில் பணமிருந்தால் தானே இப்படி வீண் செலவுக்கு எண்ணம் தோன்றுகிறது." - வேங்கடநான்.

"பொக்கிஷத்தில் பணமில்லை என்றால் மாற்றானுக்கு அடிமை ஆகவேண்டியது தான்..." என்றான் பூபதி.

வேங்கடநாதன் பூபதியை உற்றுப் பார்த்தான். "பூபதி, உணர்ந்துதான் பேசுகிறாயா? வீண் விவாதம் செய்கிறாயா? என் தந்தை சேர்த்து வைத்திருக்கும் செல்வத்தைக் கண்டாலே எனக்கு வெறுப்பு. வியாபாரிகளிடம் அதிக வட்டி வாங்கி அவர்களை மூழ்கடிக்கும் என் தந்தையின் குணம் எனக்குப் பிடிக்கவில்லை. மாளிகைப் பொக்கிஷ அறையைப் பார்த்தாலே ஏதோ நாக சர்ப்பம் அங்கே நெளிவது போன்று தோன்றுகிறது. எத்தனை ஆபரணங்கள்; எத்தனை வைர வைடூரியங்கள்! இவை அனைத்தையும் வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறார் அவர்..." என்று மனவேதனையைச் சொற்களால் வெளியிட்டான்.

பூபதி விடவில்லை. "இவ்வளவு செல்வக் குவியல்களைக் கொண்டிருப்பதால் தான் வேலூர் மன்னர் கூடத் தங்களுக்கு அதிக மரியாதை கொடுக்கிறார். அவருக்குக் கொடுக்கிறார். அவருக்குக் கூட உன் தந்தை கடன் கொடுத்திருப்பதாகக் கேள்வி."

"வேலூர் மன்னருக்குக் கொடுக்கவில்லை, அவருடைய சகோதரியின் கணவர் மைசூரில் இருக்கிறார். கன்னட மண்டலத்தை அரசு புரியும்



அவருக்குப் பண நெருக்கடி. எதற்காக இந்தப் பண கொடுக்கல் - வாங்கல்? அவரது மகளை எனக்கு மணம் புரிவிக்கவே. இதற்கெல்லாம் நான் சம்மதிப்பேனா?"

"வேலூர் சம்பந்தமும் வேண்டாம். கிருஷ்ணப்ப நாயக்கர் மகளும் வேண்டாம். பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? கல்யாணம் செய்துகொள்ளாமல் பிரம்மசாரியாகக் காலங் கழிக்க உத்தேசமா? இவ்வளவு பெரிய ஆஸ்திக்கு - நீயே சொன்னாயே, நாகம் காக்கும் பொக்கிஷத்திற்கு வாரிசு வேண்டாமா?" - பூபதி மீண்டும் அவன் வாயைக் கிளறினான்.

வேங்கடநாதன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பிறகு, "பூபதி, நான் ஒன்றும் சந்நியாசி அல்லன். எனக்கும் அன்பு, ஆசை எல்லாம் உண்டு. ஆனால் எனக்கு ஏனோ ராஜ குடும்பச் சூழ்நிலையையும் தொடர்பையும் கண்டாலே பிடிக்கவில்லை" என்றான்.

"அப்படியானால் சாதாரணக் குடும்பத்தில் பெண் பார்க்கட்டுமா?" என்றான் பூபதி.

"எனக்குப் பெண் பார்ப்பது இருக்கட்டும், உன் கல்யாணம் எப்போது? உனக்குப் பெண் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தபிறகு தான் என் கல்யாணத்தைப் பற்றிய பேச்சு" என்றான் வேங்கடநாதன்.

'என்னுடன் போட்டி போடாதே வேங்கடநாதா. நான் இப்பொழுது தான் வீழ்ந்து எழுந்திருக்க முயல்கிறேன். நவரத்தினங்கள் விற்கும் அணிகலன் அங்காடியை மேலும் சீரமைக்க வேண்டும். என் தந்தை பட்ட கடனைத் தீர்க்க வேண்டும். பிறகு தான் கல்யாணத்தைப் பற்றிய பேச்சு...' என்று சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு நெஞ்சு வரை வர, அதைச் சொல்லிவிட்டாலோ அந்தஸ்து குறைந்துவிடும் என்ற

எண்ணம் எழவே அப்படிக் கூறாமல், என் வியாபாரத்தை மேலும் விரிவாக்கிய பிறகு தான் கல்யாணம்" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டான்.

வேங்கடவன் மௌனமாகிவிட்டான். அவன் சிந்தனை எங்கோ படர்ந்தது. காஞ்சிபுரத்தில் பூபதி நடத்தும் ஆபரண நிலையத்திற்குச் சென்றிருக்கிறான். அங்கே நங்கையர் பலர் ஆபரணங்களை எடுத்துப் பார்த்து விலைபேசும் நளினத்தைக் கண்டிருக்கிறான். அந்த அழகு நங்கையருள் ஒருத்தியை ஒரு வேளை மணம் புரிந்துகொள்ள பூபதி திட்டமிட்டிருக்கலாம். அதை வெளியே சொலல விரும்பாதிருக்கலாம். அதைப்பற்றி இப்போது நமக்கென்ன என்று பேச்சை வேறு பக்கம் திருப்ப விரும்பினான்.

பூபதி விடவில்லை. "வேங்கடநாதா, நான் வேண்டுமானால் உனக்கு எளிய குடும்பத்து மங்கை நல்லாள் ஒருத்தியை, அழகான பெண் ஒருத்தியை மணம் பேசட்டமா?" என்றான்.

'ஹும்' என்று பெருமூச்சு விட்டான் வேங்கட நாதன். "என் தந்தை இருக்கும் வரை அந்தஸ்துக்குக் குறைவான இடத்தைப் பற்றி நினைக்கவே மாட்டார்" என்றான். அந்தச் சொற்களின் ஆழத்தில் எவ்வளவோ அர்த்தம் புதைந்திருந்தது.

எந்த நேரத்தில் வேங்கடவன் அவ்வாறு சொன்னானோ அச்சுதநாதன் மறுவாரம் திடீரென்று மாரடைப்பினால் காலமானார். அவர் தன் மகனிடம் கடைசி வார்த்தை கூட ஏதும் சொல்லவில்லை. அவர் கஷ்டப்பட்டுச் சேர்த்த ஆஸ்தி அவருடன் வரவில்லை.

## 3

**பா**லாற்றில் பெருவெள்ளம் வந்தது. வேங்கடநாதனுடைய மாளிகையைச் சுற்றிச் சூழ்ந்தது. தோப்பெல்லாம் வெள்ளம். மாளிகையின் தாழ்வான பகுதி முழுவதிலும் தண்ணீர் சூழ்ந்தது. உறவினர்கள் கூப்பாடு போட்டுக்கொண்டு மேல் மாடத்தில் ஏறி அடைக்கலம் புகுந்தனர். வேங்கடவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"வெள்ளம் வடிந்தவுடன் அவரவர்கள் தத்தம் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப் போய்விடுங்கள்" என்று கண்டிப்பாக உத்தரவிட்டான். சமையல் செய்வதற்கு ஒருவரையும், பணிப்பெண் ஒருத்தியையும் மட்டும் நிறுத்திக்கொண்டு மற்றவர்களை வெளியேறச் சொல்லி மீண்டும் மீண்டும் கண்டிப்பாகப் பேசினான்.

வெள்ளம் வடிந்தவுடன் மாளிகை 'ஹோ' என்று காட்சியளித்தது. மாட்டுக் கொட்டிலில் ஓரிரு பசுக்கள் இருந்தன. குதிரை லாயத்தில் காலஞ் சென்ற அச்சுதநாதன் ஏறிச்செல்லும் குதிரையும், குதிரைகள் இரண்டு இழுத்துச் செல்லும் ரதம் போன்ற வண்டியொன்றும், வேங்கடநாதன் ஏறும் பரியொன்று மிருந்தது. வெள்ளத்தால் மாளிகை பழுதுபட்டிருந்தது. சுற்று மதிளின் ஓரிரண்டு இடங்கள் சரிந்துவிட்டன.

மிகவும் நம்பிக்கைக்குரிய காவல்காரன் பீம்குமார் மட்டும் இருப்புக் கொள்ளாமல் மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தான். மாளிகையிலுள்ள உறவினர்களை யெல்லாம் வெளியேற்றி அதிக வேலைக்காரர்களை குறைத்துவிட்ட எசமானர் தன்னையும் நீக்கிவிடுவாரோ என்ற கவலை அவனுக்கு உள்ளூர இருந்தது. ஆனால் வேங்கடநாதன் அவனை ஒருநாள் காலையில்

அழைத்து, "பீம், உனக்கு இந்த மாதத்திலிருந்து கூடுதலாக இரண்டு வராகன் சம்பளம் கொடுக்கப் போகிறேன். அத்துடன் உன் பொறுப்பு மிக அதிகமாகப் போகிறது" என்று கூறி அவனை உற்று நோக்கினான்.

கையிலுள்ள உடைவாளை மார்புக்கு நேரே நிறுத்தி மார்பை நிமிர்த்திக் கம்பீரமாக நின்ற பீம்குமார் மும்முறை தலையைத் தாழ்த்தி வணங்கினான்.

"எசமான், எந்தவிதமான கட்டளையையும் இடுங்கள். தலையால் செய்கிறேன்" என்ற கூறும்போது அவன் விழிகள் பளிச்சிட்டன.

"மாளிகையை முன் எப்போதையும் விட மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்..."

"அச்சா..."

"ஒருவரையும் அனுமதியின்றி உள்ளே விடக் கூடாது."

"சரி..."

"எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டும்."

"உத்தரவு!"

"வேண்டாதவர்களின் கும்பல் திடீரென மாளிகைக்குள் நுழைய முற்படலாம்."

"தூள்... தூள்... உடல் இரண்டாகித் துடித்து விழுவார்கள்."

"உன் ஒருவனால் முடியுமா... எதற்கும் ஆறு பேர் அடங்கிய வீரர்கள் குழுவை உன் உதவிக்கும் பாதுகாப்புக்கும் வைத்துக் கொள். நாள் முழுவதும் அவர்கள் வேலையின்றி வீணே இருக்க வேண்டாம். ஒருவன் தோட்டத்தைப் பார்த்துக் கொள்ளட்டும். ஒருவன் ஏற்றம் இறைக்கட்டும். மாடுகளைப் பார்த்துக் கொள்ள, விறகு வெட்ட, வெளியே போய் பண்டம்



பொருள்களை வாங்கிவர என்று வேலைகளைப் பிரித்துக் கொடு; என்ன?"

எசமானரின் சாமர்த்தியத்தை பீம், உள்ளூர மெச்சிக் கொண்டான். சரி என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து வணங்கினான். பிறகு, மார்பை நிமிர்த்தி நின்று கொண்டிருந்தான்.

"வேலூர் ராஜாங்கத்தில் கவலை தரும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. நாம் இப்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம்பிக்கை மிகுந்தவர்களே நம மாளிகையில் இருக்க வேண்டும்" என்றான் வேங்கடநாதன்.

பீம் தலையை அசைத்தான். பிறகு மெல்ல அவன் சொன்னான்: "எசமான் அவர்களே! நம்பிக்கைக் குறைந்தவர்கள் இருந்தால் ஒரு கணத்தில் அவர்கள் கண்களிலிருந்தே கண்டுபிடித்து விடுவேன்" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது வேங்கடநாதன் குறுக்கிட்டு, "பீம், மனிதர்களைவிட மிருகங்கள் நன்றியுடையவை. நான் உனக்கு ஒரு நல்ல துணைவனை இன்னும் சில நாட்களில் கொண்டு தருகிறேன்" என்று கூறினான்.

அதேபோல் வேங்கடநாதன் வெளியூர் சென்றிருந் தான். செஞ்சி மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கரிடமிருந்து செய்தி எடுத்துக்கொண்டு தஞ்சை நாயக்கரிடமும், மதுரை நாயக்கரிடமும் சென்றான். திரும்பி வரும்போது தான் உயர்ந்த இன நாயுடன் வந்தான். அந்த நாய் தான் கரும்புலி என்ற பெயர் கொண்டது. பீம் அருகேயே வளர்ந்த அந்தநாய் வேங்கடவனிடம் எசமான விசுவாசத்துடன் பழகும் சிறந்த மோப்ப சக்தியுடையது. சீற்றத்துடன் அது பாய்ந்து தொடையையோ, கால் சதையையோ கௌவினால் குத்துச் சதையைப் பிய்த்த பிறகுதான் விடும்.

பீமும், கரும்புலியும் தோட்டத்தைச் சுற்றி வருவார்கள். பீமின் உதவியாக அந்த மாளிகையில் பணியாற்றுபவர்களுக்குக் கூடக் கரும்புலியிடம் அச்சம்தான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு பூபதி வேங்கட நாதனைக் காணவந்தான். மாளிகை புதுச் சோபையுடன் விளங்கியது. புதிய சுண்ணம் பூசப்பட்டிருந்தது. செடிகள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. வெளி வாயிலிலேயே அவன் தடுத்து நிறுத்தப்பட்டான். இன்னார் வந்திருக்கிறார் என்று வேங்கடவனிடம் செய்தியனுப்பிய பிறகு, வேங்கடவனே வெளி வாயிலுக்கு விரைந்து வந்துவிட்டான்.

பீம் எல்லோரையும் நிறுத்திவிடாதே. பூபதி என் சகோதரன். அவன் எப்போது வேண்டுமானாலும் வரலாம்; போகலாம் என்று கூறி, பூபதியின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு, மாளிகைக்குள் அழைத்துச் சென்றான். வெளி வாசலிலிருந்து மாளிகைக்குச் செல்லும் இரு வழியிலும் மரங்கள் நடப்பட்டிருந்தன. அவை வளர்ந்து பெரிய மரங்களான பிறகு நிழல்தரும்; அவற்றில் பூவும், பிஞ்சும், காயும், பழமுமாகக் குலுங்கும்.

"இந்தச் செடிகள் மரங்களாகிவிடும். அவற்றின் நிழலில் நாம் நடக்குங் காலமும் வரும் இல்லையா?" என்றான் பூபதி.

"ஓ! வருங்காலத்தை நம்பித்தான் நாம் இப்போது செயலாற்றுகிறோம்" என்று கூறிய வேங்கடநாதன் மாளிகையைச் சுற்றிக் காட்டினான்.

பொக்கிஷ அறை இருக்குமிடத்தைப் பார்த்த பிறகு பூபதியின் உள்ளத்தின் ஒரு மாறுதல் ஏற்பட்டது. இவ்வளவு செல்வத்தையும் வைத்துக் கொண்டு



வேங்கடவன் என்ன செய்யப் போகிறான்? 'வருங் காலத்தை நம்பித்தான் நாம் இப்போது செயலாற்று கிறோம்' என்று பொன்மொழி வேறு கூறுகிறானே என்று எண்ணிய பூபதி வேங்கடவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"வேங்கடவா, இவ்வளவு செல்வங்களும், மாளிகை யும், தோப்பும் வயல்களும் உன் தந்தை சேர்த்தவை தானே?" என்று பூபதி கேட்டான்.

"ஆமாம்; உனக்குத் தெரியுமே; இதிலென்ன சந்தேகம்?" என்றான் வேங்கடநாதன்.

"அவரும் வருங்காலத்தை நம்பித்தானே இவ்வளவையும் சேர்த்து வைத்திருக்கிறார்..."

"ஆமாம்..."

"எதை எண்ணி அவர் சேர்த்திருப்பார்?"

பூபதி இவ்வாறு கேட்டவுடன் வேங்கடநாதன், திகைப்புடன் பூபதியை நோக்கினான். உடனே மறு மொழி கூறவில்லை.

"நீயே தான் சொல்லு; எதற்காக இருக்கும்?" என்று பூபதியைத் திருப்பிக் கேட்டான்.

"மற்றவர்கள் அனுபவிப்பதற்கு" என்று கூறிய பூபதி, "உற்றார் உறவினர்களைக் கூட்டமாக மாளிகை யில் தங்க வைத்துச் சோறு போட்டு, அவர்களை வளர்த்தாரே - அவர்கள் அனுபவிப்பதற்காகத்தான்!" என்றான்.

"மற்றவருக்காக நாம் சேர்ப்பானேன். பிறர் வருத்தத்தைச் சம்பாதித்து நமது பொக்கிஷத்தை வளர்த்து யாரையோ வாழ வைப்பதைவிடக் குறைவாகப் பணம் சேர்ப்பது நியாயமன்றோ?" - வேங்கடநாதன் தன் கட்சியை எடுத்துக் கூறினான்.

"உன் வரையில் நியாயமாயிருக்கலாம். நீ சேர்க்கா விடில் வேறு யாராவது அதை அடைந்துவிட்டுப்

போகிறார்கள். கண்டிப்புடன் பிறர் நோக வரி வசூலிப்பது நிற்கப்போவதில்லை. இப்போது உன்னிடம் இருக்கும் செல்வத்தை என்ன செய்யப் போகிறாய்?" - பூபதி விடவில்லை.

வேங்கடநாதன் உடனே மறுமொழி கூறவில்லை. "பூபதி சில வேளைகளில் நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இவ்வளவு செல்வத்தையும் வைத்திருப்ப தால் கவலைதான் அதிகமாகிறது. வேலைக்காரர்களை மேற்பார்வையிட வேண்டியுள்ளது. மாளிகையைப் பராமரிக்க வேண்டியுள்ளது. தினந்தோறும் உணவு தயாரிக்கப் பண்டங்கள் வாங்க வேண்டியுள்ளது. இவ்வளவையும் என் தந்தை மேற்பார்வையிட்டுச் செவ்வனே செய்து வந்துள்ளார். என்னால் முடிய வில்லை."

பூபதி கலகலவென்று சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று வேங்கடநாதன் சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

"ஆமாம்; உன் தந்தை எதையும் காரண காரியத் துடனே செய்தார். வருங்காலத்தை எதிர்பார்த்தே செய்தார். அவர் செய்தது எதையும் நீ இப்போது ஒப்புக் கொள்ளவில்லை. உனக்குத் தக்க இடத்தில் கல்யாணம் செய்து வைக்க விரும்பினார். அவர் உயிரோடிருக்கும் போதே உன் திருமணம் நடந்துவிட்டிருந்தால், இப்போது அவர் செய்திருந்த ஒவ்வொரு காரியமும் நியாயமாகவே தோன்றும். 'அதை நினைத்துத் தான் சிரித்தேன்."

"இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?"

"எவ்வளவோ அர்த்தங்கள் இருக்கின்றன. திருமணம் நடந்திருந்தால் உன் மனைவியின் வீட்டார் வந்து போக மாளிகை எப்போதும் கலகலவென் றிருக்கும். அதை நீ உணரவில்லையே என்று நினைக்கும் போது சிரிப்பு வந்தது."

"உன் வார்த்தையில் சிரிப்புக்கு அர்த்தமிருப்ப தாகத் தோன்றவில்லை. நீ ஏதோ சொல்ல நினைத்து மறைக்கிறாய்."

"நான் உன்னிடம் எதையும் மறைக்கவில்லை. மறைக்க வேண்டிய அவசியமுமில்லை. நீயே நினைத்துப் பார். பொக்கிஷ அறையில் ஏராளமான ஆபரணங்கள் இருப்பதாகச் சொல்கிறாய். அவற்றை உன் அன்பு மனைவிக்குப் பரிசாக அளிக்கலாம். பிறகு நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவள் பார்த்துக் கொள்வாள். அவளுடைய தம்பி, தங்கைகள் இந்த மாளிகையில் வளைய வருவார்கள். பண்டிகை நாடகளில் அவர்களுக்குப் பரிசு அளிப்பதன் மூலம் உனது தேங்கியிருக்கும் செல்வம் குறையும். அப்போது மேலும் செல்வம் தேவைப்படலாம். அதற்காக நீ பணம் திரட்ட முற்படுவாய். உலக வழக்கம், வாழ்க்கை என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும் வேங்கடநாதா. உனக்குத் தெரியாதவை இல்லை; தெரிந்தும் வீண் பிடிவாதங் கொண்டிருக்கிறாயே அதற்காக நான் சிரித்தேன்."

அதிகம் பேசிவிட்டதாக எண்ணி பூபதி விடை பெற்றுக் கொண்டு புறப்பட எத்தனித்தான். அப்போது புறப்பட்டால் தான் இரவு அர்த்த ஜாம பூஜைக்குள் வரதராஜர் கோயிலை அடைய முடியும்.

"என்ன அதற்குள் புறப்படுகிறாய் பூபதி" என்று கேட்ட வேங்கடவன் குரலில் வேதனையும் கலந் திருந்தது.

மேலேயிருந்து யாரோ கூப்பிடும் குரலும், பலமாக இருமும் குரலும் கேட்டது. பூபதி மேல் மாடத்தை நோக்கினான்.

"என் தாய் தான்..." என்று சொல்லிப் பூபதியைப் பார்த்தான்.

"அடடா... நான் மறந்து போய்விட்டேன் வேங்கடவா. ராஜ குடும்பத்தவர்கள் உடன்கட்டை ஏறிவிடுவார்களே. அதுபோல நேர்ந்துவிட்டதோ உன் தாயும் தெய்வமாகி விட்டாளோ என்ற நினைப்பில் உன் தாயைப் பற்றி நான் விசாரிக்கவேயில்லை..." என்று பூபதி மேலும் ஏதோ பேச வாயெடுத்தபோது, வேங்கடநாதன் பெருமூச்ச விட்டு, "பூபதி, அதைப்பற்றி யெல்லாம் உன்னிடம் பேச நினைத்தேன். நீ அதற்குள் புறப்படுகிறாயே" என்றான் ஏக்கம் குரலில் எதிரொலிக்க.

"தாயாருக்குப் பணிவிடை செய்யவே ஒருவருக்குச் சரியாக இருக்கிறது" என்றான் தொடர்ந்து.

"அதுதான் பணிப்பெண் ஒருத்தியிருக்கிறாளே... மேலும் பல வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்..." என்று பூபதி கேட்டான்,

"வேலைக்காரர்களை அந்தப்புரத்திற்கு அனுப்புவ தில்லை என்பது உனக்குத் தெரியாதா? ராஜ குடும்ப வழக்கம் பலவற்றை என் தந்தை பின்பற்றி வந்தார். ஒரு வேலைக்காரி இருக்கிறாள். அவள் ஊமைச் செவிடு. அம்மா அழைத்தால் அவளுக்கு காதில் விழாது. அவர் அருகே எப்போதும் இருக்க வேண்டும்... எங்காவது ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருப்பாள். அதுதான் பிரச்சினை. நான் இங்கே இருந்தால் எல்லாம் நடக்கும். மாளிகையிலேயே இருக்க முடிகிறதா..." என்று குறைப்பட்டுக் கொண்டான் வேங்கடநாதன்.

"நீ சொல்வது நியாயம் தான் வேங்கடநாதா. உன் தாயைக் கண்ணே போல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம். கணவனையும் இழந்து, கண்ணையும் இழந்து உடல் நோயாலும் வருந்தும் தாயின் மனநிலையச் சொல்லி முடியாது" என்ற பூபதியின் குரலில் வருத்தம் தெரிந்தது.



"அதற்குத் தான் உன்னிடம் ஓர் உதவியைக் கேட்க வேண்டும். அதைப் பற்றிப் பேச வேண்டும் என்பதற்காகவே உன்னை இருக்குமாறு சொன்னேன்" என்றான் வேங்கடநாதன்.

"ஓர் உதவியா. நீ ஓராயிரம் கேள் வேங்கடவா. உனக்கு என்னால் ஏதாவது செய்ய முடிந்தால் அதைவிட மகிழ்ச்சி வேறில்லை. என்னால் என்ன செய்ய முடியும். நீ என்ன கேட்பாய் என்பதே தெரியவில்லையே" என்று ஆவலுடன் கேட்டான்.

"பூபதி, என் தாயாருக்குப் பணிவிடைகள் செய்து அவளுடைய இறுதிக்காலம் மகிழ்ச்சியாகக் கழிய வேண்டும். இந்த மாளிகையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்க வேண்டும். வேலைக்காரர்களை வேலை வாங்க வேண்டும். இதற்கு ஓர் மிக மிக நம்பிக்கையான கல்வி அறிவில் சிறந்த பெண் தேவை..." என்று அவன் கூறும்போதே பூபதி 'ஹோ ஹோ' என்று சிரித்தான்.

"அப்போது சிரித்ததற்குக் காரணம் உண்டோ இல்லையோ... இப்போது நான் சிரிப்பதற்குக் காரண மிருக்கிறது. அழகான மனைவியை விட நம்பிக்கையான ஆள் யார் இருக்கிறார்கள். கல்யாணத்திற்கு ஓர் பெண்ணைப் பார்த்துத் தரச் சொல்கிறாய். அவ்வளவு தானே. இதை இன்றிலிருந்தே பிரயத்தனம் செய்ய ஆரம்பித்து விடுகிறேன். இதை ஓர் உதவி என்று பீடிகை போட்டிருக்க வேண்டாமே! கட்டளை இட்டிருக்கலாம் மகிழ்ச்சியுடன் செய்யக் காத்திருக்கிறேன். நான் புறப்படட்டுமா? நேரமாகிறது" என்று புறப்பட எத்தனித்தவன் தோளைப் பிடித்து உட்கார வைத்து,

"பூபதி, விளையாட இது சமயமில்லை. வேலை செய்ய வருபவள் எங்காவது மணப்பெண்ணாவாளா? மாளிகையை நிர்வகிக்க அவள் ஒருத்தியால் முடியுமா? அவள் இட்ட வேளையைச் செய்ய ஒரு வேலைக் காரியை நியமிக்க வேண்டும். அதனால் நான் கேட்பது மனைவியல்லள்; பணிப் பெண் தான். உன்னுடைய ஆபரண மாளிகைக்கு எவ்வளவோ பேர் வருவார்கள். அந்தஸ்து மிக்கவர்காள் ஆனால் பணவசதியில்லாத வர்கள்! அனாதைப் பெண்கள் ஆனால் நம்பிக்கை மிக்கவர்கள். இப்படியொருத்தியை இந்த மாளிகைக்குக் கொண்டு வந்து சேர்."

"என்னுடைய குணம் உனக்குத் தெரியும். என் ஒழுக்கம் நீ அறிவாய். பணிப் பெண்களை அந்தப்புர ஆசை நாயகிகளாக ஆக்கிக் கொள்ள மாட்டேன். மிகவும் கௌரவமாக நடத்துவேன். ஊதியம் நியாயமாக இருக்கும். உண்டி, உறைவிடம், உடை யாவும் இங்கே கிடைத்துவிடும். ஆனால் தன் வாழ்க்கையை இந்த மாளிகையிடம் அர்பணிப்பவளாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவளை உன்னால் தான் தேடித் தர முடியும்... சீக்கிரம் வேண்டும். இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்" என்று உருக்கமாக வேண்டினான் வேங்கடவன்.

பூபதி பதில் பேசவில்லை. மௌனமாக இருந்தான். அவன் மனம் வேகமாக ஏதோ சிந்தனை செய்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல், எழுந்தான். "வேங்கடநாதா, உன் மகிழ்ச்சி என் மகிழ்ச்சி. உன் மாளிகை, உன் தாயார் நன்றாக இருப்பது போல்... நான் வருகிறேன், அடுத்த தடவை வரும்போது நீ கேட்டபடி நல்ல பெண்ணுடன் தான் வருவேன்" என்றான் உற்சாகத்துடன்.



"நல்லபெண், பாணிக்கிரணம் செய்து கொள்வதற்காக அல்ல... பணிப் பெண்ணாக..." என்று வேங்கடவன் கூறிச் சிரித்தான்.

பூபதியும் 'ஹோ ஹோ' என்று பெரிதாகச் சிரித்தான். பூபதியை வெளிவாயில் வரைக் கொண்டு விட்டான் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு.

விடைபெறும்போது, "நல்ல பெண்ணாக அழைத்து வருகிறேன் எனக்கு என்ன பரிசு தருவாய்?" என்று பூபதி கேட்டான்.

"நல்ல அழகியாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைப்பேன்" என்று கூறிய வேங்கடநாதன் மனம்விட்டு 'ஹோ ஹோ' என்று சிரித்தான்.

எசமானார் அவ்வாறு சிரித்ததைப் பார்த்திராத பீம் இருவரையும் மாறிமாறிப் பார்த்தான்.

## 4

**வே**ங்கடநாதன் மாளிகையிலிருந்து காஞ்சிபுரம் போகும் சாலை வழியே குதிரை மீதமர்ந்து பூபதி சிந்தனை செய்த வண்ணம் சென்று கொண்டிருந்தான்.

அவன் மனத்தில் பெரிய திட்டம் உருவாகியது. அந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறினால், பூபதி எப்பொழுதும் போல் கௌரவமாக நடமாடலாம். இல்லாவிடில் சமூகத்தில் தலைகுனிந்து வாழ வேண்டியது தான்.

பூபதியின் தந்தை காஞ்சியில் பெரிய நகை வணிகர். அவர்களுடைய முன்னோர்கள் நவரத்தின வணிகர்கள். கடல் கடந்து சென்று வாணிபம் செய்தவர் அவன் தந்தை. பாண்டிய நாட்டிலுள்ள முத்து வியாபாரிகளின் தொடர்பு அவர்கள் முன்னோருக்கு உண்டு.

இரத்தினக் கற்கள், வைர வைடூரியக் கற்கள், மரகதக் கற்கள் என்று அவனுடைய தந்தை நாலாதிக்கும் சென்று வேற்று நாட்டு வணிகர்களுக்குப் பாண்டி நாட்டு முத்துகளை விற்று இரத்தினக் கற்களை வாங்கி வருவார். பொற்கொல்லர்களைக் கொண்டு நுணுக்கமான வேலைப்பாடாமைந்த ஆபரணங்களைச் செய்து, அரச குடும்பத்தினருக்கும், நாட்டுச் செல்வச் சீமான்களுக்கும் விற்பனை செய்வார்.

பூபதி தந்தையுடனிருந்து வணிக நுணுக்கங்களைக் கவனிப்பான். வேங்கடநாதனின் தந்தையிடம் தேவைப் படும்போது அவர் கடன் வாங்குவார். கொடுப்பார். அவர்களிருவரும் உறவினர் தாம். இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் உறவு முறை நடுவே நிற்காது. அவர் இறந்த பிறகு பூபதி தந்தையின் தொழிலை மேற்கொண்டான். இளமையும் திறமையும் சேர்ந்து வெற்றியைத் தந்தன. வேங்கடநாதனுடைய நட்பு உறவு முறைக்கு மேல் திகழ்ந்தது.

ஆனால் சமீபகாலமாக அவனுடைய தொழில் சரவர நடைபெறவில்லை. சற்று அகலக் காலை வைத்ததும் ஒரு காரணமாயிருக்கலாம். அணிகலன்கள் தொழில் அவ்வளவு உயர்வாக நடக்கவில்லை. காஞ்சிமா நகரத்துப் பிரமுகர்களின் ஆதரவு இருந்ததால் தொழில் ஓடிக் கொண்டிருந்தது.

பூபதி இன்னும் திருமணம் செய்து கொள்ள வில்லை, ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை, என்று அவனைத் தொந்தரவு செய்வதற்கு ஒருவரு மில்லை. ஒரே ஒருவர் தான் இருந்தார். காஞ்சி கடிகையின் வடமொழிப் பண்டிதர் பத்ரிநாதர். அவனிடம் அன்புடன் பழகுவார். அவருக்குப் பூபதியின் வயதில் ஒரு மகன் நந்தகுமார் ஒரே மகள் மரகதவல்லி.



நந்தகுமார் தர்க்க சாத்திரத்தில் கெட்டிக்காரன். பூபதிக்குத் தர்க்கம் வேதாந்தம் வராவிடினும் பொருளாதாரம் கூர்மையாக ஒரு பொருளை ஆராய்தல் போன்றவற்றில் சிறந்து விளங்கினான். 'தந்தையின் தொழிலைத் திறம்பட நடத்தக் கூடியவனாக நீ வாழ்வாய்' என்று அப்போதே ஆசி கூறியுள்ளார் பத்ரிநாதர்.

நந்தகுமாரும், பூபதியும் ஒன்றாகவே இருப்பார் கள். மரகதம் அப்போது விபரமறியாச் சிறுமி. செல்வச் செழிப்புடன் திகழும் பூபதி எங்கே, வறுமையில் சுழலும் நாமெங்கே என்று நந்தகுமார் பலமுறை எண்ணுவான். என்றாலும் பூபதியின் தூய அன்பு அவனைக் கவரும். அவர்கள் குடும்பம் வறுமையாகல் வாடும் நிலையைப் பூபதி அறிந்தவன். வறுமைக்கு உதவ அவன் முற்பட்டால் பத்ரிநாதர் ஏற்க மாட்டார். அதனால் பாகவதம், இராமாயணம் இவற்றைக் கற்பதாகக் கூறி அவ்வப்போது சம்பாவணை செய்வதன் மூலம் கணிசமாக உதவுவான்.

பத்ரிநாதர் திடீரென மாரடைப்பால் காலமான பிறகு நந்தகுமார் குடும்பப் பொறுப்பை ஏற்றான். அவனும், அவனுடைய சகோதரியும் மட்டுமே உலகில் தன்னந்தனியே விடப்பட்டனர். தந்தையின் பதவி அவனுக்குக் கிடைத்தது. ஆனால் சோழசிங்க புரத்திலுள்ள கடிகையின் பொறுப்பை ஏற்க நேரிட்டது. நந்தகுமார் தன் சகோதரி மரகதவல்லியுடன் சோழ சிங்கபுரத்திற்குச் சென்று குடியேறினான்.

சோழசிங்கபுரம் காஞ்சிக்கு நான்கு காதத்தில் இருந்ததால் மாதம் ஒரு தடவையாவது தன் நண்பனைச் சந்திப்பதை பூபதி வழக்கமாகக் கொண்டிருந்தான்.

மரகதம் காலத்தின் வேகத்திற்கு ஏற்ப வளர்ந்து விட்டாள். அறிவும், அழகும் ஒன்று சேர்ந்து தனிச்

சோபையை அவனிடம் ஏற்படுத்தியிருந்தன. அகன்ற விழிகள். கவர்ந்திழுக்கும் கவர்ச்சி அவற்றிற்கு. கூர்மையான நாசி அறிவுச் சுடரின் திரியைப் போல் முகத்தின் நடுவே கம்பீரமாகத் திகழ்ந்தது. அதரங்களும், வெண்முத்துப் பற்களும் வட்டமுகமுமாக - மரகதவல்லியை ஒருமுறைப் பார்த்தவர் மற்றொருமுறை திரும்பி நோக்குமளவுக்குத் திகழ்ந்தாள்.

"நந்தகுமார் எப்போதும் ஏதாவது சிந்தனையில் கவலை தோய்ந்த முகத்துடன் இருப்பான்."

"நந்தகுமார் என்ன யோசனை? உன் முகம் எப்போதும் வாட்டமாகவே இருக்கிறதே. எந்த விதக் கஷ்டமிருந்தாலும் என்னிடம் ஒளிக்கக் கூடாது என்று நான் சொல்லியிருக்கிறேன். மறந்துவிட்டாயா?" என்று பூபதி கேட்டான்.

நந்தகுமார் உடனே மறுமொழி கூறமாட்டான். வேதனை கலந்த சிரிப்பு ஒன்றை அவன் உகுப்பான்.

"உன்னிடம் ஒன்றையுமே நான் ஒளித்தது கிடையாது" என்று கூறுவான் நந்தகுமார்.

"பிறகு... முகம் காட்டுகிறதே அகத்தின் வேதனையை... உன் அறிவு ஆற்றலுக்கு உனக்குக் கிடைக்கும் வருமானம் மிகக் குறைவு. கல்விக்கும் அறிவுக்கும் இப்போது மதிப்பு மிகக் குறைந்து வருகிறது" என்று பூபதி வேதனைப் பட்டுக்கொண்டான்.

"பூபதி, எனக்குக் கூட கவலையாக இருக்கிறது. வேலூரில் அரசர் வேங்கடநாதர் நோய்வாய்ப் பட்டிருக்கிறாராம். அதனால் வேதபாடசாலைக்கு அரசிடமிருந்து வரும் உதவி தக்க சமயத்துக்கு வந்து சேர்வதில்லை. மாணாக்கர்களுக்கு உணவு அளிப்பதற்குக் கூட மிகவும் சிரமமாயிருக்கிறது" என்று கவலையுடன் கூறினான் நந்தகுமார்.



"அதைப் பற்றியா கவலைப்படுகிறாய்? வேலூரிலிருந்து வராவிடில் செஞ்சியிலிருந்து உதவி தருமாறு சொல்கிறேன். உடனடியாக மாணவர்களுக்கு உணவளிக்க எவ்வளவு பொன் தேவை?" என்று பூபதி கேட்டான்.

பூபதி, அதைப் பற்றிக் கூட எனக்குக் கவலை இல்லை. எனக்கென்று சில கடமைகளை என் தந்தை ஒப்படைத்துச் சென்றிருக்கிறார். அருமைச் சகோதரி மரகதத்தைத் தக்கவரிடத்தில் ஒப்படைத்துவிட வேண்டாமா? வரதட்சணை வாங்குவதை அரசர் தடை செய்திருக்கிறார். என்றாலும் வரன்கள் வரதட்சணை கேட்கிறார்கள். நான் எங்கே செல்வேன்? அதை நினைக்கும்போது மனம் வேதனைப்படுகிறது. மரகதம் திருமண வயதைத் தாண்டிக் கொண்டிருக்கிறாள். அதுவே பயங்கரமாக என் எதிரே நிற்கிறது. என் தந்தையும், தாயுமிருந்தால் இதுவரை சும்மாயிருப்பார்களா?" நந்தகுமாரின் சொற்கள் பூபதியை உலுக்கின.

இதற்குப் பூபதி எவ்வாறு உதவ முடியும். திருமணத்திற்கு உதவச் செல்வம் தேவை. இப்போதுள்ள நிலையில் அவனால் ஐந்து வராகன் கூட கொடுத்துதவ முடியாது.

பூபதி மௌனமாயிருப்பதைக் கண்ட நந்தகுமார், "பெண்களின் திருமண விஷயம் நெஞ்சைக் கலக்கும் விஷயம். மரகதமோ, 'கவலைப்படாதே' அண்ணா என்கிறாள். வேலூர் மன்னரிடம் சிபாரிசு செய்து அந்தப்புரத்தில் அரச குலத்தவருக்குச் சேவை செய்து, அதனால் கிடைக்கும் உதவித் தொகையைப் பெற்றுத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று யோசனை சொல்கிறாள். பூபதி, நீயே சொல், அவள் சொல்வது அவ்வளவு எளிதாக நடக்குமா? எனக்கென்னவோ சில நாட்களாக மனத்தில் ஒருவித பீதி ஏற்படுகிறது.

நாட்டிலே தர்மத்திற்கே பலத்த சோதனை ஏற்படுமோ என்ற பயம் தோன்றுகிறது. இந்த நிலையில் மரகதம் அந்தப்புரத்தில் சேவை செய்யச் சென்றால் என்ன நேருமோ? ஸ்திரீகளுக்குப் பாதுகாப்புக் குறையும் காலம் மெல்ல மெல்ல ஏற்பட்டு விடுமோ என்று தோன்றுகிறது" என்றான்.

நந்தகுமாரின் மனக் கலக்கத்திற்குக் காரணம் பூபதிக்குப் புரிந்துவிட்டது. உடனடியாக ஆதரவான வார்த்தை கூறி நந்தகுமாரின் கவலையைக் குறைக்க வேண்டும். பிறகு, நந்தகுமாருக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டும்.

"நந்தகுமார், கவலைப்படாதே; உன் கவலையை நான் போக்கி விடுகிறேன். என் நண்பன் வேங்கட நாதனிடம் கூறி உன் சகோதரியின் திருமணத்திற்கு வேண்டிய உதவி செய்கிறேன். அடுத்த முறை வரும்போது சரியான திட்டத்துடன் வருவேன்" என்று கூறி அவனைத் தேற்றிச் சென்றான்.

ஆனால் அடுத்த முறை வரும்போது, நந்தகுமார் இந்த உலகத்தில் இல்லை. குளத்தில் குளிக்கச் சென்றவன் வழுக்கி விழுந்து மூழ்கி இறந்து விட்டான். பூபதிக்குச் சொல்லி அனுப்புவதற்குக் கூட முடியவில்லை. மரகதவல்லி தன்னந் தனியாளானாள். மரகதவல்லியைக் காப்பாற்றும் பொறுப்பு பூபதிக்கு ஏற்பட்டது. ஆனால் ஓர் இளம்பெண்ணைந் தன்னந் தனியனான பூபதி எப்படிக் காப்பற்ற முடியும்? ஊர் வாய் பொல்லாததாயிற்றே. அதனால் அவளுடைய உறவினர் ஒருவரது வீட்டில் அவளைத் தங்குமாறு செய்து, அவளுடைய உணவிற்கும், உடைக்குமாக இயன்ற பொருளுதவியைச் செய்து வந்தான்.

பூபதியின் பெருந்தன்மையும், நற்குணமும் மரகதவல்லிக்கு என்றுமே பிடிக்கும்.



பூபதி அத்தான் - ராஜ் - என்றே பெயரைச் சொல்லி அழைக்கும் குணம் சிறு வயதிலேற்பட்டதை அவள் விடாமல் இப்போதும் அப்படியே தொடர்ந்து அழைக்கலானாள்.

பிரமன் தீட்டிய அழகுச் சித்திரமாகத் திகழும் மரகதத்தைப் பார்க்கும் போதெல்லாம் பூபதி பெருமூச்சு விடுவான். ஏதாவது அவளுக்கு வழிசெய்ய வேண்டும்; இல்லாவிடில் நாமாவது திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணுவான்.

வேங்கடநாதனிடமிருந்து விடைபெற்றுக் காஞ்சிக்குச் செல்லும்போது மரகதவல்லிக்கு உதவுவதைப் பற்றியே சிந்தித்தவாறு சென்று கொண்டிருந்த பூபதிக்கு நல்ல யோசனை ஒன்று உதயமாகியது. அப்போதே, அந்தக் கணத்திலேயே என்ன நேரமானாலும் சரியே என்று மரகதம் தங்கியிருக்கும் வீட்டை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான்.

## 5

**கா**ஞ்சிமாநகர் ஏகாம்பரேச்வரர் கோயில் அருகே உள்ள சிறு வீதியில் மரகதவல்லி தங்கியிருந்த வீடு இருந்தது. தாய் வழி உறவினர் ஒருவர் வீட்டில் அவள் தங்கியிருந்தாள். அவர்களும் வசதியற்றவர்கள். பூபதி பொருளுதவி செய்வதாக வாக்களித்ததால் மரகதம் அங்கே தங்கியிருக்க அவர்கள் சம்மதித்தனர்.

அர்த்த ஜாம பூஜைக்கான மணியோசை ஒலித்து முடிந்துவிட்டது. அந்த நேரத்தில் பூபதி மரகதவல்லி வீட்டின் கதவைத் தட்டினான்.

"யாரது?" என்று கேட்டுக் கொண்டே ஒரு மூதாட்டி கையில் சிறு விளக்குடன் கதவைத் திறந்தாள்.

"நான் தான் பாட்டி, பூபதி" என்று குரல்கொடுத்த உடனேயே மூதாட்டி புரிந்து கொண்டாள். குதிரை மெல்ல கனைத்தது.

பூபதி குதிரையைத் தட்டிக் கொடுத்தான். "டேய் உனக்குக் களைப்பு என்பது எனக்குத் தெரியும். ஒரே மூச்சில் நீ மூன்று காதங்களுக்கு மேல் ஓடி வந்திருக்கிறாய். வழியில் இளைப்பாறவில்லை என்பதும் எனக்குத் தெரியும். உனக்குப் பசி என்பதும் எனக்குத் தெரியும். என்ன செய்வது மிக முக்கியமான அவசரமான காரியமுங் கூட" என்ற குதிரையிடம் பேசுவதுபோல் பேசினான்.

மூதாட்டி விளக்கை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்த உடனேயே அவள் பின்னால் வந்த மரகதம், மூதாட்டியின் பின்புறம் நின்று கொண்டாள். பூபதி, குதிரையிடம் பேசுவதுபோல் கூறியவற்றைக் கேட்டவுடனே, மரகதமே வெளியே வந்து, "வாருங்கள்! இப்படி உள்ளே வாருங்கள்" என்று உபசரித்து அழைத்தாள்.

உள்ளே அழைத்தால் உட்கார வைக்கக் கூட இடமில்லை என்பதை அவள் அறிவாள். பூபதிக்கும் தெரியும்.

"மரகதம், ஒரு முக்கியமான செய்தி. உடனே உன்னிடம் தெரிவிக்க வேண்டும். அதனால்தான் விரைந்து வருகிறேன். இந்த அகால வேளையில் உன்னைத் தொந்தரவு கொடுப்பதற்கு மன்னிக்கவும்" என்று பூர்வ பீடிகையுடன் தொடங்கினான்.

"ஆகா: என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள். நீங்கள் வருவதே அபூர்வம். எந்த வேளையில் வந்தால் என்ன? வெளியே நிற்க வைத்துப் பேசுகிறேனே என்ற வேதனைதான் எனக்கு. இப்போதே, நிசி வேளையி



லேயே பேச வேண்டுமா? அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எழுந்துவிடப் போகிறார்களே, அவர்களுக்குத் தொந்தர வாக இருக்குமே என்ற கவலை எனக்கு... கோவிலைக் கூட மூடியிருப்பார்களே..." என்று துடிதுடித்தாள் மரகதம்.

பூபதி சிறிது யோசித்தான். "இரவே சொல்லா விடில் ஒன்றும் குடி மூழ்கி விடாது. நாளைக் காலையில் நான் காமாட்சி அம்மன் கோயிலுக்கு வந்து விடுகிறேன். குளக்கரையில் அமர்ந்து பேசுவோம்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

"அப்படி என்ன முக்கியமான காரியமாயிருக்கும்?" என்று இரவெல்லாம் தூக்கம் பிடிக்காமல் யோசித்தாள் மரகதம். அதிகாலை வேளையில் தூக்கம் வந்துவிட்டது. விழித்துப் பார்க்கும்போது பொழுது நன்றாக விடிந்து விட்டது.

பூபதி காமாட்சியம்மன் கோயில் குளத்துப் படிக்கட்டுகளில் அமர்ந்திருந்தான். காலை வேளையின் இளங்குளிர் மெல்ல அவனுடலில் புல்லரிக்கச் செய்து கொண்டிருந்தது. கதிரவனின் பொற் கிரணங்கள் இன்னும் குளத்துப் படிக்கட்டுகளில் படவில்லை. கோயிலுக்குள்ளே யாரோ உரத்த குரலில் பாடித் துதித்துக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்டது.

மரகதம் வருகிறாளா என்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். ஏன் படிக்கட்டுகளில் உட்கார்ந் திருக்கிறீர்கள் என்று அவனை யாரும் கேட்கவில்லை. அதற்கு மாறாக அதிசயமாக அவனைப் பார்த்துவிட்டுச் செல்வார்கள். தொழில் தொழில் என்று எப்போதும் செல்வம் சேர்ப்பதிலேயே கருத்தாயிருப்பவன் என்று அவனைப் பற்றிச் சிலர் கூறுவார்கள். அவன் ஒருவரிடமும் கலகலப்பாகப் பேசுவது கிடையாது.

எப்போதும் குதிரைமீது மிக வேகமாகச் செல்லும் அவன் ஒரு முரடன் என்று சிலர் அபிப்பிராயப் படுவார்கள்.

மற்றவர்கள் கூறுவதினின்றும் அவன் முற்றிலும் மாறுபட்டவன் - தொழில் முன்னேற்றத்திற்காக அவன் அலைவது என்பது உண்மைதான். ஆனால் இப்போது அவன் அலைவது ஒரு பெரிய இடரினின்று தப்பவே.

இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அவன் நவரத்தினக்கல் பதித்த அட்டிகை ஒன்றை உத்திர மேரூரில் உள்ள பிரமுகர் ஒருவருக்குச் செய்து கொடுத்தாக வேண்டும். தங்கம், நவரத்தினக் கற்கள் இவற்றிற்காக அவன் ஏராளமான தொகை அவரிடம் பெற்றுப் பல மாதங்களாகிவிட்டன. அந்தத் தொகையை நீண்ட நாள் கடன் பாக்கியாளர் ஒருவருக்குச் செலுத்திவிட்டான். அவன் கடன்பட்டிருப்பதும், மற்றவருக்குப் பாக்கித் தொகை தர வேண்டியிருப்பதும் பிறர் அறியமாட்டார்கள். அவனுடைய செல்வாக்கினால் செல்வ ஏற்றத்தாழ்வைப் பற்றிக் குறைவாகப் பேசமாட்டார்கள். ஆனால் உத்திர மேரூரானுக்குக் குறிப்பிட்ட தேதியில் இரத்தின ஹாரத்தைச் செய்து தராவிடில் அவன் இதுவரை கட்டிக் காத்த அந்தஸ்து அதோகதிதான். என்ன செய்வது என்று புரியாமல் பல நாட்கள் தூக்கம் வராமல் படுக்கையில் இரவைக் கழித்திருக்கிறான்.

வீட்டிலுள்ள இரும்புப் பேழையில் உள்ள சொந்த ஆபரணங்களைக் கணக்கிட்டால் கூட, செய்து தர வேண்டியவற்றில் கால்பாகம் கூடத் தேறாது.

பேழையிலுள்ள சுவடிகளையும், தந்தை எழுதி வைத்துச் சென்ற குறிப்புகளையும் படித்துப் பரிசீலனை செய்த போது தான் குடும்பத்தின் பரம்பரை ஆபரணம் ஒன்று, விலை மதிப்பிட முடியாத இரத்தின ஹாரம்



வேங்கடவனின் தந்தையிடம் இருப்பதாகத் தெரிய வந்தது... "நூறு வராகன் கடைசியாகக் கொடுக்க முடியவில்லை. அதற்காக அச்சுதநாதரிடம் இரத்தின ஹாரத்தை விட்டு வைக்க நேர்ந்திருக்கிறது..." என்று எழுதப்பட்ட குறிப்பொன்றை அவன் படித்தபோது விழிகளில் நீர் துளிர்ந்துவிட்டது.

பூபதியின் தகப்பனார் இரத்தின மாலையை ஈடுகாட்டிப் பணம் பெற்றுக், கடல் கடந்த நாட்டு வியாபாரம் ஒன்றைச் செய்திருக்கிறார். வியாபாரத்தில் கடுமையான நஷ்டம். பூபதியின் தந்தை, பணத்தைப் பற்றிக் கேட்கவே இல்லை. கொடுத்த தொகையைப் போல் பல மடங்கு மதிப்புள்ள நவரத்தினமாலை தன் வசமிருக்கும் போது கடனைத் திருப்பி அவர் ஏன் கேட்க வேண்டும்.

பூபதிக்கு இரத்தின ஹாரத்தைப் பற்றி நன்றாக நினைவிலிருக்கிறது. அந்த மாலையிலுள்ள கற்கள் இருக்குமிடத்தைச் சுற்றிப் பேரொளி வீசும். அதை ஓர் அழகி அணிந்தால் அவளுடைய அழகு பன்மடங்கு ஒளி வீசும். அந்த ஹாரம் வேங்கடநாதனின் மாளிகைப் பொக்கிஷத்தில் தூங்குகிறது. எத்தனையோ ஆபரணங்களுடன் ஒன்றாகக் கிடக்கிறது. பல ஆண்டுகளாக சோபையிழந்து கிடக்கும் வைர, வைடூரிய நகைகளோடு நகையாக ஒளி குன்றிக் கிடக்கிறது. அது தூசு படிந்திருக்கும். ஆனால் மாசு படிந்திருக்காது. வேங்கடநாதனுக்குப் பொக்கிஷ அறையைப் பற்றி கவலையில்லை. அங்கே பல ஆண்டுகளாகச் சேர்ந் திருக்கும் வைர வைடூரிய நகைகளைப் பற்றிக் கவலையில்லை.

'நாமே கூடக் கேட்டு விடலாம், வேங்கட நாதனை எனக்கு ஓர் இக்கட்டான நிலை. கடனாகப் பணம் கொடு எனறு கேட்கலாமா? ஆகா: அப்படிக்

கேட்டு விட்ட மறுகணமே நம் அந்தஸ்து அவனுடைய இதயத்திலிருந்து உடனே சரிந்து விழுந்து விடாதா? கடனும் கிடைக்காது: அவனுடைய தொடர்பையும் இழந்துவிட வேண்டியதுதான். ஆனால், ஒன்று செய்யலாம். பொக்கிஷ அறையிலுள்ள நமது பரம்பரை இரத்தின ஹாரத்தைக் கேட்கலாம். அது பொக்கிஷ அறையில் வீணே கிடப்பதை விட நமக்கு ஆபத்துக்கு அது உதவட்டுமே. அப்படிக் கேட்பது கடன் கேட்பதாகாது!

பூபதி இப்போது தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். "அப்படிக் கேட்பது மட்டும் நன்றாக இருக்குமா? அந்தஸ்து குறைவு படாதா? மதிப்பு மாறிவிடாதா?" என்று சொல்லிக் கொண்டான்.

இவை ஏதும் சரியான உபாயமல்ல நாம் நினைத்துள்ளபடி தான் செய்ய வேண்டும். மரகதத்திடம் சொல்ல வேண்டும். அவள் அதற்குச் சம்மதிக்க வேண்டுமே. அந்தக் குடும்பத்திற்கு நாம் செய்துள்ள உதவி கொஞ்சமா? அதைச் சொல்லிக் காட்டக் கூடாது. மறைந்த எனது ஆருயிர் நண்பனிடம் பிரதிப் பிரயோசனம் எதிர்பார்த்தா அவர்களுக்கு உதவிகள் செய்தோம்? இவ்வளவு நாள் செய்தோமே. ஏதாவது கைமாறு கருதியா? தன் நிலையை நினைக்கும் போது அவனுடல் சிறுத்தது.

இவ்வளவு நாள்கள், காஞ்சிமாநகரில் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நின்றோமே, செல்வமும் செல்வாக்கு முடையவன் என்று மதிக்கப்பட்டோமே. நாம் ஆபரண மாளிகையே நோக்கி உயர் குடும்பத்துப் பெண்டிர் தைர்யமாக வந்து நம்பகமாக விலைமதிப்பற்ற வைர வைடூரியங்களை ஒப்படைக்கிறார்களே - அவை அந்த ஒப்பற்ற நம்பிக்கை யாவும் சிதறுண்டு போய்விடும். உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.



அவன் உடல் சிலிர்த்தது. 'மரகதத்திடம் இவை குறித்துச் சொல்லாமலே போய் விடுவோம். நல்ல வேளையாக அவள் வரவில்லை. போய் விடுவோம்' பூபதி எழுந்து திரும்பிப் பாராமல் படிக்கட்டுகளில் ஏறினான்.

"பூபதி அத்தான்..." இனிய குரல் கேட்டது. அவனுக்கு மிக அருகே மேல் படிக்கட்டில் மரகதம் நின்று கொண்டிருந்தாள்.

கதிரவனின் ஒளி அவள் மேல் வீழ்ந்து பொன்னிறமாகக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. பூபதி, அவளை ஒருமுறை வைத்த விழி வாங்காது பார்த்தான்.

வறுமையிலும் அவள் மேனி புதுச் சோபை பெற்றுத் திகழ்ந்தது. அங்கங்கள் எல்லாம் பருவச் செழிப்புடன் பொங்கிப் பூரித்துப் புது நடனம் செய்து கொண்டிருந்தன. குளித்து மஞ்சள் பூசியதால் மேனி பளபளப்புடன் திகழ்ந்தது. கூந்தலை வாராமல் அள்ளிச் சொருகியிருந்தாள்.

பருவச் செழிப்பைப் பறை சாற்ற முயன்ற மார்பகங்களை அடக்கி வைக்க முயன்ற கச்சையின் சர்வாதிகாரத்தை மறைக்க முயன்றது மேலாடை.

ஒவ்வொரு படிக்கட்டாக அவள் இறங்கி வரும்போது அசையும் இடையும் தாளமிடுவது போல் அடி எடுத்து வரும் பாதங்கள் நடைபயிலும் அழகும் வளைந்த கரங்களில் குலுங்கும் வளையலும், மகிழ்ச்சி நிறைந்த முகத்தாமரையும், நெற்றியில் வந்துத் தவழும் கூந்தலை மெல்ல ஒதுக்க முயலும் கரங்களின் அசைவும் பூபதியை மெய்மறக்கச் செய்தன.

"நீங்கள் வந்து நேரமாகிறதா?" என்று மரகதம் கேட்டாள்.

பூபதி அவளையே பார்த்துக் கொண்டிருந்ததால், உடனே பதில் சொல்லவில்லை.

"தாமதமாகிவிட்டது அதனால் கோபமா? மிகவும் முக்கியமான அவசரமான காரியமென்று தானே, இரவு அந்த நிசி நேரத்திலும் வீட்டிற்கு வந்தீர்கள். கோயிலுக்குள் குளிக்காமல் வரக் கூடாது, என்று குளித்துவிட்டு வர நேரமாகிவிட்டது" என்று அவள் பேசும் அவள் போது அசையும் உதடுகளையும் இடை இடையே முத்துமாலை போல் பளிச்சிட்ட பற்களையும் கண்ட பூபதிக்கு, நந்தகுமாரின் நினைவு வந்தது. தன் தங்கையின் திருமணத்தைப் பற்றிய கவலையிலே உயிரை விட்டானே - அவன் ஆவி துடித்துக் கொண்டிருக்குமே! நினைக்கும் போது பூபதிக்கு உள்ளத்தைச் சுழற்றிப் பிழிந்தது.

"ஏன் முகம் வாடியிருக்கிறது? கண்களில் கலக்கம் தெரிகிறதே" என்று மரகதம் அவன் அருகே வந்தமர்ந்தாள்.

பூபதி விழிநீரை மெல்ல வடித்து வீசினான். "ஒன்றுமில்லை. நந்தகுமாரை நினைத்துக் கொண்டேன். உடலைக் குலுக்கியது" என்றான்.

"நான் நினைத்துக் கொள்ளாத நேரமில்லை. என்னருகே நிழல் போல் என் அருமை சகோதரன் இருப்பது போலவே உணர்கிறேன். எப்போதும் என்னைப் பற்றிய கவலையே தான் அவனுக்கு..." என்று கூறும் போது மரகதத்தின் குரல் தழுதழுத்தது.

"நந்தகுமார் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுவது என் கடமை - அதை நிறைவேற்றும் வழியைத் தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன். உன் திருமணத்தைப் பற்றியே தான் எனக்குச் சிந்தனையெல்லாம். என்நிலை இப்போது சரியில்லை, மரகதம். அதைச் சொல்லத்தான் உன்னை அழைத்தேன். ஆனால், உன் திருமணத்தை நடத்துவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்து விட்டேன்" என்றான் பூபதி. வார்த்தைகள் சரிவர வெளிவரவில்லை.



மரகதம் புரிந்து கொண்டாள். தன் திருமணத்திற்காக பூபதி கவலைப்பட்டு முகம் வாடி, அவசரமாகத் தன்னை அழைத்திருப்பார் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. வேறு ஏதோ காரணமிருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

'பொதுவாக பூபதி, அந்தக் காலை வேளையில் அவசரமாக அழைத்துப் பேசக் கூடியவர் அல்லர்! அதனால் வேறு ஏதோ காரணமிருக்க வேண்டும். அவருக்கு வெளியே சொல்ல முடியாத வேதனை ஏதோ இருக்க வேண்டும். அதை நாம் எப்படியும் கேட்டறிவோம். நம்மால் முடிந்தால் தீர்த்து வைப்போம். வெளியே முறையிட்டு மனத்துயரை ஆற்றிக் கொள்ளத்தான் அவருக்கு வேறு யாரிருக்கிறார்கள்..."

"பூபதி அத்தான்" என்று மெல்லப் பேச்சை ஆரம்பித்த அவள் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டாள்.

"என் திருமணத்திற்கு இப்போது என்ன அவசரம்?" என்று கூறி மெல்லச் சிரித்தாள். பிறகு, "என் திருமணத்தைப் பற்றிப் பேசுவதற்கா என்னை அழைத்தீர்கள்?" என்று கேட்டாள்.

பூபதி மறுமொழி கூறுவதற்கு முன்பே, 'அத்தான் என்று நான் தங்களைச் சிறுவயதிலிருந்தே அழைக்கிறேன். என் அண்ணா அடிக்கடி சொல்லுவார்: "மரகதம், பூபதியைப் போன்ற செல்வமும், குணமும், அறிவும், ஆற்றலும் உள்ளவரே உனக்கு மணாளனாக வரவேண்டும்' என்று. நான் அப்போது விவரம் அறியாத சிறுமி. நான் உடனே கேட்பேன், "ஏன் அண்ணா, அப்படியென்றால் நான் பூபதி அத்தானையே கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேனே..." என்று." என்று கூறி மரகதம் சற்று நிறுத்தினாள்.

பூபதி திடுக்கிட்டான். 'அவனுக்கு அப்படியொரு எண்ணம் இதுவரை இருந்ததில்லை. ஒருவேளை எனக்கு

அப்படியொரு எண்ணம் இருந்து அதைப்பற்றிப் பேசத்தான் கவலையுடன் வந்திருப்பதாக மரகதம் நினைத்திருப்பாளோ நந்தகுமாருக்கு அப்படியொரு எண்ணமிருந்தால் என்னிடம் சொல்லியிருப்பானே...

"மரகதம்... மரகதம்... நீ அப்படிச் சொன்னதற்கு உன் சகோதரன் என்ன சொன்னான்?" என்று பரபரப்பும் ஆவலும் மிகக் கேட்டான்.

மரகதம் கல,கலவென்று சிரித்து, "அண்ணனுக்குக் கோபம் வந்தது. அவனை அதட்டி, "சீ, அப்படியொரு ஆசையிருந்தால் மறந்துவிடு. நமக்கு எவ்வளவோ உதவிசெய்யும் பூபதியின் அந்தஸ்து எங்கே, நம் அந்தஸ்து எங்கே? என்னுடன் நெருங்கிப் பழகி விட்டதால் பூபதி தன் நிலையை விட்டு இறங்கி விட்டார் என்று நினைக்காதே" என்று கடிந்து கொண்டார்" என்றாள்.

"அப்படியா சொல்லிவிட்டான்... நான் அந்தஸ்தைக் குறித்து என்றும் எண்ணியதில்லை. அதுபோல் பழகியதும் இல்லை" என்று கூறிய பூபதி, "மரகதம், நான் என்றும் என் செல்வத்தைப் பற்றி நினைத்ததே யில்லை. செல்வம் இன்று போகும், நாளை வரும். ஆனால் உயரிய நட்பு போனால் வராது. உன் திருமணத்தைப் பற்றி நான் நினைத்துக் கொண்டே யிருக்கிறேன். தக்க வரன் தேடிப் பணஞ் செலவு செய்து மணம் புரிவிக்க. அதற்கு எனக்கு இடையூறு ஒன்று வந்திருக்கிறது... அதைப் பற்றி உன்னிடம் எடுத்துச் சொல்ல, என்மனச் சுமையை உன்னிடம் எடுத்துக்கூற, உன்னை விட வேறு யாரிருக்கிறார்கள். என் மன இரகசியத்தை எடுத்துச் சொல்ல... அதனால் தான் நான் உன் வீடுதேடி வந்தேன். மிக அவசரமாக உன்னிடம் சொல்லி உன் உதவியை வேண்டும் நிலை. அதனால்தான் நேற்று இரவு வேளைகெட்ட வேளையில் தேடிவந்தேன். அப்படி வருவதால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் தவறான வதந்தியைப் பரப்ப ஏதுவாகும் என்று அறிந்தும் வந்தேன். தொடர்ந்து இன்று காலையிலும் வந்தால், வீண் அபவாதம் எழும் என்றே உன்னைக் கோயிலுக்கு வருமாறு கேட்டுக் கொண்டேன். நீ அறிவுமிக்கவள். குணத்தில் உனக்கு நிகர் ஒருவருமில்லை. உன்னைப் புகழ்வதற்கு எனக்கு வார்த்தைகள் இல்லை..." என்று கூறிக் கொண்டு போன பூபதியின் வாயைப் பொத்தி, "போதும், போதும். என்னைப் புகழ்வதற்காகவா இங்கே வரச் சொன்னீர்கள். நிறுத்துங்கள். ஏதோ மன பாரத்தை இறக்கத் துடிக்கிறீர்கள். தயவு செய்து உடனே சொல்லுங்கள். இல்லை. கட்டளையிடுங்கள். என்னால் முடிந்ததைச் செய்யக் காத்திருக்கிறேன். உங்கள் முகம் இதைப் போல கறுத்திருந்து நான் கண்டதில்லை. குரலில் சோகம் ததும்பிக் கேட்டதில்லை. கண்களில் வேதனை படர்ந்துப் பார்த்ததில்லை. சொல்லுங்கள் பூபதி, சொல்லுங்கள்" என்று அவன் கரத்தைப் பிடித்து உலுக்கினாள்.



பூபதி சொன்னான் - தன்னுடைய குடும்ப பரம்பரையைப் பற்றிச் சொன்னான். தங்கள் அந்தஸ்தைப் பற்றிச் சொன்னான். செல்வம், செல்வாக்கைப் பற்றிச் சொன்னான். வேங்கடநாதன் குடும்பத்துடன் தன் குடும்பத்திற்குள்ள உறவைப் பற்றிச் சொன்னான். வேங்கடநாதன் தந்தையிடம் தன் தந்தை பல ஆண்டுகளுக்கு முன்பு கடன் பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னான். பின்பு தன் வியாபாரத்திலிருந்த உயர்வையும், ஏற்பட்ட சரிவையும் எடுத்துச் சொல்லி, இப்போது ஏற்பட்டிருக்கும் ஆபத்து நிலையையும் கூறினான்.

மரகதம் அவன் கூறுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

## 6

பூபதி சொல்லி முடிந்ததும், மரகதத்தின் முகத்தை உற்று நோக்கினான். ஏதாவது மாறுதல் தெரிகிறதா என்று பார்த்தான்.

மரகதம் என்ன சொல்லப் போகிறாளோ என்ற கவலையில் பூபதி இருந்தான். அவளிடம் சொல்லாமலே இருந்திருக்கலாம். தன்னுடைய பொருளாதாரத்தை முன்னிட்டு இத்தகைய காரியத்தைச் செய்யச் சொன்னோமே; ஒரு கணத்தில் சிறுமைப் பட்டுவிட்டோமே என்று வேதனைப் பட்டான். நண்பரின் சகோதரியான அவள் இவ்வளவு காலம் மிக உயர்வாக நம்மை நினைத்துக் கொண்டிருந்தாள். என் இந்த வேண்டுகோளைக் கேட்டவுடன் ஒரே கணத்தில் தன் இதயபீடத்தில் கொடுத்திருந்த இடத்திலிருந்து கீழே தள்ளி இருப்பாளோ? - பூபதி துடித்துப் போனான்.

மரகதத்தின் முகத்தில் முன் எப்பொழுதையும் விடத் தெளிவு புலப்பட்டது. உதடுகளில் புன்முறுவல் மெல்ல நெளிந்தது.

மரகதம் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். "மரகதம்! நான் இந்த வேண்டுகோளை உன்னிடம் விடுத்திருக்க வேண்டாம்..." என்று சொல்ல முயன்றவனை மேலே பேசவிடாமல், "இந்த உதவியை நான் செய்வதற்கு நீங்கள் இவ்வளவு பீடிகை சொல்லியிருக்க வேண்டாம். கட்டளையிட்டால் நான் செய்யக் காத்திருக்கிறேன்" என்றாள்.

பிறகு, "உங்களுக்கு நேரும் அவமானம் எனக்கும் நேர்வது என்று தாங்கள் வைத்துக் கொள்ளலாம். என்ன



செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன். வேங்கடநாதன் செல்வம் மிகுந்தவர். செஞ்சி மன்னருக்கு மிகவும் வேண்டியவர். அவரது விசாலமான மாளிகையில் பணியாட்களையும் மேற்பார்வையிட வேண்டும். நோய்வாய்ப்பட்டிருக்கும் அவரது தாயாருக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும். மாளிகைவரவு செலவுக் கணக்குகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு நம்பிக்கை வாய்ந்த பணிப்பெண் வேண்டும். அந்தப் பணியை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்னை நீங்கள் ஏன் சிபாரிசு செய்கிறீர்கள் என்பதையும் புரிந்து கொண்டேன். வேங்கடநாதனின் நம்பிக்கைக்கு மிகவும் உரியவளாக நான் மிக சீக்கிரம் ஆக வேண்டும். அதைப் பயன்படுத்திக் கொண்டு பொக்கிஷ அறையினின்று இரத்தின ஹாரத்தை எடுத்துத் தங்களிடம் கொடுத்து விட வேண்டும். அவ்வளவு தானே..." என்று கூறி மரகதம் பூபதியின் முகத்தை நோக்கினாள்.

பூபதி வியப்பும், கவலையும் நிறைந்த விழிகளுடன், "மரகதம், மிகவும் சுலபமாக நீ சொல்லி விட்டாய். என் மீது உனக்குள்ள மதிப்பாலும், அன்பாலும் என் வேண்டுகோளை நிறைவேற்றச் சம்மதித்து விட்டாய். வேங்கடநாதனிடம் உன்னைச் சேர்ப்பது பணிப்பெண் என்ற முறையிலன்று. பணிப் பெண்ணைவிட உன்னை அவன் உயர்தரமாக நடத்துவான். அவன் தாயைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவன் மிகவும் சிக்கனமானவன். சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் அவன் உன்னை மிகவும் நம்பிவிடுவான். அவன் கொடுக்கப் போகும் ஊதியத்திற்காக உன்னை அங்கே சேர்க்கவில்லை. என் சங்கடத்தை உன்னால் தான் தீர்க்க முடியும். எனக்குத் தேவையான இரத்தினங்கள் என் பரம்பரைக் குடும்பத்து

இரத்தினஹாரத்திலேயே இருக்கிறது. அந்த மாலை ஒன்று கிடைத்து விட்டால் போதும். நீ வேங்கடவன் பொக்கிஷத்திலிருந்து எடுப்பதை நம்பிக்கைத் துரோகம் என்றும் நான் சொல்ல மாட்டேன். களவு என்றும் கூறமாட்டேன். ஏதோ சொற்பக் கடனுக்காக மதிப்பு மிக்க ஹாரத்தை என் தந்தை அடகு வைத்துவிட்டார். பொருளும் பல மடங்கு உயர்ந்தது. திருப்பித் தருமாறு கேட்டிருந்தால் அச்சுதநாதர் மறுத்திருக்க மாட்டார். கேட்கவில்லை. நானும் கேட்க வழியில்லை... நீ எடுத்துத் தந்துவிட்டால்... மரகதம்... அந்த மாலையை மட்டும் தந்து விட்டால் நான் நிமிர்ந்து விடுவேன். என் அந்தஸ்து சரிந்துவிடாது. நான் எப்போதும் போல் உயர்ந்து நிற்பேன். இரண்டே வருடங்களில் உன் திருமணச் செலவு முழுவதையும் நானே ஏற்றுக் கொண்டுவிட முடியும்..." என்று பூபதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மரகதம் எழுந்து நின்று "வெயில் வந்து விட்டது. காமாட்சி அம்மனின் தரிசனத்திற்கு வருபவர்கள் அதிகமாகிவிட்டனர். இனியும் பேசிக் கொண்டிருப்பது சரியில்லை. வேங்கடநாதனிடம் எப்போது செல்ல வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள்" என்றாள்.

பூபதியின் உடல் சிலிர்த்தது. அவன் விழிகளில் நீர் தளும்பியது. மரகதத்தின் கரங்களைப் பிடித்துக் கொண்டான்.

பாலாற்றங்கரை மாளிகைக்கு மரகத வல்லியை அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்தான் பூபதி. குதிரை மீது அமர்த்தி அழைத்துச் செல்வது என்பது இயலாத காரியம். பல்லக்கைத் தயார்செய்த விட்டால்?

சிவிகை அவள் தங்கியிருந்த வீட்டிற்கருகில் வந்தால் தெருவிலிருப்பவர்களும், மரகதம் தங்கி யிருக்கும் வீட்டுக்குரியவளும் வேறுவிதமாக நினைப்பார்கள். மரகதத்திடம் இதைப்பற்றி ஆலோசனை கேட்டான். அவளுக்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை.



பூபதியின் ஆபரண மாளிகைக்குச் சிவிகையிலும், இரண்டு குதிரை பூட்டிய வண்டியிலும், காளை வண்டியிலும் வாடிக்கையாளர்கள் வருவது வழக்கம். அது நினைவுக்கு வந்தது.

"மரகதம், எனது ஆபரண மாளிகைக்கு வந்து விடு. நான்கைந்து புடவைகள், மாற்று உடைகள் நான் தயாரித்து வைக்கிறேன், சிவிகை வாயிலில் ஆயத்தமாக நிற்கும். நீ சிவிகையில் ஏறிக்கொள். சிவிகை சுமப்பவரிடம் நான் சொல்லியிருக்கிறேன்" என்றான்.

மரகதம் மறுமொழி ஒன்றும் பேசவில்லை. பூபதி சொல்வது போல் செய்வது ஒன்றுதான் அவள் இலட்சியம். எப்படி அனுப்புகிறான் என்பதைப் பற்றி அவள் ஏதும் கேட்கவில்லை.

பாலாற்றங்கரை மாளிகையைப் பல்லக்கு அடையும்போது பொழுது சாய இரண்டு நாழிகை களிலிருந்தன. மாலைக் கதிரவனின் வட்டச் செங்கோளம் தொலைவில் வேகமாக மேல்வாயிலில் இறங்கிக் கொண்டிருந்தது.

பல்லக்கு வருவதற்கு முன்பே பூபதி மாளிகை வாயிலுக்கு வந்துவிட்டான். மாளிகை வாயிலில் வேலூரிலிருந்து வந்த வீரர்கள் வராகக் கொடியுடன் நின்றிருந்தனர். பூபதிக்கு அந்தக் காட்சி வியப்பை அளித்தது. வேலூரிலிருந்து எதற்காக வீரர்கள் வந்திருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை.

பீம் வாயில் பெருங் கதவுக்கருகே கம்பீரமாக நின்று கொண்டிருந்தான். அவன் அருகே வாட்ட சாட்டமாக, கரும்புலி நின்று கொண்டிருந்தது. அதைச் சங்கிலி போட்டுக் கட்டியிருந்தான் பீம்.

"உள்ளே செல்லுங்களேன்..." என்று, மரியாதை யாகக் கூறினான்.

"போகிறேன், போகிறேன். பல்லக்கு வருகிறது. அது வரையில் வெளியே நிற்க வேண்டும். ஆமாம்: வேலூரிலிருந்து வீரர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"வேலூரில் மகாராஜாவுக்கு உடல்நிலை சரியில்லையாம். எசமானரை அழைத்து வரச் சொல்லியனுப்பியுள்ளார். தூதுவருடன் வந்த வீரர்கள் இவர்கள்" என்றான் பீம். அவ்வாறு மாளிகைச் செய்திகளை வெளியே தெரிவிக்கும் வழக்கம் அவனிட மில்லை. ஆனால், தன் எசமானருக்குப் பூபதி மிகவும் நெருக்கமாக வேண்டியவர் என்பதைத் தெரிந்து வைத்திருந்ததனால், வேலூரினின்று தூதுவர் வந்ததைத் தெரிவித்துவிட்டான். தூதுவர் உள்ளே பேசிக் கொண்டிருக்கிறாரா? என்று பூபதி கேட்டான்.

"ஆமாம், நீங்கள் உள்ளே செல்லுங்கள்" என்று பணிவுடன் பீம் சொன்னான்.

"போகிறேன், போகிறேன், நான் பல்லக்கை எதிர்பார்த்து நிற்கிறேன். எசமானருக்கு அறிமுகம் படுத்த வேண்டும்" என்று கூறிய பூபதி, குதிரை மீதேறிப் பல்லக்கு வரும் திசை நோக்கிச் சாலை வழியே விரைந்து சென்றான்.

மாளிகை வாசலில் சிவிகை சுமப்பவர்கள் மெல்ல இறக்கினார்கள். சிவிகையில் அமர்ந்து வருவது அவளுக்குப் புதிய அநுபவம். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பெருந்தனக்காரர்களுமே செல்லும் சிவிகையில் தனக்கு ஏறிச் செல்ல வாய்ப்புக் கிடைத்தது வாழ்க்கையில் கிடைத்த பெரும் பேறு என்றே கருதினாள்.



வெளியே பெரிய மதிள்சுவர். வீட்டைச் சுற்றிலும் தோட்டம், மாளிகை பெரியது தான். செஞ்சி மன்னரின் தனாதிகாரியாக இருப்பவருக்கே இவ்வளவு பெரிய மாளிகை என்றால் செஞ்சி மன்னர் மாளிகை எவ்வளவு பெரியதாக இருக்கும்... மரகதம் யோசித்தவாறே நிமிர்ந்தாள்.

வாயிற்காவலன் வளைந்து நின்று வரவேற்றான். அவனருகே இருந்த நாய் தொலைவில் கட்டப்பட்டி ருந்தது. வராகக்கொடி பிடித்த வீரர்கள் நின்று கொண்டிருப்பதையும் ஒரு முறை பார்த்தாள். சோழசிங்கபுரத்தில் அவள் வசித்த போது வேலூரிருந்து வீரர்கள் அந்த வழியே விரைந்து செல்வார்கள். அவர்கள் கையிலே வராகக் கொடியிருக்கும்.

வேலூர் அரசர் வந்திருக்கிறாரோ? பூபதியைக் கேட்க வாயெடுத்தாள்.

"வா மரகதம் நாம் உள்ளே செல்வோம்" என்று மரகதத்தை அழைத்துக்கொண்டு பூபதி சென்றான். செல்லும்போதே, "மரகதம், வேங்கடநாதன் ஏதாவது கேள்வி கேட்டால் தயங்காமல் மறுமொழிசொல்" என்றான். பிறகு "நான் உன்னுடன் அந்தரங்கமாக நெருங்கிப் பேசுவது அநேகமாக இதுதான் கடைசித் தடவையாக இருக்கும். அதனால் நான் சொன்னதை நினைவில் வைத்துக் கொள். சுருக்கமாகச் சொல்லுகிறேன். இரண்டே மாதங்களில் நீ இரத்தின ஹாரத்தை எடுத்து என்னிடம் வந்த பிறகு நான்கைந்து மாதங்களுக்குள் உனக்குத் திருமணம் நிச்சயம் செய்து விடுகிறேன். வேங்கடநாதனிடம் உன் திருமணத்தைக் காரணங்காட்டி அங்கிருந்து பிரித்து அழைத்து வந்து விடுகிறேன். என்ன சரிதானே?" என்று மெல்லிய குரலில் அவளுக்கு மட்டும் கேட்கும் விதத்தில் பேசினான்.

மரகதம் உடனே ஏதும் பேசவில்லை. தலையை மட்டும் அசைத்தாள். அவளுக்கு முதல் நாளிருந்த தைர்யம் இப்போது குறைந்து விட்டது. ஒருவித பயம் சூழ்ந்து கொண்டது.

"என்ன, மரகதம் பேச மாட்டேன் என்கிறாய்? மனத்திலிருப்பதைத் தைர்யமாகச் சொல்லு. உன்னை இங்கே சேர்ப்பதே எனக்கு நீ உதவவேண்டும் என்பதற் காகத்தான்" என்றான் பூபதி.

"ஆகா: தங்களுக்கு உதவுவதைத் தவிர எனக்கு வேறு பணி என்ன இருக்கிறது அத்தான்...!" என்றாள் மரகதம்.

பூபதி மெல்லச் சிரித்தான். "அங்கே வேங்கட நாதன் எதிரே அத்தான் என்று அழைக்காதே" என்றான்.

"என்ன வென்று அழைப்பது?" மரகதம் கேட்டாள்.

"ஒன்றுமே அழைக்க வேண்டாம்; அப்படி அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் ஐயா என்றழை போதும்" என்ற பூபதி, "உன் குரலில் உற்சாகத்தைக் காணோமே?" என்றான்.

மரகதம் மெல்ல நகைத்து, "ஆகா: உற்சாகத்திற்கு என்ன?" என்றாள்.

"பேச்சிலே கலகலப்பில்லையே?"

"மாளிகையையும், சுற்றுச் சூழ்நிலையையும் பார்த்தவுடன் எனக்கு வார்த்தைகளே வரவில்லை என்பது உண்மை..."

"இந்த மாளிகையும், மாளிகை வேலைக்காரர் களும் இந்த மாளிகையின் எசமானருங் கூட நீ சொல்வது போல தான் கேட்கப் போகிறார்கள் என்பது நினைவிருக்கட்டும். அப்போது நீ அரசி போல் நடந்து கொள்ள வேண்டும்" என்றான் பூபதி.



"ராஜ்யம் இல்லாத அரசியா?" என்று கேட்டு நகைத்தாள் மரகதம்.

"ராஜ்யமாம்; ராஜ்யம். ஒரு நாட்டிற்கு அரசியாவதை விட, ஒரு வீட்டிற்கு அரசியாகத் திகழ்வதே நல்லது. வேலூரில் ஆளுகின்ற அரசர் படும்பாடு உனக்குத் தெரியாது. அரசிக்குக் குழந்தை இல்லை. அவளால் பல பூசல்கள் - போகப் போக எப்படி ஆகப் போகிறதோ? அதைப்பற்றி நமக்கென்ன - மரகதம் நம் வேலையை நாம் கவனிப்போம். கடைசியாக ஒன்றைக் கேட்கிறேன். நீ மனத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, எனது வேண்டுகோளை நிறைவேற்ற முடியுமல்லவா; அதைச் சொல்லி விடு. உன்னால் முடியாவிட்டால் இப்போதே சொல்லி விடு" என்றான்.

மரகதம் மனத்தைத் தேற்றிக் கொண்டாள். "ஐயா" என்று ஆரம்பித்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது. பூபதியும் சிரித்தான்.

"சந்தேகமே பட வேண்டாம். நான் திட்டமிட்ட படிக் காரியத்தை முடித்துக் கொடுக்கிறேன். தாங்கள் குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் வாருங்கள். இரத்தினஹாரம் தங்கள் கையில் தவழும்" என்றாள்.

பூபதி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

## 7

வேலூரிலிருந்து வந்திருந்த வீரர்கள் விடை பெற்றுச் சென்றனர். பூபதியும், மரகதமும் முன் கூடத்தில் அமர்ந்திருந்தனர். இருட்டிவிட்டது. ஒவ்வொரு விளக்காக ஏற்றுவதற்குப் பணியாள் கையில் எண்ணெய்ச் சட்டியுடனும், கை விளக்குடனும் வந்து கொண்டிருந்தான்.

பூபதி வந்திருப்பதை அறிந்த, வேங்கடநாதன் அவனைத் தனது தனி அறைக்கு அழைத்தான். மரகதம் பின் தொடர, பூபதி வேங்கடவனிருக்கும் அறைக்குள் நுழைந்தான்.

அறை விசாலனமானது. சாளரங்களில் வண்ணத்திரைச்சீலைகள் தொங்கின. ஆனால் அவை அழுக்குப் படிந்திருந்தன. அறையின் மேல் கூரையில் ஒட்டடைகள் தோரணம் போல் தொங்கின. கீழே விரிக்கப்பட்டிருந்த கம்பளம் புழுதி படிந்து வர்ணம் மாறியிருந்தது.

அறையின் நடுவே தொங்கிய விளக்கு ஏற்றப் பட்டிருந்தது. கண்ணாடிகள் துடைக்கப்படவில்லை. விளக்கு ஒளி பூபதியின் மீது முதலில் வீழ்ந்தது. அவனைப் பின் தொடர்ந்த மரகதத்தின் மீது படர்ந்தது.

வேங்கடவனின் கண்களில் முதலில் மரகதம் தான் பட்டாள். தேவதை போல் உள்ளே நுழைந்த மரகதத்தைப் பார்த்துத் திகைத்து விட்டான் என்பது அவனுடைய முகத்தில் தோன்றிய மாறுதலிலிருந்து தெரிந்தது.

"யார்... யார்" என்று முதலில் திடுக்கிட்டவன் போல் கேட்ட வேங்கடவனுக்குப் பூபதி பெரிதாக நகைத்தவாறு பதில் கூறினான்.

"என்ன வேங்கடநாதா, இந்த நேரத்தில் என்னை எதிர்பார்க்கவில்லை அல்லவா?" என்று கேட்டான்.

"ஏன் எதிர்பார்க்காமல்? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் உன்னை எதிர்பார்க்கிறேன். அதிலென்ன சந்தேகம்?" என்று சாமர்த்தியமாக மறுமொழி கூறினான் வேங்கடவன்.

மீண்டும் நகைத்த பூபதி, "அது சரி, இந்த நேரத்தில் இந்த அழகிய மங்கையுடன் நான் வருவேன் என்று எதிர்பார்த்தாயா?" என்று கூறி, மரகதத்தை அறிமுகப்படுத்தினான்.



வேங்கடவன் மரகதத்தைப் பார்த்தும் பார்க்காதது போல பூபதியை நோக்கி, "இப்போது எங்கிருந்து வருகிறாய் பூபதி?" என்று கேட்டான்.

"காஞ்சீபுரத்திலிருந்துதான். காலையிலேயே புறப்பட்டுவிட்டோம். மரகதத்தின் குடும்பத்தைப் பல ஆண்டுகளாக நான் அறிவேன். கல்வியில் சிறந்தவர் இவளது தந்தை. இவளுடைய சகோதரனும் சோழசிங்கபுரத்தில் சமஸ்கிருதப் பாடசாலையில் ஆசிரியராக இருந்தான்" என்றான்.

வழிப் பயணத்தில் மிகக் களைத்திருப்பாய் போல் தெரிகிறது. போய் ஆகாரத்தை முடித்துக்கொண்டு வாருங்கள் பிறகு பேசுவோம் என்ற வேங்கடவன் கையாலி எழுப்பிப் பணியாளை வரவழைத்து, அவர்களுடைய இரவு உணவிற்கு ஏற்பாடு செய்தான்.

"மரகதம் நீ போய் பிடித்தவரை உணவருந்தி வா" என்று கூறிய பூபதி, எனக்குப் பசி இல்லை; இரவு படுக்கப் போகும்போது பாலோ, பழமோ இருந்தால் போதும்" என்றான்.

பூபதியும், வேங்கடவனும் பல பல விஷயங் களைப் பேசிக் கொண்டிருந்தனர்.

"வேலூரில் நிலைமை மிகவும் சிக்கலாக இருக்கிறது. மன்னர் படுத்த படுக்கையாயிருக்கிறார். உனக்குத்தான் தெரியுமே அவருக்குப் பல மனைவியர் உண்டு என்று. ஆனால் குழந்தைப் பாக்கியம் மட்டுமில்லை. அடுத்த வாரிசு யார் என்பதில் அங்கே பலத்த போட்டி. கொப்பூரி ஜக்கராயன் தன் பிடிக்குள் விஜயநகர ராஜ்யமே வந்துவிட வேண்டுமென்று விரும்பு கிறான்" என்று கூறிச் சற்று நிறுத்தினான் வேங்கடவன்.

"விஜயநகர சாம்ராஜ்யத்திற்கு நேர்ந்ததைப் பார்த்தால் கடவுளின் லீலையை எண்ணி வியப் படையத் தோன்றுகிறது. எத்தகைய மகோன்னத நிலையிலிருந்த சாம்ராஜ்யம் இப்படியாகிவிட்டதே என்று வேதனையாயிருக்கிறது. ஜக்கராயன் பெருந் தனவந்தன். பல தடவை என்னிடம் மதிப்பு மிகுந்த நகைகளைச் செய்ய உத்தரவிட்டிருக்கிறான்" என்றான் பூபதி.

தேவைப்படும் போதெல்லாம் சக்கரவர்த்திக்குப் பணம் கடனாகக் கொடுத்து அவரைத் தன் பிடியில் சிக்க வைத்திருக்கிறான். இரகசியமாக இந்தச் செய்தியைச் சக்கரவர்த்தியே என்னிடம் கூறி வேதனைப்பட்டார். அந்த ஜக்கராயனின் சகோதரியும் அரசிகளுள் ஒருவர் என்பது உனக்குத் தெரியுமா? அவளிடம் மாமன்னர் வேங்கடவனுக்குக் கொள்ளை ஆசை. அதை வைத்துக் கொண்டு ஜக்கராயன் நாட்டையே ஆட்டிப் படைக்க விரும்புகிறான். இப்போதுள்ள சிக்கல் முற்றியிருக்கிறது. அதனால் தான் என்னை அழைத்திருக்கிறார் மன்னர்" என்றான் வேங்கடவன்.

"அவர் பெயரும் வேங்கடவன். உன் பெயரும் வேங்கடவன். என்ன ஒற்றுமை. உன் தந்தை அரச விசுவாசமாக அவர் பெயரையே உனக்கிட்டிருக்கிறார். அவர் அழைத்தால் போய் வர வேண்டியதுதானே? மன்னரின் பார்வை விழ்ந்து விட்டால் மகத்தான அதிர்ஷ்டம் தான் என்று கண்ணைச் சிமிட்டினான் பூபதி.

"அது சரியப்பா; மாளிகையை விட்டுப் பல நாட்கள் பிரிந்திருக்க முடியவில்லையே. வயதான தாயாரை யார் பராமரிப்பில் விட்டுச் செல்வது?" என்றான் வேங்கடவன்.



"அந்தக் குறையைத் தீர்க்கத்தானே நான் வந்திருக்கிறேன். மரகதத்திடம் எல்லா பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டு, இனி நீ வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை என்று சுற்றலாம்" என்றான்.

வேங்கடவன் சிறிது நேரம் பேசவில்லை. பிறகு, "பூபதி தக்க சமயத்திற்குத்தான் நீ இவளை - இவள் பெயர் என்னவென்று சொன்னாய்...?" என்று கேட்டுப் பாதியில் நிறுத்தினான்.

"மரகதம்... என்றான் பூபதி, அதற்குமேல் வார்த்தைகள் ஏதும் சொல்லாமல் அவனையே பேச விட்டு. அப்போதுதான் வேங்கடவன் மனத்திலிருப்பது வெளியேற்றப்படும் என்ற எண்ணத்தில்.

"ஆ , மரகதமா! நல்ல பெயர். பார்க்கவும் நன்றாக இருக்கிறாள். குணமும் நன்றாகத்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீ சிபாரிசு செய்யமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். அழகும் - குணமும் உடைய இவளை நீ மணக்க முற்படாமல் என் மாளிகையில் பணி செய்ய அழைத்து வந்ததிலிருந்தே என் மீது உனக்குள்ள அன்பும், மதிப்பும் தெரிந்து விட்டது... நல்ல சமயத்தில்தான் அழைத்து வந்தாய். இன்று நல்ல நாள். இன்றிலிருந்தே மரகதம் மாளிகையில் சேர்ந்து விடட்டும். ஏனெனில் நான் நாளையோ மறுநாளோ வேலூர் போகும்படி நேரிடலாம். செஞ்சிக்கும் செல்ல வேண்டும். நான் மற்ற வேலைக்காரர்களை அழைத்து அறிமுகப்படுத்தி மரகதம் இட்ட பணியைச் செவ்வனே செய்யுமாறு உத்தரவிடுகிறேன்" என்று மூச்சு விடாமலம பேசி நிறுத்தினான்.

பிறகு களைப்புற்றவன் போல் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டான்.

"பூபதி, உனக்குப் பசிக்கவில்லையா? நீ வருவாய் என்று எனக்குத் தெரியாது. விருந்து உணவு இல்லை. எளிய முறையில்தான் எல்லாம் சமைக்கப்பட்டிருக்கும். புலால் கிடையாது" என்று கூறிப் பெரிதாக நகைத்தான்.

பிறகு மெல்லிய குரலில், "மதுவகை உண்டு. என்னால் மதுவைத் தவிர்க்க முடியவில்லை" என்றான்.

பூபதி மெல்ல நகைத்தான். அவனுக்கு மதுவைக் கட்டோடு பிடிக்காது. ஆனால் புலால் உணவை வெறுப்பவனல்லன். மரகதமோ புலாலைக் கண்டாலே காததூரம் ஒடி விடுவாள். மதுவைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். எப்படித்தான் இந்த மாளிகையில் காலந்தள்ளப் போகிறாளோ! என்ற சிந்தனையிலிருந்த வனை, "பூபதி, வா எழுந்திரு. அரை வயிற்றிற்காவது உண்டு பசியாறலாம். நீ இங்கேயே தங்கிவிடு. காலையில் மாளிகையைச் சுற்றிப் பார்க்கலாம்." என்ற குரல் பூபதியைச் சுய நிலைக்குக் கொண்டு வந்தது.

பூபதியின் தோள்களில் கையைப் போட்டுக் கொண்டு, உணவுக்கூடத்திற்கு அழைத்துச் சென்றான் வேங்கடவன்.

ஒரே சமயத்தில் இருநூறு பேர்கள் அமர்ந்து உண்ணும் அளவுக்கு விசாலமான கூடம். சரவிளக்குகள் தொங்கின. ஆனால் அளவான வெளிச்சம் வரும் வகையில் ஓரிரண்டு விளக்குகள் மட்டும் ஏற்றப் பட்டிருந்தன. பாலாற்றிலிருந்து குளுமையான காற்று வீசிக் கொண்டிருந்தது. திரைச்சீலைகள் காற்றில் அசைந்தன. வெளியே கரிய இருள் சூழ்ந்திருந்தது. தவளைகளின் ஒலமும், சில வண்டுகளின் சப்தமும் இருளின் வலிமைக்குச் சுருதி சேர்த்தன. கைகால் முகங் கழுவப் பணியாள் ஆயத்தமாக செம்பில் நீருடன் நின்றிருந்தான். கைகளைத் துடைத்துக் கொள்ள வஸ்திரத்திதுடன் ஒருவன் நின்றிருந்தான்.



இரண்டு மணைகள் போடப்பட்டிருந்தன. அவை கருத்தேக்கினால் ஆனவை. அமர்ந்து உண்ணத் தகுந்த அளவுக்கு விசாலமானவைவ நான்கு முனைகளிலும் வெள்ளிப் பூண் போடப்பட்டிருந்தது.

எதிரே நுனி வாழை இலை. அகன்ற இலை. அருகே வெள்ளிச் செம்பில் தண்ணீர்க் குவளை.

வேங்கடவன் நின்று ஒருமுறை நோக்கினான். இப்படி இலை போடப்பட்டு ஆயத்தமாக இருப்பது இதுவே முறை. தக்க சமையல்காரரும், பரிமாறுபவரும் இல்லாததால் பல சமயங்களில் அவனே கூச்சலிட்டு வேலைக்காரர்களை ஏவ நேர்ந்திருக்கிறது. யாரையும் விருந்தினராக அழைக்காததால் விதரணையும் தெரியாதிருந்தது.

"இலை மட்டும் பெரிதாகப் போட்டிருக்கிறேன். பரிகாசம் செய்யாதே பூபதி" என்று வேங்கடவன் சொல்லிக் கொண்டே அமர்ந்தான்.

இருக்கும் உணவு வகைகளைக் கொண்டு இலை நிரம்பியது. சூடாக சோறு ஆவி பறக்கப் பரிமாறப் பட்டது. மரகதம் புத்துருக்கு நெய்யை எடுத்து வந்து அன்னத்தின் மீது வார்த்தாள். குனிந்து நிமிர்ந்து அவள் பரிமாறிய பாங்கு வேங்கடவன் மனத்தில் நிறைவைத் தந்தது.

ஏதேதோ பொது விஷயங்களைப் பேசிக் கொண்டே இலையில் விழுவதைத் தீர்த்தார்கள். இடையிடையே இருவரும் 'ஹோ ஹோ' என்று நகைத் தார்கள்.

எசமானர் அவ்வாறு சிரித்தே பார்க்காத வேலைக் காரர்களுக்கு வியப்பாக இருந்தது. கூடத்திலுள்ள கதவின் ஓர் ஓரமாக முகத்தை மட்டும் காட்டியவாறு மரகதம் நிற்பதை வேங்கடவன் காணத் தவறவில்லை.

அளவாக உப்பைப் போட்டுச் சென்றதையும் கவனித்தான்.

"அப்பாடா, இன்று ஏதோ அறுசுவை விருந்து உண்ட திருப்தி ஏற்படுகிறது பூபதி" என்று கூறிக்கொண்டே மஞ்சத்தில் சாய்ந்தான்.

"வெற்றிலை, வாசனைப் பாக்கு, ஏலக்காய், லவங்கம், கிராம்பு உட்பட ஒரு வெள்ளித் தட்டில் மரகதமே தாம்பூலத்தைக் கொண்டு வந்து பீடம் ஒன்றில் வைத்துவிட்டு அங்கிருந்து செல்ல முயன்றவளை வேங்கடவன் கை தட்டி அழைத்தான்."

மரகதம் வந்துத் தலை குனிந்து நின்றாள்.

"உன் பெயர் என்ன?" என்று அவளை உற்று நோக்கியவாறு கேட்டான் வேங்கடவன்.

"மரகதம்" என்று மெல்லிய குரலில், ஆனால் தெளிவாக அழுத்தந்திருத்தமாகக் கூறினாள் மரகதம். பெண்களுக்குரிய நாணமிருந்தது. அதேபோல ஒரு பணிப்பெண் விடை கூறுவது போன்ற பாங்குமிருந்தது. தைர்யமும் கலந்திருந்தது.

"பூபதி உன்னிடம் சகலமும் கூறினானா?" என்று வேங்கடநாதன் கேட்டான்.

"உம்; சொன்னார்" என்று மரகதம் சற்றுத் தெளிவாகவே கூறினாள்.

"மாளிகையைச் சுற்றிப் பார்த்தாயா?"

"இல்லை..."

"மேல் மாடம் சென்றாயா?"

"ஆம்; அங்கே சென்று தங்கள் தாயாருக்கு வணக்கம் தெரிவித்தேன். இரவு உணவை வெள்ளிக் கிண்ணத்தில் கலந்து சென்று ஊட்டினேன். படுக்கையை மாற்றினேன். தேன் கலந்த சூரணம், வைத்தியர் குறிப்பிட்டதுபோல் கொடுத்தேன். பனிச்சாரல் அடிக்காவண்ணம் சாளரத்தை மூடினேன். போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டு வந்தேன்."



அவள் கூறுவதை வாய் மூடாமல், கண் இமைக்காமல் கேட்டவாறிருந்த வேங்கடவன், "பேஷ், பேஷ்" என்ற இரண்டே வார்த்தையைக் கூறினான்.

"நாளைக் காலையில் சந்திப்போம்; பூபதி சௌகரியமாகத் தூங்கு. மரகதம், உனக்கென்று ஓர் அறையை ஏற்படுத்திக் கொள். பயமின்றி இன்றிரவு உறங்கு. நாளைக் காலையில் சந்திக்கிறேன்" என்றான். கொட்டாவி வந்தது. உறக்கம் அவன் விழிகளைச் சுழற்றியதால் அப்படியே கண்ணயர்ந்தான்.

பூபதியும், மரகதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 8

**வே**ங்கடவனிடம் விடைபெற்றுக் கொள்ளும் போது ஒரு முறையாவது மரகதத்சை் சந்திக்க முடியுமா என்று ஆவலுடன் எதிர்பார்த்தான் பூபதி. "போய் வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொள்வதற்காக அன்று, இரத்தின ஹாரத்தைக் குறித்து நினைவு படுத்தவே,

விடைகொடுத்தனுப்பிய வேங்கடவன், மரகதத்தை பார்க்க முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் புறப்பட முயன்ற பூபதியை நோக்கி, "மரகதத்திடம் வேண்டுமானால் சொல்லிவிட்டுச் செல். எப்படி யெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி முன்பே அறிவுரை கூறியிருப்பாய். மிகவும் நம்பிக்கையாக நடந்து கொள்வது ஒன்றே நான்

விரும்புவது. இந்த மாளிகையையே நான் ஒப்படைக்கிறேன். பொக்கிஷ அறையை உன்னிடம் காட்டினேன் அல்லவா? அந்தப் பொக்கிஷ அறையில் தங்க நாணயங்கள் ஏராளமாக உள்ளன. பொன் ஆபரணங்கள் உள்ளன. நவரத்தினம் பதித்த ஹாரங்கள் உள்ளன. வெள்ளி, தங்கப் பாத்திரங்கள் உள்ளன. என்னிடம் கணக்கில்லை. பாசம் பிடித்து, புழுதி படிந்து இருளில் கிடக்கும் அவற்றை என் தந்தை உயிரைப் போல் பாதுகாத்தார். நான் என்ன செய்யப் போகிறேன். எனக்கே தெரியவில்லை. சில கிராமங்களை விலைக்கு வாங்க எண்ணியுள்ளேன். வேலூருக்குப் போய் வந்த பிறகு, என் தாயாரைக் கலந்தாலோசித்து முடிவு செய்வேன். என் தாய் - மேல் மாடிக் கூடத்தில் படுத்த படுக்கையாயிருக்கிறாளே அவள் என்று கண்ணை மூடுவாளோ - அதற்குள் முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்கிறேனோ இல்லையா - ஆஸ்தியை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். பணியாளர்களைத் தக்கமுறையில் வேலை வாங்க வேண்டும். மரகதம் சரிவர நம்பிக்கையுடன் செய்வாள் என்று நினைக்கிறேன். உன் மீதுள்ள நம்பிக்கையால் நான் மரகதத்திடம் அனைத்தையும் ஒப்படைக்கிறேன்" என்றான்.

பூபதி ஒருகணம் ஏதும் பேசவில்லை. பிறகு தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "வேங்கடநாதா, உன் நலம்தான் என் நலம் போகப் போகப் பார்த்துக் கொள்வாய். நான் போய் வருகிறேன். அவ்வப்போது வந்து பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறி முன் கூடத்தை விட்டுப் புறப்பட்டான்.

"பூபதி மரகதத்தைப் பார்த்து விட்டுச் செல்" என்று வேங்கடவன் கூறினான். இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று, பூபதி நடுக்கூடத்தை அடைந்தான்.



"மரகதம், போய் வருகிறேன். கவனமாகக் காரியங்களைச் செய்" என்று கூறியவன், அவள் காதில் மட்டும் விழும்படியாக, "என்ன நான் சொல்லியது நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

மரகதம் தலையசைத்தாள். அவளுக்குப் பயம் கவ்விக் கொண்டது.

"என்ன வாய் திறவாமல், தலையை மட்டு அசைக்கிறாய்? இன்றைக்குச் சரியாக அறுபதாவது நாள் நான் வருவேன். இரத்தினஹாரம் தயாராக இருக்க வேண்டும். அதற்குள் நம்பிக்கை மிகுந்தவளாக நீ நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் எல்லா சாவிகளும் உன்னிடம் வரும். சாவி கிடைத்த மறுநாளே காதும் காதும் வைத்தது போல் இரத்தினஹாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பழையபடி பேழையை இருந்தது இருந்தபடி பூட்டி வைத்து விட வேண்டும். என்ன தெரிந்ததா?" என்று கேட்டான்.

மரகதம் தலையை அசைத்தாள். அதற்குள் வேங்கடவன் அங்கே வருவது நிழலாடியது. பூபதி புறப்பட்டான்.

"பூபதி, ஒரு வேளை நான் நாளையே வேலூருக்குப் புறப்படலாம். திரும்பி வரும் வழியில் காஞ்சிபுரம் வருகிறேன், உன்னைச் சந்திக்கிறேன்" என்று கூறினான்.

பூபதி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவன் மனத்தில் நிம்மதி இருந்தது. வேங்கடவன் அவன் வெளிவாயிற் கதவுவரை செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான். மாளிகையின் மேற்பார்வைக்கும், குடும்ப நிர்வாகத்திற்கும் தக்கவளை பூபதி அறிமுகப்படுத்தி விட்டான் என்று திருப்தி அடைந்தான் அவன். ஆனால் இதுவரை வறுமையிலும் சிட்டுப் போல் பறந்து திரிந்த மரகதத்தின் நிம்மதி குறைந்தது.

அவளுள்ளத்தில் ஏற்பட்ட சலன வட்டம் மெல்ல மெல்லப் பெரிதாகியது..

★★★

மூன்றாம் நாளே வேங்கடவன் வேலூருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டான். அவனது பிரத்யேக அறையின் சாவி, படுக்கை அறையின் சாவி யாவற்றையும் மரகதத்திடம் ஒப்படைத்துச் சென்றான்.

மரகதம் வேலைக்காரர்களின் உதவிகொண்டு ஒட்டடைகளை அடித்தாள். தரையில் விரிக்கப் பட்டிருந்த கம்பளங்களைத் தூசு தட்டிப் போட்டாள். சாளரத் திரைச் சீலையினை மாற்றினாள். மஞ்சத்தையும் மற்றும் அந்த அறையிலிருந்த பொருள்களின் மீது படிந்திருந்த தூசுகளைத் தட்டினாள். அப்படி மஞ்சத்தைச் சுத்தப்படுத்தும் போது சிறு பை ஒன்றில் தங்க நாணயங்களும். வைரக் கற்களும் வைக்கப் பட்டிருந்தன. அது மஞ்சத்தின் அடியில் கிடப்பதைக் கண்டாள். வைரக் கற்களின் மதிப்பு மிக அதிகமாக இருக்கும் என்பதை உணர்ந்தாள். பல காலமாக அந்தப் பை அங்கே இருந்திருக்க வேண்டும் - அதைப் பற்றிய நினைவு எசமானருக்கு இருக்க நியாயமில்லை. ஒரு வேளை அவருக்குத் தெரிந்திருக்காது.

மரகதம் யோசித்தாள். எடுத்து மறைத்து வைத்துக் கொள்ளலாம். இரண்டு மாதங்கள் கழித்துப் பூபதி வந்தால் கொடுத்துவிடலாம் என்று எண்ணினான். பையை எடுத்து மறைவாக ஓரிடத்தில் வைத்து விட்டாள். சிறிது நேரம் அவளுக்கு வேலையே ஓடவில்லை. உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பது நியாயமா என்று மனச்சாட்சி கேடடது. அப்படிக் கேட்டால் பூபதியாலேயே வளர்ந்த நாம் அவர் கோரிக்கையை நிறைவேற்றுவது தானே நியாயம்?



பூபதியா - எசமானரா என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். எசமானருக்குத் துரோகம் செய்க் கூடாதென்றால் அந்த வீட்டில் பணியாற்றக் கூடாது. அந்த வீட்டில் பணியாற்றாமல் வெளியேறினால் பூபதியிடம் என்ன செல்வது? தனக்கு ஏற்பட்ட சங்கடமான நிலையிலிருந்து மீள்வதற்காகத் தானே நம்மை இங்கு அனுப்பியுள்ளார். மிக நம்பிக்கையுடனே அனுப்பியுள்ளார். நம்பியவரை ஏமாற்றலாமா? துரோகமல்லவா? எந்தத் துரோகம் சிறந்தது. இப்போது தான் அறிமுகமான எசமானருக்குத் துரோகம் செய்வதா? அல்லது வளர்த்த குடும்பத்திற்கு எவ்வளவோ உதவிகள் செய்த பூபதிக்குத் துரோகம் செய்வது சரியா?

அன்றெல்லாம் அவளுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. மாளிகையையும், சுற்றிலுமுள்ள தோட்டத்தையும் சிந்தித்தவாறு சுற்றி வந்தாள்.

வேங்கடவனின் தாயார் மங்கம்மாள் படுத்திருக்கும் மேல் மாடத்திற்குச் சென்றாள். நல்ல மஞ்சள் நிறமேனி நோயால் சுருங்கி வற்றிக் கிடந்தது. தும்பைப் பூவைப்போனறு தலைமுடி முழுவதும் வெளுத்திருந்தது. மனநோயும் உடல்நோயும் சேர்ந்து அவளை வருத்திக் கொண்டிருந்தன என்பது அவள் முனகிக் கொண்டிருப்பதிலிருந்து தெரிந்தது. எப்பொழுதும் மயக்க நிலை போன்று உறங்கிக் கொண்டிருந்தாள்.

மங்கம்மாளின் கணவர் அச்சுதநாதன் இறந்த பிறகு மங்கம்மாளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி உடலை வருத்திவிட்டது. கணவர் இறந்தவுடன், வீணே மாளிகையில் வசித்துக் கொணடிருந்த உறவினர்களை யெல்லாம் வீட்டைவிட்டுப் போகச் சொன்ன தன் மகனின் போக்குக் கூட அவளுக்கு வேதனை தரவில்லை, ஒரே மகன் வேங்கடநாதன் திருமணம்

செய்துகொள்ளவில்லையே என்ற கவலை தான் அவளுக்கு. வேலூர் மன்னர் அவளுக்கு நெருங்கிய உறவினர். அரச குடும்பத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளப் பெரிதும் விரும்பினாள். எந்தச் சொல்லுக்கும் கட்டுப்படும் வேங்கடவன் திருமணப் பேச்செடுத்தால் முகத்தைச் சுளித்துக் கொள்வதைப் பார்க்கப் பார்க்க மங்கம்மாளுக்கு வேதனை அதிகரித்தது.

பிரம்மாண்டமான மாளிகையில் குடும்ப விளக்காக மருமகள் ஒருத்தி திகழவேண்டும் எனும் அவள் கனவு ஈடேறாமலிப்பது மேலும் நோயை வளர்த்தது. மேல்மாடத்திலிருந்து கீழே இறங்கி வர முடியாமல் கால்கள் மரத்துப்போயின. நீராடிப் பல மாதங்களாகிவிட்டன. இதமான வெந்நீரால் உடலை ஒரு பணிப்பெண் துடைத்துவிடுவாள். அவள் ஊமை. அதனால் அவளிடம் ஏதும் பேசி மனக் குறையை இறக்க முடியாது. வேங்கடவனும் தாயிடம் பேசுவதற்கு நேரமின்றி அலைந்து கொண்டிருந்ததால், தன் உள்ளத்து உணர்சியை வெளியிட முடியாமல் தவித்தாள். தவிப்பு வேதனையை வளர்த்தது. வேதனை உடல் நோயை அதிகமாக்கியது.

மரகதம் வந்ததிலிருந்து மங்கம்மாள் புதுத் தெளிவு பெற்றாள். மரகதத்தின முகத்தைக் காணவே அவளுக்கு மகிழ்ச்சியாயிருநத்து. வந்த மறுநாளே மரகதத்தின பணிவிடைகளால் இதய சுகத்தை அடைந்தாள். கனி வான பார்வை, கனி போன்ற பேச்சு மங்கம்மாளுக்குப் புத்துணர்ச்சியை அளித்தன.

மரகதம் குழப்பமான மனநிலையுடன் மேல் மாடத்திற்குச் சென்ற போது மங்கம்மாள் அவளை அழைத்தாள். மங்கம்மாள் தன் பெயரைச் சொல்லி அழைத்தது கண்டு திடுக்கிட்டாள் மரகதம்.



"என்ன அம்மா?" என்று கேட்டவாறு அவள் அருகே சென்றாள்.

"இப்படி உட்காரு" என்று சைகை காட்டினாள். சிறிது நேரம் மரகதத்தைக் கால் முதல் தலை வரை உற்றுப் பார்த்தவாறிருந்த மங்கம்மாள் அவளைப் பற்றி விசாரிக்கலானாள். மரகதம் கணீரென்றும், அதேபோதில் கனிவுடனும் மறுமொழி கூறினாள்.

"வேங்கடவன் எங்கே போயிருக்கிறான்?" என்று கேட்டாள் மங்கம்மாள்.

"வேலூருக்கு, அம்மா" என்றாள் மரகதம்.

"வேலூருக்கா?" என்று ஆவலுடன் கேட்ட மங்கம்மாள், "வேலூருக்குப் போயிருக்கிறான் என்று நிச்சயமாகத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"அப்படித்தான் நினைக்கிறேன். வருவதறகு ஒரு வாரம் ஆகும் என்று சொன்னார். ஏனம்மா, ஏதாவது காரியம் ஆக வேண்டுமா அதற்கிடையில்?" என்று கேட்டாள் மரகதம்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று கூறித் தலையசைத்த மங்கம்மாள், "அவன் வேலூருக்குப் போயிருக்கிறான் என்பதைக் கேட்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறது. என்ன காரணத்திற்காகப் போயிருக்கிறான் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

அதைப்பற்றி எனக்குத் தெரியாதம்மா. நான் இந்த மாளிகையில் சேரும்போது வேலூரிலிருந்து வீரர்களும் - தூதுவர் ஒருவரும் வந்திருப்பதைப் கண்டேன். வேலூர் மன்னர் அழைப்பு அனுப்பியிருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்," என்றாள்.

"திருமண விஷயமாய்த்தானிருக்கும். வேலூர் சக்கரவர்த்தி எவ்வளவு காலமாகக் கேட்கிறார், தன்

சகோதரியின் மகளைக் கல்யாணம் செய்து கொள்ளு மாறு. அந்தப் பெண்ணை நான் பார்த்திருக்கிறேன். மிக அழகானவள். அழகு இருக்கட்டும். சக்கரவர்த்தியின் எண்ணம் என்ன என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் மங்கம்மாள்.

மரகதத்திற்கு எப்படித் தெரியும்? தலையை அசைத்தாள் தெரியாது என்பதற்கு அடையாளமாக.

"வேலூர் மன்னருக்கு வாரிசு இல்லை. தனக்குப் பிறகு சகோதரியின் மகளை மணக்கப் போகிறவரைத் தான் பட்டத்துக்கு உரியவராக நியமிக்கப் போகிறார். சகோதரியின் மகளை வேங்கடவன் மணந்து கொண்டால் பட்டத்து உரிமை கிடைக்கும்" என்று கூறிச் சற்று நிறுத்தினாள்.

தொடர்ந்து பேசியதால் மூச்சு இரைத்தது.

"அம்மா, கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங் கள். இன்று அதிகம் பேசியிருக்கிறீர்கள்" என்று அநுதாபத்துடன் பேசினாள் மரகதம்.

"எனக்கு எவ்வித உடல் நோயும் இல்லை மரகதம். வேங்கடவனின் தந்தை, என் கணவர் இறந்த வருத்த மிருக்கிறது. அதைவிட வேங்கடவன் தன் திருமண விஷயமாகப் பிடி கொடுக்காமல் இருக்கிறானே, அதுதான் மிக அதிக வருத்தத்தை அளிக்கிறது. உடல் நோய் உள்ளது போல் புலப்பட அதுவே காரணம். வேலூர் சம்பந்தத்தை அவன் ஒப்புக் கொள்ளட்டும். நான் உடனே எழுந்து உட்கார்ந்து விடுவேன்" என்றாள்.

தொடர்ந்து, "வேங்கடவனுக்கு வேறு இடத்தில் பெண் கிடைக்காதா என்ற நீ கேட்கலாம். என்ன இருந்தாலும் வேலூர் சம்பந்தத்தால் விஜயநகர சசம்ராஜ்ய மன்னராவது போல் ஆகுமா? நல்ல வாய்ப்பை உதறித் தள்ளுகிறானே. ஒருவேளை மனம்



திருந்தி, சம்மதம் தெரிவித்து வரச் சென்றிருக்கலாம். பெண்ணே! நீ வந்த அதிர்ஷ்டம் இந்த மாளிகையில் நல்ல காரியமொன்று நடக்கட்டும்" என்றாள் மங்கம்மாள்.

மரகதம் ஒன்றும் பேசவில்லை. ஒருவேளை திருமணம் நிச்சயமாகி, இந்த மாளிகைக்கு எசமானி யம்மாளாக இளவரசி வந்துவிட்டால் தன்னுடைய சேவை இங்குத் தேவைப்படாமல் போய்விடலாம். மிக விரைவிலேயே திருமணம் நடந்து விட்டால், மாளிகையில் தான் சுதந்திரமாக நடமாட முடியாமல் போய்விட்டால், பூபதி கேட்ட இரத்தினஹாரத்தை எடுத்துத் தர முடியாமலேயே போய் விடலாம். கடவுளே, திருமண முயற்சி வெற்றி பெறக் கூடாது என்று மரகதம் மனத்திற்குள்ளேயே வேண்டிக் கொண்டாள்.

"என்ன சொல்கிறாய் பெண்ணே?" என்று மங்கம்மாள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை. தாங்கள் உணவருந்தும் நேரம் வந்து விட்டதே. ஏதாவது ஆகாரம் கொண்டு வரட்டுமா என்று கேட்கிறேன்" என்றாள் மரகதம்.

"உம், கொண்டு வா, கொண்டுவா! இன்று சற்றுத் தெம்புடன் இருக்கிறேன்" என்றாள் மங்கம்மாள்.

தன்னிடம் வைத்துக் கொண்டிருந்த வைரக்கற்கள் நிறைந்த பையை என்ன செய்வது என்று தோன்றாமல், பையை மங்கம்மாள் படுத்திருக்கும் கட்டிலருகே மறைத்து வைத்துவிட்டு, உணவு கொண்டுவரச் சென்றாள். ஒருவிதத்தில் நிம்மதியாக இருந்தது மரகதத்திற்கு.

இந்தப் பை விஷயத்திற்கே நடுங்கி விட்டோமே, இரத்தின ஹாரத்தை எப்படி எடுத்துப் பூபதியிடம் கொடுக்கப் போகிறோமோ என்று கவலையடைந்தாள்.

மாளிகைக்கு வந்து பணியாற்றத் தொடங்கிய ஒரு வாரத்திற்குள்ளாகவே எசமானர் வேங்கடவனின் குணங்களைப் பூரணமாக அறிந்து கொண்டாள் மரகதம். 'ஒருவரையும் நம்பமாட்டார்; ஒருவனுடனும் கலகலப்பாகப் பேச மாட்டார்' என்று புரிந்து கொண்டாள் மரகதம் மற்ற வேலைக்காரர்களிடம் பேச்சுக் கொடுத்ததிலிருந்து.

ஒருநாள் தூங்கி எழுந்திருக்கும்போது மரகதத்திற்கு ஒரு யோசனை தோன்றியது. மேல் மாடத்திற்குச் சென்றாள்; மங்கம்மாவின் கட்டிலருகே மறைத்து வைத்திருந்த வைரக் கற்கள் அடங்கிய பையை எடுத்து வந்தாள். வேங்கடவன் படுக்கை அறையில் உள்ள மரப் பெட்டிக்குள் வைத்துவிட்டாள்.

அப்படி அவள செய்தது நல்லதாகப் போய்விட்டது. வேங்கடவன் வேலூரிலிருந்துத் திரும்பி வந்து விட்டான். வந்த உடனேயே தன் தாயாரைப் பார்க்க மேல் மாடத்திற்குச் சென்றான். தாயாரின் உடல் நலனைக் குறித்து விசாரித்தான். முன்பை விடத் தாய் தெளிவுடனிருப்பதை உணர்ந்தான். முகமலர்ச்சி யுடன் பேசுவதையும் தெரிந்து கொண்டான்.

"வேலூருக்குச் சென்று வந்ததைப் பற்றி விசாரித்தாள் மங்கம்மாள்."

"சென்ற காரியம் காயா, பழமா?" என்று புன்முறுவலுடன் கேட்டாள் மங்கம்மாள் தன் மகனை.

"இதில் என்ன காயும் - பழமும் இருக்கிறது? சொந்த விஷயமாக நான் போகவில்லையே; காய்-பழம் பிரச்சினையே எழவில்லையே? என்றான் வேங்கடவன் தாயாரின் முகத்தை உற்று நோக்கியவாறு.

தாயின் முகம் மாறியதைக் கவனித்தான்.

"அம்மா, எதைப்பற்றிக் கேட்கிறீர்கள்?" என்றான் வேங்கடவன்.



"உன் கல்யாண விஷயத்தைத்தான். வேலூரில் மகாராஜாவைச் சந்தித்தாயா?"

"அவர் தானே என்னை அழைத்தார். சென்றேன் ஒரு வாரம் வேலூரில் தங்கியிருந்தேன்."

"அவர் என்ன சொன்னார்? நீ என்ன சொன்னாய். அப்பா இருந்திருந்தால் அவரே சென்று பேசியிருப்பார்..." என்று மங்கம்மாள் கல்யாணத்தைப் பற்றி பேசினாள்.

"எதைப்பற்றிக் கேட்கிறீர்கள்? தாயே? தந்தை இருந்திருந்தால் அவரே சென்று என்ன முடிவு செய்திருப்பார்? வேலூரில் மகாராஜாவின் நிலை கவலைக்கிடமாயிருக்கிறது. பொக்கிஷத்தில் நிதி நிலைமையும் சரியாக இல்லை. பத்தாயிரம் வராகன் உடனடியாகத் தேவையாம். செஞ்சி அரசரைக் கேட்டு வாங்கித் தருமாறு கேட்டார் மகாராஜா. படுத்த படுக்கையாயிருக்கிறார்..." என்றான் வேங்கடநாதன்.

மங்கம்மாள் திடுக்கிட்டாள். "செஞ்சி அரசரையா? செஞ்சி அரசர் இப்போது கப்பம் கட்டுவதில்லையே. அவர் தான் சுதந்திரமாக ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டாரே! அது சரி, உன் திருமண விஷயம் என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

"ஒன்றும் ஆகவில்லையே. அதைப் பற்றி ஏதும் பேசவில்லை. வேலூர் வாரிசுக்கு ஏகப்பட்ட போட்டியிருக்குமென்று தெரிகிறது. வாரிசுப் போட்டியால் பெரிய கலகமே வந்துவிடும் போல் தோன்றுகிறது. நான்அங்கே சென்றதிலிருந்து அறிந்தது, இனி மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதைத்தான். நமது பொக்கிஷத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இன்னும் காவல் வீரர்கள் சொந்தமாக நியமித்துக் கொள்ள வேண்டும்" என்றான்.

மங்கம்மாள் பெருமூச்சு விட்டாள். பொக்கிஷம் பொக்கிஷம்... பொக்கிஷத்தைப் பூதம் காக்குமாறு விட்டுவிடாதே. ஒரு நாளாவது அந்த அறையைத் திறந்து பார்த்தாயா? தூசு தட்டி, பாசம் நீக்கி வைத்தாயா? என் உயிர் போவதற்குள் உனக்கு ஒரு கலயாணம் செய்து பார்க்க ஆசைப்பட்டேன். வேலூருக்கு வாரிசு ஏற்படுவது இருக்கட்டும். உனக்கு வாரிசு வேண்டாமா? நான் பேரக் குழந்தையை ஒரு தடவையாவது முத்தமிட்டுக் கொஞ்சிவிட்டுக் கண்ணை மூட வேண்டாமா?" மங்கம்மாள் குரலில் வேதனை புலப்பட்டது.

வேங்கடவன் மெல்ல நகைத்தான். "பேரக் குழந்தைதானே? கடவுள் சித்தத்தால் வேண்டியது கிடைக்கும். எதற்காக இப்படியெல்லாம் வேதனைப் படுகிறீர்களோ? நாளையே பொக்கிஷ அறைக்குச் சென்று பார்க்கிறேன். செங்கல்பட்டுக் கோட்டையை யாவது, கருங்குழிக் கோட்டையாவது விலைக்கு வாங்க நினைக்கிறேன். அல்லது ஏழெட்டுக் கிராமங்களைப் பாலாற்றங்கரையை ஒட்டி வாங்கலாம், செழிப்பான பூமி. அப்புறம் தான் கல்யாணப் பேச்சு. பிறகு பெயரன், பெயர்த்திக்குக் கேட்க வேண்டுமா?" என்று கூறிப் பெரிதாக நகைத்தாள்.

அங்கிருந்து கீழே செல்ல நினைத்தவனை மங்கம்மாள் அழைத்து, "அப்படியானால் பெண் பார்த்து வைத்திருக்கிறாயா? நல்ல குணசாலியான பெண்ணாகப் பார்த்து நிச்சயப்படுத்திக் கொள். குலம் கோத்திரம்... அந்தஸ்து எல்லாம் பார்க்காமல் வெறும் அழகு ஒன்றை மட்டும் மனத்திலே நினைத்து யாரையாவது நிச்சயம் பண்ணிவிடப் போகிறாய் வேங்கடவா" என்றாள்.



வேங்கடவன் தாயைப் பாாத்து மெல்ல நகைத்தான். "அம்மா, ஆறு மாதங்களாக ஒரு வார்த்தை கூடப் பேச முடியாமல் நோயின் கோரப் பிடியில் சிக்கியிருந்தீர்கள். வைத்தியர்களுக்கே நோய் பிடபட வில்லை. நான் வேலூர் போய் வந்த இந்த ஒரு வாரத்தில் உங்களிடம் மகத்தான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. உடல் நிலை குணமாகிவிட்டது என்று நினைக்கிறேன். வீணாகக் கவலைப்பட்டு மீண்டும் நோயை வரவழைத்துக் கொள்ளாதீர்கள்" என்றான் வேங்கடவன்.

"என் நோய் மன நோய். அதைத் தீர்க்கும் மருந்து உன்னிடம்தான் இருக்கிறது..." என்றாள் மங்கம்மாள்.

"எல்லாம் நல்லபடியே நடக்கும்" என்று கூறியவாறு வேங்கடவன் வேகமாக இறங்கித் தன் படுக்கையறையை நோக்கி விரைந்தான்.

## 9

ஒருநாள் காலையில் விடிந்து ஐந்து நாழிகை இருக்கலாம். மாளிகையின் சுற்றுச்சூழ்நிலை மிக அமைதியாக இருந்தது. மாமரங்களில் அமர்ந்து குயில் இனிய கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. தென்னை மரத்தில் ஓலைகள் காற்றில் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்தன. கரும்புலி மெல்லக் குரைத்தது. குதிரையின் காலடியோசை கேட்டது.

வேங்கடவன் இன்னும் எழுந்திருக்கவில்லை. அறைக் கதவு இன்னும் தாழிடப்பட்டிருந்தது. மரகதம் வழக்கம் போல் காலையிலேயே நீராடி விட்டு, மேல் மாடம் சென்று மங்கம்மாளுக்கு வேண்டியவற்றைச் செய்துவிட்டுக் கீழே இறங்கி வந்து மற்ற வேலைக் காரர்களுக்குப் பணிகளை இட முயன்ற போது தான் கரும்புலி குரைக்கம் சப்தம் கேட்டது.

சாளரத்தின் வழியே பார்த்தாள். பூபதி வந்து கொண்டிருந்தான். மரகதத்திற்குத் 'திக்'கென்றது. முன்பு பூபதி வருகிறான் என்றால் அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி துள்ளும். கம்பீரமான தோற்றமும், நகைச்சுவை ததும்பும் பேச்சும் அவளைக் கவரும். மாளிகையில் வேலைக்குக் கொண்டு சேர்த்த பிறகும் பூபதியை நினைக்கும் போதே மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் இன்று - ஏன் அவளுள்ளத்தில் ஒருவிதக் கலக்கம் தோன்றுகிறது?

பூபதி குதிரையை மரத்தடியில் கட்டிவிட்டுக் கம்பீரமாக நடந்து வந்தான்.

"எசமான் இன்னும் எழுந்திருக்கவில்லை" என்று வேலைக்காரன் கூறிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் செய்துவிட்டான்.

பூபதி முன் கூடத்தைச் சுற்றுமுற்றும் பார்த்தான். பல மாறுதல்களைக் கண்டான். விளக்குகள் பளிச்சென்று துடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஒட்டடைகளைக் காணோம். அழுக்குப் படிந்திருந்த திரைச்சீலைகள் அகற்றப்பட்டுப் புதிய வண்ணத் திரைச்சீலைகள் காற்றிலே அசைந்தாடின. திண்டுகளுக்குப் புதிய உறைகள் போடப்பட்டிருந்தன. காலஞ்சென்ற அச்சுதநாதனின் முழு உருவ வண்ண ஓவியம் பெரிதாக எழுதப்பட்டுக் கூடத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்தது. மல்லிகையும், சம்பங்கியும் கலந்து தொடுத்த மலர்மாலை ஒன்று படத்திற்கு அணிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அம்மாலை மாட்டப் பட்டிருக்க வேண்டும். சிறிது மஞ்சள் நிறம் சேர்ந்து விட்டது.

பூபதி அந்த மாறுதல்களைச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தபோது, "வாருங்கள் ராஜ்" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பூபதி மரகதம் இரண்டாவது கட்டிற்கும், முதல் கட்டிற்கும் இடையேயுள்ள நிலைப்படிக் கதவைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். ஈரம் காய் வதற்காகக் கூந்தல் அவிழ்ந்து விரிந்து தோளில் படிந்து தொங்கியது.



"ஓ, மரகதமா? சௌக்கியமாயிருக்கிறாயா?" என்று பூபதி மெல்லியசிரிப்பு முகத்தில் தவழக் கேட்டான்.

"ஆம்; உங்கள் தயவாலும், ஆண்டவன் அருளாலும் நலம் தான்" என்றாள் முத்துப் பல் சிறிது புலப்பட.

"அப்படிச் சொல்லாதே வேங்கடநாதன் தயவு என்று சொல்லு" என்று கூறிக் கண்களைச் சிமிட்டினான் பூபதி.

"அவர் தயவு கிடைப்பதற்கும் நீங்கள் தான் காரணம். தாங்கள் எங்கள் குடும்பத்திற்கு உதவ அனுப்பியது ஆண்டவன் அருள்" என்று கூறும்போது வெறும் உபசாரமாகத் தோன்றவில்லை; உணர்ச்சி பொங்கவே கூறினாள்.

"நன்றாகவே பேசுகிறாய் மரகதம். உன் திறமை இங்கே பரிமளிக்கட்டும். உன் எசமானர் உன்னைப் பாராட்டுகிறாரா? உன் வேலை அவருக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டான் பூபதி.

"என் சாமார்த்தியத்தைக் குறைவு இன்றி இங்கே புலப்படுத்துகிறேன். இந்த மாளிகை எனக்குப் புதிய இடம் போல் தோன்றவில்லை. எப்போதோ தங்கியிருந்து பழகிய இடம் போலவே இருக்கிறது. நான் ஏதோ மாற்றார் வீட்டில் வேலை செய்வதாகத் தோன்றவே இல்லை, ஒவ்வொரு மூலையும் இடமும் என் கவனத்திலிருந்து தப்புவதில்லை" என்று மரகதம் சொல்லி வரும்போது பூபதி குறுக்கிட்டு, "பொக்கிஷ அறைக்குப் போனாயா? ஆபரணக் குவியலைப்

பார்த்தாயா? உன் கடமை ஒன்று நான் முன்பு சொன்னது நினைவிருக்கிறதா? மிக அவசரமான தேவை அது மரகதம். நெருக்கடி மிக அருகே நெருங்கி விட்டது. என் அந்தஸ்து, கௌரவம் அனைத்தும் பறிபோகாமல் இருப்பதற்கான காலக் கெடு நெருங்கிக் கொண்டிருக்கிறது. என்னைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன்னிடமிருக்கிறது. நல்ல வேளை வேங்கடநாதன் இன்னும் எழுந்திருக்கவில்லை. விடை பெற்றுச் செல்லும்போது உன்னிடம் தனியே பேச வாய்ப்பிருக்குமோ இராதோ - இப்போதே சொல்கிறேன். இரத்தின ஹாரத்தைச் சமயம் வாய்க்கும் போது எங்காவது மறைத்து வைத்துவிடு. நான் திடீரென வருவேன். என்னிடம் அதைத் தந்துவிடு. மறந்து விடாதே - மறந்த விடாதே மறந்து விடாதே" என்று கூறிப் பேச்சை நிறுத்துவதற்கும், வேங்கடநாதன் துயிலெழுந்து வருவதற்கும் சரியாக இருந்தது.

"ஆகா - நண்பரே பூபதி! வருக, வருக! எப்போது வந்தாய்? நேற்று உன்னை நினைத்தேன். உனக்கு ஆயுள் நூறு. போனது பொக நூறு வயது" என்று கூறிக் கொட்டாவி விட்டுக் கொண்டே உட்கார்ந்தான். பூபதியைப் தன் அருகே அமரச் சொன்னான்.

"வேண்டாம், வேண்டாம் நூறு வயதா! இந்த உலக வாழ்க்கை நூறு வருடங்களா? வேண்டவே வேண்டாம். அனுபவித்தது போதும்" என்றான் பூபதி.

"வேங்கடநாதன் 'ஹோ, ஹோ' என்று நகைத்தான்."

"பூபதி, ஏன் அலுப்புடன் சொல்கிறாய்? உனக்கென்ன குறைவு. அரசரும், தனவந்தரும் உன்னை நாடி வரும் முக்கியமான மனிதனாக வாழ்கிறாய. நானே உன்னைத் தேடி வர எண்ணினேன்' குதிரையில் ஏறிப் பலகாத தொலைவு சென்று வந்தேன். முன்பு போல் அலைய முடியவில்லை" என்று கூறினான். பிறகு கண்ணைச் சிமிட்டியவாறு, "அலுப்புத் தீர அயல்நாட்டு மதுவை அந்நியன் ஒருவன் கொண்டு வந்து கொடுத்தான். அதன் சுவையே சுவை. அடித்துக் கிடத்தியதுபோல் படுக்கையில் கிடந்தேன். அதனால் தான் காலையில் விழிப்பதற்கு நேரமாகிவிட்டது. நேற்று நினைத்தேன். இன்று சொல்லி வைத்தது போல் வந்தாய்? அவ்வாறு நினைத்தவர்கள் வந்தால் நூறு வயது என்று பெரியவர்கள் கூறுவர்கள். அதைத்தான் நான் சொன்னேன்" என்றான்.



"என்னைத் தேடி நீ வருவதா? அதனால்தான் நானே வந்து விட்டேன். என்ன முக்கியக்காரியமோ?" என்றான் பூபதி. பிறகு, "கொஞ்சம் குடிப்பதை நிறுத்திக் கொள். வேங்கடவா உடம்புக்குக் கெடுதல்" என்று ஆலோசனை கூறுவது போல் பேசினான்.

மெல்ல நகைத்த வேங்கடவன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்தான்.

"பூபதி, ராஜ்ய நிலைமை சரியாக இல்லை. வேலூரில் மகாராஜா படுத்த படுக்கையாய் விட்டார். அந்த நிலையிலும் அவர் செஞ்சியினின்று ஏராளமான தொகை எதிர்ப்பார்க்கிறார். வற்புறுத்துகிறார். அது கிடக்கட்டும். நான் புதிய சொத்து ஏதாவது வாங்க எண்ணுகிறேன். என் பொக்கிஷ அறையில் மிக பழமையான நகைகள் உள்ளன. அவற்றை அழித்துத் தங்கக் கட்டிகளாக்க வேண்டும். அதைச் செய்யக் கூடியவன் நீ ஒருவன் தான்" என்றான்.

பூபதியின் உடல் குலுங்கியது. மரகதம் அங்கே நிற்கவில்லை. அவர்கள் பேசும்போது அவள் அங்கே இருப்பது மரியாதைக் குறைவு என்று தன் இடத்திற்குச் சென்றுவிட்டாள்.

"பூபதி, வா, பொக்கிஷ அறைக்குச் செல்லலாம். நீ பொக்கிஷ அறையைப் பார்த்ததில்லையே என்று கூறி, அருகே இருந்த சேமக்கலத்தைத் தட்டினான். கணீரென்று வெண்கல ஒலி மாளிகை முழுவதும் ஒலித்தது. மரகதம் விரைந்து வந்தாள்.

தன் இடுப்பிலிருந்த திறவுகோலை அவளிடம் கொடுத்து "பொக்கிஷ அறையைத் திற. பல காலமாக மூடப்பட்டிருக்கும் அந்த இடத்தில் புதிய காற்று நுழையட்டும் பிரகாசமான விளக்கை ஏற்றிக் கொண்டு வா. அகிலும் சாம்பிராணிப் புகையும் கொஞ்சம் அந்த அறையில் சுழலவிடு" என்றான்.

நடுக் கூடத்தின் நடுவே அந்த அறை இருந்தது. கருங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. ஒளியோ, காற்றோ செல்ல முடியாதபடி கட்டப்பட்டிருந்த அந்த அறையின் வாயிற் கதவு கனமான இரும்புத் தகடுகள் பதிக்கப்பட்டு, பெரிய பூட்டுக்கள் பல கொண்டு, தாழிடப்பட்டிருந்தது.

கதவு திறக்கும் போது 'கிரீச்' சென்று ஒலித்தது. கணகணவென்று கதவுகளிலுள்ள சிறு மணிகள் ஒலித்தன. இரண்டு பேர் சேர்ந்துத் திறக்கும்படியான அளவுக்குப் பெரிய கதவுகள். முன் கதவுக்குப் பிறகு மற்றொரு கதவு. பிறகு படிக்கட்டுகள். மரப்பேழைகள், இரும்புப் பேழைகள் பித்தளை அண்டாக்கள் என்று அறை முழுவதும் இருந்தன.

மரகதம் கையில் பெரிய அகல் விளக்கை வைத்திருந்தாள்.

வேங்கடவன் ஒரு பேழையிலிருந்து ஆபரணங்களை எடுத்துத் தரையிலுள்ள கம்பளத்தில் மிக அலட்சியமாக வீசினான்.

விளக்கு ஒளியில் மரகதப்பச்சை, இரத்தினச் சிவப்பு, கோமேதக மஞ்சள், வைர வைடூரிய வெண்மை என அவை ஒளிவிட்டுப் பிரகாசித்தன.



"பூபதி, இந்த நகைளை இங்கே அடைய வைத்து என்ன செய்வது? இவற்றை நிறுத்து எடுத்து, வைர, இரத்தின, வைடூரிய, கோமேதக, மரகதக் கற்களைத் தக்கவர்களுக்கு விற்றுவிடு. தங்கத்தை மட்டும் உருக்கிக் கட்டிகளாக ஆக்கிவிடு. பூபதி, கருங்குழிக் கோட்டையையும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் விலைக்கு வாங்கிவிட முடிவு செய்துள்ளேன். வேலூர் மகாராஜா நிலை எப்படி மாறும் என்றே தெரியவில்லை. என்னிடம் ஏராளமான தொகை கடனாகக் கேட்கிறார். என் தந்தையிடம் வாங்கியதையே அவர் இன்றளவும் திருப்பிக் கொடுக்கவில்லை. மகாராஜா கடன் வாங்குவாரா? வாங்கி அதை வேறு ஒருவருக்குக் கொடுக்கிறார். பட்டத்துக்கு யார் வாரிசு எனும் பூசல் பெரிதாக ஆகிவிடும் என்று தோன்றுகிறது. அதற்குள் நான் சில மாற்றங்களைச் செய்ய நினைக்கிறேன். தக்க படைவீரர்களை எனக்கென்று ஏற்படுத்திக் கொள்ளப் போகிறேன். வெறும் ஆபரணங்களாக இருந்து என்ன பயன்?" - வேங்கடவன் சொல்லி நிறுத்தினான்.

பூபதி, அந்தப் பொக்கிஷ அறையையும், தரையில் கிடந்த ஆபரணங்களையும் நோக்கினான். மரகதத்தை ஒருமுறை நோக்கினான்.

அந்த ஆபரணக் குவியலில் அந்த இரத்தினஹாரம் கிடந்தது.

அந்த இரத்தினஹாரம் அவனைப் பார்த்துச் சிரித்தது.

அந்த இரத்தினஹாரம் மரகதத்தைப் பார்த்துச் சிரித்தது.

பூபதி ஒவ்வொரு ஆபரணமாக எடுத்துப் பார்த்தான்.

"நீ என்ன நினைக்கிறாய் பூபதி?" என்று கேட்டான் வேங்கடவன்.

"நான் நினைப்பதற்கு என்ன இருக்கிறது? ஆபரணங்கள் ஒன்று ஆண்டவனை அலங்கரிக்க வேண்டும். அல்லது அணங்குகளின் மேனியை அழகு படுத்த வேண்டும். இப்படி அடைபட்டுக் கிடந்தால் பூதம் கவர்ந்துவிடும் என்று சொல்வார்கள். நீ சொல்வது தான் சரி. நீ ஓர் அரசனாகும் அளவுக்குச் செல்வமும், செல்வாக்கும் உனக்கு உள்ளன. என்னை என்ன செய்யுமாறு கட்டளையிடுகிறாயோ அதை நான் செய்யக் காத்திருக்கிறேன்."

பூபதி ஒருமுறை மரகதத்தைப் பொருட் பொதிந்தவாறு நோக்கினான். மரகதத்தின் முகம் மாறியது. விளக்கொளியில் அந்த முகத்தில் பீதி படர்ந்திருப்பது தெரிந்தது.

"செல்வம்..." என்று கூறி வேங்கடவன் நகைத்தான். "உன் தந்தைக்கு மட்டும் குறைந்த அளவு செல்வமிருந்ததா? அவர் அயல் நாட்டுடன் வாணிபஞ் செய்தார். கடன்பட்டார். என் தந்தை புத்திசாலி. வாணிபம் ஏதும் செய்யவில்லை. எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலையே காரணம்" என்றான்.

பூபதிக்குச் 'சுரீர்' என்று ஏதோ ஒன்று இதயத்தைத் தாக்குவது போலிருந்தது. ஆபரணங்களை நிறுத்து எடுத்துச் செல்லும் முன்பே, இரத்தின ஹாரத்தை மரகதம் மறக்காமல் எடுத்து வைத்துவிட வேண்டுமே என்ற கவலை அவனைப் பற்றிக் கொண்டது. அதற்குச் சிறிது அவகாசம் தரவேண்டும் என்று எண்ணினான்.

இன்று அஷ்டமி. நாள் நன்றாக இல்லை. விலை மதிப்பற்ற செல்வத்தை நான் ஒருவனே தனியாக



எடுத்துச் செல்வது சரியன்று. பாதுகாப்பிற்காகக் காஞ்சியிலிருந்து மல்லர்களை அழைத்து வருகிறேன்" என்றான் பூபதி.

வேங்கடவன் சிறிது நேரம் யோசித்தான். "இந்தக் காரியம் வெளியே அதிகமாகப் பிரபலம் ஆகக் கூடாது. அதனால் நகைகளைக் காஞ்சிக்கு எடுத்துச் செல்ல வேண்டாம், மாளிகைக்குப் பொற்கொல்லர்களை வரவழைத்து விடு. இங்கேயே உருக்கிவிடுவோம். நல்ல நாளாகப் பார்த்துப் பொற்கொல்லர்களை அழைத்துவா" என்றான்.

பொக்கிஷ அறையின் கதவு மூடப்படும் வரையில் பூபதி ஏதும் பேசவில்லை.

"நான் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்றான் பூபதி.

"என்ன பூபதி, இன்று நீ கலகலப்பாக இல்லை. வந்தவுடனேயே போக விரும்புகிறாய். இருந்து உணவுண்டு தான் செல்ல வேண்டும்" என்றான் வேங்கடவன்.

"மன்னிக்க வேண்டும். உண்டபின் களைப்பு வரும். ஓய்வெடுக்கத் தோன்றும். இன்று மாலை மிக முக்கியமான காரியமிருக்கிறது. இப்போதே புறப் பட்டால் தான் உச்சிவேளைக்குப் பழைய சீவரம் போய் விடலாம். அங்கே ஆகாரத்தை முடித்துக்கொண்டு சற்று இளைப்பாறினால் மாலையில் குறிப்பிட்ட நேரத்துக்குக் காஞ்சி சென்று விடலாம்" என்றான் பூபதி.

வேங்கடவன் ஏதும் பேசவில்லை. பிறகு, "நான் இன்னும் இரண்டு நாட்களில் தஞ்சை செல்கிறேன். வருவதற்கு ஒரு மாதமாகலாம். நான் வந்த பிறகு உனக்குத் தகவல் தெரிவிக்கிறேன். நீ பொற்கொல்லர் களுடன் வந்து விடு" என்றான்.

பூபதி விடைபெற்றுக் கொண்டான். அப்போது மரகதம் ஒரு தட்டில் கனி வகைகளுடன் வந்து நின்றாள்.

"பூபதி, மரகதம் விதரணைகளைக் கற்றுக் கொண்டு விட்டாள். விருந்தினரை உபசரிக்கத் தெரிந்து கொண்டு விட்டாள். நான் இல்லாவிடினும் அவள் விருந்தினரைத் தக்கபடி உபசரிப்பாள். பழங்களை எடுத்துக் கொள். வழியில் பசிக்கு உதவியாக இருக்கும்" என்றான்.

பூபதி மரகதத்தை உற்று நோக்கினான். அவன் விழிகள் பேசின. விரைவில் வருகிறேன், இரத்தினஹாரம் நினைவிருக்கட்டும் என்று விழிகள் கூறின.

மரகதம் தலையசைத்தாள். அந்த அசைவிலும், கண்களின் சுழற்சியிலும்; "கவலையில்லாது போய் வாருங்கள்; அடுத்த முறை வரும் போது இரத்தினஹாரம் தயாராய் இருக்கும்" என்று கூறுவது தெரிந்தது.

## 10

பூபதிக்கு உறக்கமே பிடிக்கவில்லை. பொக்கிஷ அறையில் அவன் பார்த்த நரவத்தினம் பதித்த பல ஆபரணங்கள் அவன் கண் முன்னே நின்று அவன் உள்ளத்தில் பொறாமைத் தீயை ஊக்கி விட்டன. பெரு மூச்சு விட்டான்.

வேங்கடவன் நண்பன். உறவினன். அவனே சொல்கிறான் தன் தந்தை செல்வச் சிறப்புடன் வாழ்ந்ததைப் பற்றி. வரி வசூல் செய்யும் அதிகாரியிடம் இவ்வளவு செல்வக் குவியல். மகாராஜாவே பணம் கடன் கேட்கும் அளவுக்குச் செல்வம். நம்மிடம்



செல்வம் தேய்ந்து வருவானேன்? அவனிடம் சேர்ந்து வரக் காரணம் என்ன? கோட்டைகளையும், கிராமங்களையும் விலைக்கு வாங்கப் போகிறானாம். உம்..."

பொக்கிஷ அறையில் அவனுடைய குடும்ப ஆபரணம். இரத்தினஹாரம் அவனைப் பார்த்துச் சிரித்தது. அந்தச் சிரிப்பு அவன் உள்ளத்தில் நெருப்பை மூட்டியது.

"ஏ, இரத்தினஹாரமே, இன்னும் சிறிது நாட்கள்தாம். என்னிடம் வந்து விடுவாய். உன்னை என்ன பாடு படுத்துகிறேன் என்று பார்.' இவ்வளவு நாட்கள் மிகவும் நிம்மதியாகப் பெட்டியில் அடைபட்டுக் கிடந்தாய். உங்கள் அனைவரையும் பிரித்து விடுகிறேன்' நீங்கள் இனி ஓர் குடும்பத்து இளமங்கையின் கழுத்தை அலங்கரிக்கப் போகிறீர்கள். வீணே சிரிக்காதீர்கள்' என்று எச்சரிப்பது போல் பேசினான்.

வாய்விட்டே பேசியதை நல்லவேளை ஒருவரும் கேட்கவில்லை. கேட்டிருந்தால் பூபதிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று எண்ணுவார்கள்.

பூபதிக்குப் பைத்தியம் பிடிக்கும் நிலைதான். சரிவர உண்பதில்லை. உறங்குவதில்லை. குளிப்பதில்லை. சரியாக உடுத்துவதில்லை.

வேங்கடநாதன் தஞ்சையிலிருந்து திரும்பி வருவதற்குள் ஒரு தடவை பூபதி மாளிகைக்குச் சென்று மரகதத்தை எச்சரித்தும் வந்து விட்டான். வாயிற் காவலனுக்கும் தெரியாமல் ஒருவரும் அறியாமல் மாளிகைக்குச் சென்று வந்த தன் திறமையை எண்ணித் தானே வியந்தான். அப்படித் தான் வந்தது தெரிந்து விட்டால்...

மரகதத்திற்கு அவப் பெயர். தன்னையும் தான் வேங்கடவன் மதிக்க மாட்டான். அதை நினைக்கும் போதும் அவன் உடல் சிலிர்த்தது.

அதைவிட மற்றொன்றை நினைக்கும்போது அவன் உடல், உள்ளம் எல்லாம் சிலிர்த்தது. இரத்தின ஹாரத்தை உத்திரமேரூர் செல்வந்தருக்குச் செய்து தருவதற்கான கெடுநாள் நெருங்கிக் கொண்டிருந்தது... அதற்குள் மரகதம் இரத்தின ஹாரத்தை எடுத்து வைத்திருக்க வேண்டும். அப்படி அவள் எடுத்து வைத்திருக்காவிடில் தன் நிலை என்ன ஆகும்? மானம் மரியாதை எல்லாம் இழந்து இந்த உலகத்தை விட்டே போய் விடுமாறு நேரிடும்.

வேங்கடநாதன் தஞ்சை சென்றிருக்கும் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள் மரகதம். தவறி விட்டால் பிறகு வாய்ப்பே ஏற்படாது. பொற் கொல்லர்களை அழைத்துக்கொண்டு மாளிகைக்கே வருமாறு சொல்லியிருக்கிறான் வேங்கடவன். அப்போது இரத்தினஹாரத்தை ஒளித்து விட முடியாது. நிறைக்கு நிறை சரிபார்த்துக் கொடுக்க வேண்டும்.

"ஏ, மரகதம் உன்னைத் தான் நம்பியிருக்கிறேன். நான் பௌர்ணமி அன்று வந்து விடுவேன். காதும்காதும் வைத்தது போல் இரத்தினஹாரத்தை என்னிடம் கொடுத்து விடு..." பூபதி வாய்விட்டே கூவினான், அப்படி அவனால் வாய்விட்டு அவறாமல் இருக்க முடியவில்லை.

பௌர்ணமிக்கு இரு நாட்கள் இருந்தன. பூபதிக்கு உறக்கம் பிடிக்கவில்லை. விடிவதற்கு இரு நாழிகைப் போதிருந்தது. பறவைகளும் விழித்தெழவில்லை. படுக்கையினின்று எழுந்து முத்தை மட்டும் கழுவிக் கொண்டு இடையில் மறைாக உடைவாளை எடுத்துக்



கட்டிக்கொண்டு தலைப்பாகையை அணிந்துக் கொண்டு, பெரிய போர்வையை உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு குதிரை ஏறிப் புறப்பட்டான்.

குதிரையை வழக்கத்துக்கு விரோதமாக வேகமாக விரட்டினான். எசமானரின் மனநிலையை உணர்ந்த பரியும் வயிற்றுக்கு ஏதும் கேட்காமல் காற்றிலும் கடுகி விரைந்தது. பாலாற்றங் கரையை வந்தடையும் போது கதிரவன் உச்சிப் போதை நெருங்கிக் கொண்டிருந்தான். பரிக்கும் களைப்பு, பூபதிக்கும் களைப்பு.

ஆற்றில் இறங்கி ஓர் ஓரமாக சலசலவென ஓடும் நீரில் முகத்தைக் கழுவிக்கொண்டு இரண்டு வாய் எடுத்து அருந்திவிட்டு, குதிரையை மெல்ல நடத்தி அழைத்துக்கொண்டு மாளிகைக்குள் நுழைந்தான்.

"எசமான் இன்னும் வரவில்லை ஐயா" என்று வணங்கியவாறு மெல்லக் கூறிக் கதவைத் திறந்து விட்டான் பீம். கரும்புலி வாலை மட்டும் ஆட்டியது.

மரகதம் முன் கூடத்து மஞ்சத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தாள்.

அந்த வேளையில் பூபதியை அவள் எதிர்பார்க்க வில்லை, திடுக்கிட்டு எழுந்து, "வாருங்கள், வாருங்கள்" என்று அழைத்தாளே தவிர அவள் குரலில் நடுக்கமிருந்தது.

மேல் போர்வையை எடுத்து ஓரிடத்தில் வீசி, தலைப்பாகையை கழற்றி மஞ்சத்தில் போட்டுவிட்டு, "அப்பாடா!" என்று சாய்ந்தான்.

"மரகதம் உடனே ஏதாவது பருகுவதற்குக் கொடு" என்றான் பூபதி. அவன் மிகவும் களைத்திருந்தான்.

மரகதம் அவன் நிலையை உணர்ந்து கொண்டாள். ஓடோடிச்சென்று ஒரு செம்பில் மோர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"மரகதம், குதிரையும் களைத்திருக்கும். அதற்கும் ஏதாவது தீனி போடச் சொல்லு" என்று கூறிச் சாய்ந்து கொண்டான்.

குதிரைக்குத் தக்க தீனியைப் போடுமாறு வேலைக்காரர்களிடம் கட்டளையிட்டு வந்த மரகதம் பூபதியை நோக்கிக் கவலை நிறைந்த குரலில், "களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். தங்கள் முகம் மிகவும் மாறிவிட்டத. மனத்திலுள்ள கவலை வெளியே தெரிகிறது. அதிகாலையில் புறப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என்றாள்.

"மானமும் மரியாதையும் போகாமல் இருக்க வேண்டுமானால் களைப்பைக் பார்க்கக் கூடாது. மரகதம், நீ இந்த மாளிகைக்கு வந்த பிறகு என்னைப் பற்றிய கவலையே உனக்கில்லை. என்னை மறந்து விட்டாய் என்று நினைக்கிறேன்" என்றான் பூபதி, களைப்பும், சோர்வும் குரலில் ஒலிக்க.

மரகதம் பரபரப்புடன், "என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? உங்களுடைய நல்வாழ்வு தான் என்னுடைய நல்வாழ்வும், இந்த மாளிகைக்கு நான் எதற்காக வந்தேன்? வேளைக்குச் சோறுண்டு இளவரசி போல் வளைய வருவதற்காகவா? நீங்கள் கூறியதை நான் மறக்கவில்லை... என்று கூறியவுடன் பூபதி மஞ்சத்திலிருந்து துள்ளி எழுந்து, "என்ன சொல்கிறாய்? நான் கூறியதை இன்னும் மறக்கவில்லையா? மரகதம் நீ என்னும் இரத்தினஹாரத்தை எடுத்து வைக்க வில்லையா? உன்னிடமிருந்து இன்று அதைப் பெற்றுப் போக எண்ணி அல்லவா வந்தேன். உன் பேச்சு எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. பௌர்ணமி கழிந்து நான்கு நாட்களுக்கெல்லாம் அவர்கள் வந்து விடுவார்கள். நான் என்ன சொல்வேன்? என் மானம் காற்றில் பறந்து விடும். மானம் போன பிறகு நான் வாழ்ந்து என்ன பயன்?"



"மரகதம், உன்னை நான் நம்பினேன். உன் சகோதரனின் ஆவி இப்போது மேல் உலகினின்று கவனித்துக் கொண்டிருக்கும். அவன் உயிருடன் இருந்து இப்படியொரு துன்பம் எனக்கு நேர்ந்திருந்தால் அவன் சும்மாயிருந்திருப்பானா? நீ மாளிகையைக் கண்டு மயங்கிவிட்டாய். பொக்கிஷ அறையில் அந்த ஹாரத் தைப் பார்த்தாயே மறுநாளே எடுத்து வைத்திருக்கலாம். நீ நல்ல வாய்ப்பை நழுவவிட்டுவிட்டாய்... சரி; இனி எனக்கு இங்கே வேலையில்லை. நான் புறப்படுகிறேன்" என்று கூறி, தலைப்பாகையை எடுத்துக் கொள்ளாமல், மேல் போர்வையை எடுத்துக் கொள்ளாமல் பூபதி புறப்பட யத்தனித்தான்.

மரகதம் நடுநடுங்கிவிட்டாள். அவள் கண்களில் நீர் தளும்பியது. பூபதியின் எதிரே ஓடி நின்று இரு கரங்களையும் நீட்டித் தடுத்து, "நில்லுங்கள், போகாதீர்கள். நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள்" என்றாள்.

"நீ என்ன சொல்லப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். அதை நானே சொல்லி விடுகிறேனே. நேரம் சரியில்லை; சந்தர்ப்பம் சரியில்லை என்பாய்; அதுதானே?" பூபதி கோபத்துடன் கூறினான்.

"அது மட்டுமில்லை; பொக்கிஷ அறையின் திறவு கோலை அவர் இன்னும் என்னிடம் தரவில்லை" என்றாள் மரகதம்.

பூபதி திகைத்தான். "அப்படியா?" என்று கேட்டான்.

"பொக்கிஷ அறையின் திறவுகோலை என்னிடம் தருவதாக முதலில் சொன்னவர் பிறகு அதை ஒரு இரும்புப் பேழையில் போட்டு, பேழையைப் பூட்டி அதன் திறவுகோலை எடுத்துப் போய்விட்டார்" என்றாள். அவள் விழிகளில் கவலை நிறைந்திருந்தது.

"அப்படியென்றால் உன்னை வேங்கடவன் முழுவதும் நம்பவில்லையா?" என்று பூபதி கேட்டான்.

"அப்படியில்லை... பொக்கிஷ அறையின் திறவு கோலைத் தருவதாகத்தான் கூறினார். மறந்துவிட்டார் போலிருக்கிறது" என்று சமாதானமாகக் கூறினாள் மரகதம்.

"அப்படியென்றால் நீ பொக்கிஷ அறையினின்று ஹாரத்தை எப்படி எடுப்பாய்? வேங்கடவன் ஊரினின்று வந்தவுடன், நல்ல நாளாகப் பார்த்து எனக்குச் சொல்லி அனுப்பிவிடுவான். பிறகு இந்த மாளிகையை விட்டு வேறு எங்கும் செல்லமாட்டான். பொக்கிஷ அறையின் திறவுகோல் உன்னிடம் அப்போது இருந்தாலும் பயனில்லை" என்று கூறி பூபதி தன் கவலையைத் தெரிவித்தான்.

"அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். இரவுக்கு இரவு நான் அறையைத் திறந்து ஹாரத்தை எடுத்து வைத்து விடுகிறேன். நீங்கள் நம்பிக்கையுடன் வரலாம். அப்படி இல்லாவிட்டாலும் நான் உங்களுக்கு ஒரு பெரிய பை நிறைய வைரக் கற்களையும், தங்க நாணயங்களையும் தருகிறேன். இப்போதே நீங்கள் எடுத்துச் செல்லலாம்" என்றாள்.

மரகதத்தின் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளைக் கேட்டுப் பூபதி திகைத்தான். ஆனால் சிறிது யோசித்தான்.

"மரகதம், இப்போது ஏதும் எடுத்துச் செல்லக் கூடாது. நான் முன்பு ஒரு முறை வேங்கடவன் இல்லாத போது வந்ததே தவறு. இப்போதும் அப்படியே செய்துவிட்டேன். நீ சொல்வதை நம்புகிறேன். நான் வேங்கடவன் வந்தவுடன் வருகிறேன். மரகதம், நினைவிருக்கட்டும். இரத்தின ஹாரத்தையே எடுத்துக் கொடுக்க ஏற்பாடு செய்" என்றான்.



"கவலைப்படாதீர்கள். இப்போது உணவு அருந்த வாருங்கள். உண்டு களைப்பாறி காஞ்சிக்கு நிம்மதியாய்ச் செல்லுங்கள்" என்றாள்.

பூபதி மரகதத்தின் முகத்தையே உற்று நோக்கினான். அவளுடைய முகம் முன் எப்போதையும் விட அழகு நிறைந்ததாகத் தெரிந்தது. பூரணப் பொலிவுடன் சகல சௌபாக்கியங்களையும் அனுபவிக்கும் ஓர் மங்கையின் முகத்தாமரை எவ்வாறு விளங்குமோ அவ்வாறு விளங்கியது.

"போய் வருகிறேன் மரகதம். நான் வரும் அன்று நீ இரத்திரன ஹாரத்துடன் தயாராக இருக்க வேண்டும். வேங்கடவன் வந்திருந்தால் கூட நீ எப்படியாவது, அவனுக்குத் தெரியாமல் தர ஏற்பாடு செய்ய வேண்டும். எக்காரணங் கொண்டாவது நீ அன்று இரத்தின ஹாரத்தைத் தராது இருந்து விட்டால் நான் எப்படி மாறுவேன் என்று இப்போது கூற முடியாது. பிறகு வருத்தப்படுவதைவிட இப்போதே சரியான திட்டம் தீட்டிக் கொள். நான் போய் வருகிறேன்" என்று கூறிப் புறப்பட எத்தனித்தான்.

"வாருங்கள், இலை போட்டு வைத்திருக்கிறேன். எளிய உணவுதான். ஒரு வாயாவது உண்டு செல்லலாம்" என்றாள்.

பூபதி அவள் கோரிக்கைக்கு இணங்கினான். பசி அதிகமாகத்தானிருந்தது. வயிறார உண்டான். உண்ட களைப்பு; அப்படியே முதல் கூடத்து மஞ்சத்தில் கண்ணயர்ந்து விட்டான்.

விழித்தெழுந்து புறப்படும்போது, விளக்கு ஏற்றிக் கொண்டிருந்தார்கள். மரகதத்தைச் சந்திக்க முடியவில்லை. குதிரையும் நன்றாக இளைப்பாறி மிடுக்குடன் நின்றது. உற்சாகத்துடன் பூபதி குதிரை மீதேறி காற்றிலும் கடுகி விரைந்தான். பூரண நம்பிக்கை அவனுள்ளத்தில் பூத்து நின்றது.

# 11

வேங்கடநாதனிடமிருந்து அழைப்பு வந்தது. பொற்கொல்லர்களுடன் குறிப்பிட்ட நாளன்று வருமாறு எழுதியிருந்தான்.

பூபதி யோசித்தான். பொற் கொல்லர்களோடு வந்து விட்டால் மாளிகையினின்று திரும்பிச் செல்ல முடியாது. இரத்தின ஹாரத்தையும் அடைய முடியாது. அதனால் குறிப்பிட்ட நாளுக்கு நான்கு நாட்கள் முன்பாகவே காஞ்சியினின்று புறப்பட்டான். மரகதத்திடம் வருவதாகக் கூறிய நாளும் அதுவே.

மாளிகையை அடையும் போது உச்சி வேளையைத் தாண்டியாகிவிட்டது. மாளிகையில் வேங்கடவன் இல்லை.

மரகதம் பூபதியை வரவேற்றாள். பூபதிக்குப் பொறுமை இல்லை. இரத்தினஹாரத்தை மரகதம் எடுத்து வைத்து விட்டாளா என்று அறியும் ஆவல் மிகுந்தது.

"மரகதம், உன் எசமானர் எங்கே? என்று பூபதி கேட்டான். தன்னை வரச் சொல்லிவிட்டு வேறு இடத்திற்குச் சென்று விட்டாரோ என்ற கவலை அவனுக்கு.

"தஞ்சையினின்று வந்துவிட்டார். வந்தவுடன் உங்களுக்குச் செய்தி சொல்லி அனுப்பினார். இன்று காலையில் தான் செஞ்சிக்குச் சென்றார். இரண்டு நாட்கள் ஆகும் என்று தெரிவித்து விட்டுச் சென்றிருக்கிறார்" என்று கூறிச் சற்று நிறுத்தினாள்.

"அது இருக்கட்டும். காயா? பழமா? சொல்" என்று பூபதி பரபரத்தான்.



"எதைப்பற்றிக் கேட்கிறீர்கள்?" - மரகதம் ஒன்றுமே தெரியாதவள் போல் கேட்டாள்.

"ஆ" என்று கூவிய பூபதி, "எதைப் பற்றி உன்னைக் கேட்பேன்...? அறிவு மிகுந்த நீ இப்படி ஒன்றும் தெரியாதவள் போல் கேட்பது சரியா? என் மானமே உன் கரத்தில் இருப்பதாகச் சொல்லிச் சென்றேன். எந்த ஒரு இரத்தின ஹாரத்திற்காக உன்னை என் ஆருயிர் நண்பனின் வீட்டில் கொண்டு சேர்த்தேனோ, அந்த ஹாரத்தைப் பற்றிக் கேட்கிறேன். அதைப் பொக்கிஷ அறையிலிருந்து எடுத்து விட்டாயா? பழம் என்று சொன்னால் எடுத்துவிட்டாய் என்று பொருள். இல்லை என்றால் காய்..." என்று சற்றுக் கோபமாகக் கேட்டான் பூபதி.

"காய் என்றும் சொல்ல முடியாது! பழம் என்றும் சொல்ல முடியாது..." என்றாள் மரகதம்.

"அப்படியென்றால்..."

"இரத்தினஹாரத்தைப் பொக்கிஷ அறையிலிருந்து எடுக்கவில்லை."

மரகதம் இவ்வாறு கூறியது கேட்டுப் பூபதி ஒரு கணம் திடுக்கிட்டான். அவன் நின்று கொண்டிருக்கும் தரை சற்று அசைவது போல் தோன்றியது. எதிரே விதானத்திலிருந்து தொங்கும் சர விளக்குகள் பலமாக ஆடுவது போல் தோன்றின. கரும்புலி என்று பெயர் கொண்டிருக்கும் அந்தப் பொல்லாத நாய் பயங்கரமாக உறுமிக்கொண்டு பாய்ந்து வருவதுபோல் தோன்றியது.

"என்ன சொல்கிறாய் மரகதம்?" என்று பூபதி நடுநடுங்கும் குரலில் கேட்டான்.

"ஆமாம், அத்தான். என்னை மன்னித்து விடுங்கள். நான் இரத்தினஹாரத்தை எடுக்கவில்லை... எடுக்கவும்

இனி விரும்பவில்லை" என்று மரகம் அழுத்தந்திருத்த மாகக் கூறினான்.

"என்ன சொல்கிறாய் மரகதம்? இரத்தினஹாரத்தை எடுக்கவில்லையா? அல்லது எடுக்க முடியவில்லையா? பொக்கிஷ அறைத் திறவுகோலை உன்னிடம் வேங்கடவன் இன்னும் கொடுக்கவில்லையா?" - பூபதி பரபரப்புடன் கேட்டான்.

"எடுக்க விரும்பவில்லை. என்னிடம் பொக்கிஷ அறைத் திறவுகோலை, எசமானர் நாம் சென்று பார்த்தோமே, அன்றே கொடுத்து விட்டார்..."

"பிறகு..."

"அதனால் தான் எடுக்க விரும்பவில்லை. என்னை மன்னித்து விடுங்கள் பூபதி. திறவுகோலை எடுத்துக்கொண்டு பொக்கிஷ அறையின் ஒரு பூட்டைக் கூடத் திறந்து விட்டேன். கதவுகளின் மணி கணகணவென ஒலித்தது. மணி ஒசை என் இதயக் கதவைத் திறந்துவிட்டது."

"என்ன சொல்கிறாய் மரகதம்?"

"ஆமாம்: அந்தப் பொக்கிஷ அறையின் அருகே எசமானர் நிற்பது போல் தோன்றியது. அவர் புன்முறுவலுடன் நிற்கிறார். "மரகதம், இந்தப் பொக்கிஷ அறையின் திறவுகோலை என் தந்தை தன் உயிருள்ள வரை ஒருவரிடமும் தந்ததில்லை. உயிர் பிரியு முன்புதான் என்னிடம் தந்தார். இந்தத் திறவுகோலை வேறு ஒருவரிடமும் தரக் கூடாது என்ற கண்டிப்புடன் தந்தார். ஆனால் உன்னை நம்பித் தந்தேன்" என்று அவர் வாய் திறந்து என்னிடம் பேசுவதுபோல் தோன்றியது. அதனால் நான் உடனே பழையபடியே பூட்டிவிட்டு வந்துவிட்டேன்.



பூபதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "மரகதம்" என்ன கூவினான். "நீ என்ன சொல்கிறாய்? என மரகதமா இவ்வாறு பேசுகிறாள்? என் காதில் விழுவது நிஜம் தானா? உன் அத்தானின் ஆபத்தான நிலையை நீ மறந்து விட்டாயா?" கூவினான்.

மரகதம், 'உஸ்' என்று உதட்டில் விரலை வைத்து எச்சரித்து, "கூவாதீர்கள். பீம் வந்து விடப் போகிறான். கரும்புலிக்கும் மோப்ப சக்தி அதிகம். வேலைக்காரர்கள் அருகேதான் இருக்கிறார்கள். அவர்கள் வந்துவிடப் போகிறார்கள். பிறகு ஏற்படும் அவமானத்தை தீர்க்க முடியாது... மெல்லப் பேசுங்கள்" என்று அமைதயாகக் கூறினாள் மரகதம்.

மரகதத்தின் முகத்தில் எவ்விதச் சலனமுமில்லை. தன் உள்ளத்தில் கொந்தளிக்கும் அலைகடலை அவள் அறிவாள். அதன் சிறு திவலை கூட அவள் முகத்தில் அரும்பவில்லை. மரகதம் மாறிவிட்டாளா? நடிக்கிறாளா? நான் எக்கேடு கெட்டுப் போனால் தான் என்ன என்று நினைக்கும் மனோபாவம் எப்படி வந்தது"

"நான் அப்படித்தான் கூவுவேன். ஓலமிடுவேன். என் விதியை நொந்து அலறுவேன். கரும்புலி பாயட்டும். வேலைக்காரர்கள் கூடட்டும். மரகதம் நீ கல்நெஞ்சக்காரியாக எப்போது ஆனாய்?"

மரகதம் மெல்ல நகைத்தாள். அதில் நகைச்சுவை இல்லை. சோகம் கலந்திருந்தது.

"பொக்கிஷ அறையை என் எசமானர் திறந்து காட்டியபோது தான்... மனம் கல்லானது" என்றாள்.

"என் நலனை விட உன் எசமானர் நலன் உனக்கு உயர்வாகி விட்டதோ? உன்னை எதற்காக இங்கே கொண்டு பணி செய்யச் சேர்த்தேன்? நல்ல ஆடை உடுத்தி, நல்ல உணவு வேளைக்கு உண்டு சுகித் திருக்கவா? இந்த உடைமையயும், உணவையும் உனக்கு

என்னால் தந்திருக்க முடியாதா? என் குடும்பத்தின் விலை மதிக்க முடியாத ஆபரணம் இங்கே இருக்கிறது. அது கிடைத்தால் எனது துன்பம் தீரும். பெரும் அவமானத்திலிருந்து மீளுவேன். அதை எடுக்கக் கூடியவள் நீ ஒருத்தி தான். என் நலனே உன் நலன் என்று நினைக்கக் கூடியவள். அதனால் உன்னை இந்த மாளிகையில் சேர்த்தேன். நீயும் இரத்தின ஹாரத்தை எடுத்துத் தருவதாக உறுதி கூறினாய். அப்போது நீ மறுத்திருக்கலாம். ஆசைகாட்டி என்னை மோசம் செய்துவிட்டாய். நீ துரோகியாக மாறியது எப்போது" என்று பூபதி முழக்கமிட்டான் ஆத்திரத்துடன்.

மரகதம் புன்முறுவலை மாற்றிக் கொள்ளாமலே, "அத்தான், சப்தமிடாதீர்கள். உங்களுக்கும் நல்லதில்லை. எனக்கும் நல்லதில்லை, என்னைப் பற்றிய தவறான முடிவிற்கு இங்குள்ளவர்கள் வந்துவிடுவார்கள். என் மீதுள்ள நம்பிக்கை குலைந்தால் உடனே இந்த மாளிகையை விட்டு வெளியேற்றி விடுவார்கள். தங்களுக்கும் இரத்தினஹாரம் கிடைக்காமல் நானும் அவப் பெயருடன் வெளியேறுவதில் என்ன பயன்?" என்று அவன் அருகே வந்து அவன் கரத்தைப் பற்றினாள்.

"சீ, இப்படிப் பேச உனக்கு வெட்கமாக இல்லை. என் உப்பைத் தின்று வளர்ந்த நீ இப்படிப் பேச எப்படிக் கற்றாய்? இந்த மாளிகையை விட்டு நீ வெளியேறித் திண்டாடுவதைக் காண எனக்குச் சந்தோஷம்தான். ஆனால் அந்தச் சந்தோஷத்தை அடைய நானே இந்த உலகில் இருந்தால் தானே..." என்று கூறி அவளுடைய கரத்தை உதறித் தள்ளிய பூபதி பயங்கரக் கோபத்துடன் கேட்டான்.



"மரகதம், உண்மையைச் சொல்லு. ஏன் இரத்தின ஹாரத்தை எடுக்கவில்லை. அதனால் எனக்குப் பெரும் ஆபத்து என்று உனக்குத் தெரியாதா?"

"எடுத்தால் எனக்கு ஆபத்து என்பதைத் தெரிந்து கொண்டேன்" என்றாள் மரகதம்.

"ஆபத்தைப் பற்றி முதலில் உனக்குத் தெரியாதா?"

"எனக்குள்ள ஆபத்தை விட தங்களுடைய நலன் முக்கியமாக எனக்கு அப்போது தோன்றியது."

"இப்போது என் நலனை விட உனக்கு வரும் ஆபத்து பெரிதாகி விட்டதா? இந்தச் சில நாட்களில் நீ எப்படி மாறினாய்? உன்னை நம்பிய என் கதி என்னாவது?"

"என்னை நம்பிய என் எசமானர் கதி என்னாவது?"

"என்னைவிட எசமானர் உயர்ந்து விட்டாரா?"

"உயரவில்லை. ஆனால் தங்களைத் தாழ்த்திவிட நான் விரும்பவில்லை.

"இந்த ஒரு நகையை எடுத்தால் உன் எசமானர் அறிய மாட்டார் என்பது உனக்குத் தெரியும். அதே சமயம் அந்த இரத்தினஹாரம் என்னைக் காப்பற்றி விடும் என்பதும் உனக்குத் தெரியும்."

"இல்லை, இரத்தினஹாரம் இருவரையும் காப்பாற்றாது. என்னையும் தாழ்த்திவிடும். உங்கள் பெருமையையும் மிக மிகத் தாழ்த்திவிடும். நீங்கள் நினைப்பதுபோல் எசமானருக்குத் தெரியாமல் இரத்தின ஹாரத்தை எடுக்க முடியாது."

"ஏன் எடுக்க முடியாது? நான் எடுத்துக் காட்டினால், திறவுகோலைக் கொடு. உன் எசமானர் ஊரில் இல்லை. நான் பொக்கிஷ அறையைத் திறக்கி றேன். நீ வெளியே காத்திரு. நான் இரத்தினஹாரத்துடன்

சென்று விடுகிறேன். ஒருவரும் அறியமாட்டார்கள். நானும் பிழைத்து விடுவேன்."

"ஒருவரும் அறிய மாட்டார்கள் என்று சொல்லாதீர்கள். நான் அறிவேன். எசமானருக்குத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை."

"எனக்கு மட்டும் துரோகம் செய்யலாமா? இரத்தின ஹாரம் கிடைக்காததால் நான் பழிக்கு ஆளாகி அவமானப்பட்டு அழிந்து போவதை நீ விரும்புகிறாயா?"

"இல்லை; நான் விரும்பமாட்டேன். தாங்கள் அழிவதை நான் விரும்பமாட்டேன். அதற்காக நான் அழியத் தயார்."

"இரத்தினஹாரத்தை எடுத்துக் கொடுக்க முடியாதவள் அழிவைப் பற்றிப் பேசுகிறாய். உயிர் விடுவதைப் பற்றிப் பேசுகிறாய். உன் உயிரால் என் மானத்தை விலைக்கு வாங்க முடியுமா?"

"முடியும். நாளை வரைப் பொறுத்திருங்கள். உங்கள் மானம் போகாமல் என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுகிறேன்."

"பிரயோசனமில்லை. நாளை இந்நேரம் என் கடை வாசலில் வாடிக்கையாளர் வந்து நின்று விடுவார். வாக்களித்தபடி நகையைக் கேட்பார். இல்லாவிடில் ஊரைக் கூட்டி முதலில் அவமானப்படுத்துவார். பிறகு நீதிமன்றத்தில் புகார் செய்து விடுவார். அவமானம் அடைய விரும்பாமல் நான் தூக்கில் தொங்குவேன். பின் கழுத்தைத் தூக்குக் கயிறு அலங்கரிக்கும். உன்னால் என் மானம், மரியாதை, உயிர் எல்லாம் போய்விட்டதாக நான் ஓலையில் எழுதி வைத்துச் செல்வேன். ஊரிலுள்ளவர்கள் உன் மீது பழி சொல்வார்கள். முன்பே என்னையும், உன்னையும்



தொடர்புப்படுத்திப் பேசிய ஊரார் கை கொட்டி நகைப்பார்கள்."

"பூபதி, என்னவெல்லாம் பேசுகிறீர்கள்? உங்களுக்கு அவமானம் ஏற்பட நான் சகிக்க மாட்டேன்."

"வெறும் வார்த்தைப் பந்தல் நிழல் தராது. உன்னை நம்ப முடியாது. நீ துரோகியாகிவிட்டாய்."

"இல்லை; இல்லை. நான் துரோகியல்லள். ஹாரத்தை எடுத்துத் தந்தால் தான் நான் எசமானருக்குத் துரோகியாவேன். நான் வயதில் சிறியவள்; அதிலும் பெண். நான் தீர ஆலோசிக்காமல் பொக்கிஷ அறையிலிருந்து இரத்தினஹாரத்தை எடுத்துத்தருவதாகச் சம்மதித்து விட்டேன். பிறகு தான் அது பெரும் களவுக்குச் சமம் என்பதை உணர்ந்தேன். களவுடன், நம்பிக்கைத் துரோகமும் சேர்கிறது. ஆனால் தங்களுக்கு வாக்களித்தபடி, தங்களுக்கு நேரவிருக்கும் அவமானத்திலிருந்து காப்பாற்ற முடியும். எசமானரிடம் சொல்லித் தங்களுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்திலிருந்து தங்களை மீட்க முடியும். சொல்லாமல் செய்வதைவிடச் சொல்லிச் செய்வது உத்தமம்."

மரகதம் உணர்ச்சி பொங்கப் பேசியதைக் கேட்டு பூபதி கோபம் மிகக் கொண்டான். கோபத்தால் பெரிதாக நகைத்தான்.

"ஆகா: நான் பார்த்து வளர்ந்த பெண் எனக்கே அறிவுரை கூறுகிறாயா? பேச்சால் என்னை மயக்கிவிட முடியும் என நினைக்காதே. மரகதம், நான் ஒரு நாளும் அவமானம் அடையப் போவதில்லை. இரத்தின ஹாரத்தை அடையாமல் இங்கிருந்து போகப் போவதில்லை. எங்கே திறவுகோல் கொடு அதை" என்று மரகதத்தைத் தாவிப் பிடித்தான்.

மரகதம் அவன் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்தின் பயங்கரம் அவளுக்குப் பீதியை அளித்தது. ஓரடி பின் வாங்கினாள். அங்கே நின்றால் ஆபத்து என்று உள்ளே ஓட முயன்றாள்.

பூபதி தாவிப் பிடிக்க ஓடினான். அவளது இடுப்பிலுள்ள திறவுகோல் கோப்பு அவன் கண்களில் பட்டது.

அதோ ஒரே எட்டு - மரகதத்தைப் பிடித்து விட்டான். அவள் இடையில் சுற்றியிருந்த சேலைதான் கையில் கிடைத்தது. மரகதம் அதோ 'ஓ'வென்று கூவ முற்படுகிறாள். சேலை கழன்று கருகிறதே என்றல்ல, திறவுகோலை அவன் பறித்து விடப் போகிறானே என்று. பூபதியின் ஒரு கரம் அவள் வாயைப் பொத்தியது. ஒரு கரம் -

"பூபதி, அப்படியே நில்" - என்று ஒரு குரல் கேட்டது. பூபதி திடுக்கிட்டுத் திரும்பினான்.

வேங்கடவன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

## 12

பூபதி நடுநடுங்கி விட்டான். வேங்கடவனை அந்தநேரத்தில் அவன் எதிர்பார்க்கவில்லை. மரகதமும் தன் எசமானரை அந்தப் போதில் எதிர்பார்க்கவில்லை. செஞ்சி வரையில் சென்று வருவதாகக் கூறிச் சென்றார். செஞ்சிக்குச் சென்றவர் அதற்குள் திரும்புவது எளிதன்று. பிறகு எப்படி வந்தார்?

பூபதி இவ்வாறு குரூரான செய்கையில் இறங்குவான் என்று மரகதம் நினைக்கவில்லை. வாயை அவன் அழுத்தியது அவளைப் பேசவிடாமல் செய்தது. மற்றொரு கரத்தால் இடுப்பிலுள்ள திறவுகோலைப் பறிக்கவே அவன் முடிவு செய்திருக்கிறான்.



பூபதி தன் கரங்களை விடுவித்துக் கொண்டான். அவனுடல் நடுங்கியது. ஆகா, ஒரே கணத்தில் என்ன செய்ய நினைத்துவிட்டோம், வேங்கடவன் வரமாட்டான் எனறு தவறாக எண்ணி விட்டோமே...

பூபதி தலைகுனிந்து நின்றான். அவிழ்ந்த சேலையை மரகதம் சரி செய்து கொண்டாள். அவளுக்கு அழுகை வந்தது. தன் இடுப்பில் இருந்த திறவுகோல் அடங்கிய கொத்தை வேங்கடவனிடம் எடுத்து நீட்டினாள்.

"ஏன் திறவுகோலை என்னிடம் தருகிறாய்? நீயே வைத்துக் கொள். அல்லது பூபதியிடம் கொடு." என்று கூறிய வேங்கடவன் அருகே இருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டான். விரைந்து வந்தால் சற்றுக் களைப்பாயிருந்தது. உடல் வியர்வையால் நனைந்திருந்தது.

"ஏன் மரகதம் இப்படித் திக்பிரமை பிடித்துப் போய் நிற்கிறாய்? திறவுகோலைப் பூபதியிடம் கொடுத்து விடு. பொக்கிஷ அறையைத் திறந்து அவன் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளட்டும். அவனுக்கில்லாத வைர வைடூரியங்கள் எனக்கு எதற்கு?" என்றான் வேங்கடவன்.

பூபதியின் மேலே ஆகாயமே இறங்கியது போல் தோன்றியது. பெரிய பாறையை முதுகில் கட்டி ஆழமான ஏரியில் அவனை அமிழ்த்தியது போல் தோன்றியது.

"பூபதி ஏன் உன் உடல் இப்படி நடுங்குகிறது? உன் முகம் வெளிரிட்டு விட்டதே ஏன்? இப்படி உட்கார். களைப்பாயிருக்கிறதா? வந்து வெகு நேரமாகிறதா? ஆகாரம் ஏதாவது கொடுத்தாளா?" என்று வேங்கடவன் சர்வ சாதாரணமாகக் கேட்டான்.

"வேங்கடநாதா! எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு, சாட்டையால் தோல் பிய்ந்து வரும்வரை அடி. குதிரையோடு என்னைப் பிணைத்து, குதிரையை மிக வேகமாக ஓட்டு, செஞ்சி அரசரிடம் என்னை ஒப்படைத்து, அவரது பாதாள இருளறையில் என்னை அடைத்து வை. ஆனால் வார்த்தையால் மட்டும் குத்திக் குதறாதே. என்னிதயம் வெடித்துவிடும். நான் சிநேகத் துரோகி. எனக்கு உயிர் போகுமளவுக்குக் கூடத் தண்டனை தரலாம். ஆனால் அணு அணுவாக என்னைச் சாகுமாறு செய்துவிடாதே" என்று கூறி வேங்கடவனின் பாதங்களில் சாய்ந்தான்.

"நான் பெரும் துரோகி. திட்டமிட்டுச் சதி செய்தேன். ஆனால், பாவம் மரகதத்தின் மீது எந்தவிதக் குற்றமுமில்லை. அவள் உயர்ந்த சாஸ்திரம் படித்த குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் சகோதரன் என் உயிர் நண்பன் மகாமேதை. அந்தக் குடும்பத்திற்கு நான் வேண்டிய உதவிகள் செய்துள்ளேன். ஆனால் இத்தகைய பழி மரகதத்தைச் சேருமாறு செய்திருக்க வேண்டாம். ஆனால், மரகதம் அதற்கு உடந்தையாக இல்லை" என்ற பூபதி கூறி முடிப்பதற்குள், நாகுழறியது தடுமாறினான். கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது. கண்ணீர்த் துளிகள் பாதங்களை நனைத்தது.

"ஏய், ... ஏய்... பூபதி... எழுந்திரு... எழுந்திரு... என்ன காரியம் செய்து விட்டாய். நீ என் காலில் விழுவதாவது, எதற்காக நீ விழ வேண்டும்" என்று பரபரப்புடன் துள்ளி எழுந்து, பூபதியைத் தூக்கி நிறுத்தி, "பூபதி, என்ன காரியம் செய்து விட்டாய். அழுகையை நிறுத்து. கண்ணீரைத் துடைத்துக் கொள். என்ன நேர்ந்து விட்டது என்று இப்படி நீ வருத்தப்



படுகிறாய். மன்னிப்புக் கேட்கிறாய்?" என்று கூறி அவனை அணைத்துக் கொண்டான்.

மரகதமும், பூபதியும் சொல்வதறியாது, செய்வதறியாது திகைத்தனர்.

"என்ன சொல்கிறாய் வேங்கடவா? என்னநேர்ந்து விட்டதென்று கேட்கிறாயே? வேடிக்கையாகக் கேட்கிறாயா; அல்லது என்னைச் சோதிக்கிறாயா? வார்த்தை அம்புகளால், மெல்ல, மெல்ல இதயத்தில் தைக்க முயல்கிறயா? உனக்குத் தெரியாமல் நான் சதி செய்து விட்டேன், வேங்கடவா சதி செய்து விட்டேன். நீ சற்றுத் தாமதித்து வந்திருந்தால் நான் மரகதத்திடமிருந்து திறவுகோலைப் பறித்திருப்பேன். பொக்கிஷ அறையைத் திறந்திருப்பேன். ஆனால், எனக்குக் கொள்ளையடிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. என்னைத் திருடன் என்று எண்ணிவிடாதே. நான் ஒரே ஒரு நகையை மட்டும் எடுத்துக்கொண்டு போக வந்தேன், அந்த நகை..." என்று அவன் தொடர்ந்து கூறுவதற்குள் வேங்கடவன் குறுக்கிட்டு, "இரத்தின ஹாரம்" என்றான்.

பூபதி வியப்பு மேலிட்டால், "உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

இரத்தினஹாரம் உங்கள் பரம்பரைச் சொத்து. உன் தந்தை என் தந்தையிடம் ஈடுகட்டிப் பணம் வாங்கினார்" என்று வேங்கடவன் கூறினான்.

"ஆகா: உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே."

"ஆம்; அனைத்தும் அறிவேன். தொழிலில் உனக்கு நெருக்கடி ஏற்பட்டதை அறிவேன். பல தனவந்தர்களிடம் இரத்தினக்கல் பதித்த பதக்கங்கள் செய்து தருவதாக வாக்களித்திருந்தும், அதற்காக அவர்கள் கொடுத்த தங்கத்தை நீ வேறு விதத்தில் செலவு செய்து

விட்டதும் எனக்குத் தெரியும். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கெடு நெருங்குவதை அறிந்து நீ ஒரு திட்டம் தீட்டியதையும் அறிவேன்..."

"ஆ! வேங்கடவா, அனைத்தும் அறிந்து நீ ஒன்றும் அறியாதவன் போல் நடித்தாயா?"

"நாமிருவருமே நடித்தோம். நாடகப் பாத்திரம் மட்டுமே வேறு. மரகதத்தை என்னிடம் வேலை செய்யக் கொண்டு சேர்த்தாய். பார்த்த நோக்கிலேயே மரகதத்தின் குணத்தை அறிந்துவிட்டேன். அவர் களுடைய நேர்மையைச் சோதனை செய்தேன். என் படுக்கை அருகே வைர, வைடூரியக் கற்களும், தங்க நாணயங்களும் நிறைந்தபையை மறந்தது போல் வைத்தேன். யாரும் கேட்பாரற்று அது இருப்பது போல் அதை மிக அலட்சியமாகக் கிடத்தினேன். மரகதம் அதை எடுத்து மறைத்து வைத்திருக்கலாம். அல்லது பண நெருக்கடியில் தடுமாறும் உன்னிடம் கொடுத்திருக்கலாம். அவள் அவ்வாறு செய்யவில்லை. மிகவும் ஜாக்கிரதையாக அதை எடுத்து ஒரு பெட்டியில் வைத்திருந்தாள். நான் வெளியூரிலிருந்து வந்தவுடன் ஒன்றும் அறியாதவன் போல் அதைப் பற்றிக் கேட்டேன். அவள் உடனே ஒரு பெட்டியைச் சுட்டிக் காட்டி அதில் பத்திரமாக வைத்திருப்பதாகக் கூறினாள். நான் அவளுடைய நேர்மையை மனத்திற்குள் மெச்சிக் கொண்டேன். ஒவ்வொரு செயலிலும் அவள் நம்பிக்கை வாய்ந்தவள் என்பதை நிலைநாட்டிக் கொண்டாள். என் தாயாருக்கு அவள் முகம் சுணங்காமல் பணிவிடைகள் செய்து வருகிறாள். என் தாயின் நோய் பாதி குணமாகி விட்டது. இன்னும் பாதிதான் குணமாக வேண்டும்.

ஒருநாள் அவள் உன்னைப் பற்றி என்னிம் கூறினாள். உனக்கு ஏற்பட்டிருக்கும் பண நெருக்கடி



யையும், நீ இரத்தின ஹாரத்தை விரும்புவதைப் பற்றியும் கூறினாள். நான் அவளைக் கேட்டேன்: "அந்த இரத்தின ஹாரத்தை எடுத்துத் தருவதற்காகத்தான் இந்த மாளிகையில் பணி செய்ய நீ வந்தாயா?" என்று. அவள் உண்மையை ஒன்று விடாமல் கூறினாள். எனக்கு அவளுடைய பேச்சு பிடித்திருந்தது. இந்த மாளிகை யுடன் மாளிகையாக இரண்டறக் கலந்துவிட்ட போக்குப் பிடித்திருந்தது. ஆனாலும் முழு நம்பிக்கை எனக்கு ஏற்படவில்லை. பொக்கிஷ அறைத் திறவுகோலையே அவளிடம் கொடுத்துவிட்டேன். பல நாட்கள் நான் ஊரிலில்லாமல் வெளியூர் சென்றேனே அப்போதே கொடுத்துவிட்டேன். அவள் கதவைத் திறந்து, நீ கேட்டபடி நகையை எடுத்துக் கொடுத் திருக்கலாம். அவள் அப்படிச் செய்யவில்லை. அவளுடைய பொறுப்பு அதிகமாகியது. இடையே ஒரு நாள் நீ வந்து எச்சரித்துச் சென்றதைப் பற்றிச் சொன்னாள். நான் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேத்ன. எனக்கு உள்ளுணர்வு சொல்லியது, இடையே ஒரு நாள் நீ வந்து மரகதத்தை மிரட்டி நகையை வாங்கிச் சென்று விடுவாய் என்று.

"நான் இன்று செஞ்சி செல்லப் புறப்பட்டத உண்மையே. ஆனால் செங்கல்பட்டுக் கோட்டை வரை சென்றேன். வேலை முடிந்தது திரும்பினேன். மாளிகை வாசலில் பீம் நீ வந்திருக்கும் விபரத்தைக் கூறினான். நான் உள்ளே வருவதற்கும், நீ மரகத்திடம் பலவந்தமாக திறவுகோலைப் பறிக்க முயல்வதற்கும் சரியாக இருந்தது..."

வேங்கடவன் சொல்லி முடிக்கவில்லை. பூபதி கண்களில் நீர் ஆறாகப் பெருக, "வேங்கடவா, நீ குணக்குன்று. நான் செய்த சதித்திட்டம் தெரிந்தும் நீ என்னை மாளிகையில் நடமாடவிட்டாயே, உன்

பெருந்தன்மையை என்னென்பது?" என்று நா தழுதழுக்கக் கூறினான்.

"எனக்குத் தெரியும் உன் குணம். உனக்குக் களவாடும் எண்ணம் சிறிதும் இல்லை. நீ கொண்டு சேர்த்த மரகதமே உண்மையைக் கூறிவிட்டாள். உனக்கு எப்படி உதவலாம் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். பொற் கொல்லர்கள் ஆபரணங்கள் செய்ய வரும்போது இரத்தினஹாரத்தை உன்னிடம் கொடுத்துவிட எண்ணினேன்... இரத்தினஹாரத்தை மரகதத்திடம் கொடுத்துவைத்திருந்தேன். அவள் உன்னிடம் இன்று அதைக் கொடுத்திருக்கலாம். அப்படிக் கொடுத்திருந்தால் நீ பலாத்காரத்தில் இறங்கியிருக்க மாட்டாய். ஏனோ அவள் கொடுக்கவில்லை..!"

"இல்லை... இல்லை மரகதம் செய்ததுதான் சரி. அவள் உன்னைக் கேட்காமல் என்னிடம் கொடுக்காமல் இருந்தது தான் சரி. தன்னிடம் இரத்தின ஹாரம் இருப்பதாகக் கூட அவள் தெரிவிக்கவில்லை. மிக மிக உயர்ந்து விட்டாள்..." என்றான் பூபதி.

"மரகதம் தான் உயர்ந்ததன் மூலம் உன்னையும் உயர்த்தி விட்டாள். அவளை இங்கு அனுப்பியதன் மூலம் நீ மிக மிக உயர்ந்தவனாகிறாய். மரகதம் அந்த இரத்தினஹாரத்தைப் பூபதியிடம் எடுத்துக் கொடு" என்றான் வேங்கடவன்.

"இரத்தினஹாரத்தை தங்கள் தாயாரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன்."

"என் தாயாரிடமா? ஏன் அங்கு கொடுத்தாய்?" வேங்கடநாதன் வினவினான்.

"என்னிடமிருந்திருந்தால் ஒரு வேளை மனம் மாறாலாம் என்றுதான். இதோ வாங்கி வருகிறேன்" என்று கூறி விட்டு அங்கிருந்து புறப்பட்ட மரகதம் சற்றுத் தயங்கி நின்றாள்.



மாடத்தின் படிகளின் வழியே மங்கம்மாள் இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

"பூபதி, பல தடவை இந்த மாளிகைக்கு வருகிறாய் என்று கேள்விப்பட்டேன். ஒரு தடவையாவது மேலே வந்து என்னைப் பார்க்கக் கூடாதா? நீ மிக அரிய பொக்கிஷத்தை எங்கள் மாளிகைக்குக் கொடுத்தாய், அவள் வந்த பிறகு என் நோய் பாதி குறைந்தது. மற்றொரு பாதியும் குறைந்துவிடும், வேங்கடவனின் திருமணம் நடைபெற்றுவிட்டால்... இரத்தின ஹாரத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுத்த மரகதம், "இது உங்கள் குடும்பத்தினுடையது" என்றாள். "எனக்கும் தெரியும். என் கணவர் கூறியிருக்கிறார். ஒரே ஒரு நிபந்தனையின் பேரில்தான் அதை நான் உன்னிடம் திருப்பிக் கொடுப்பேன். மரகதம் நீ கண்டெடுத்த இரத்தினம். அவளை வேங்கடனுக்கு மணம் புரிந்துகொள்ள எண்ணியுள்ளேன். நீ அதற்குச் சம்மதிக்க வேண்டும். மரகதம் இந்த வீட்டு மருமகளாக ஆகிவிட்டால் என்னுடைய மீதிப் பாதி நோயும் குறைந்துவிடும்" என்றாள் மங்கம்மாள்.

மரகதம் இந்தச் சொற்களை எதிர்பார்க்கவில்லை. வேங்கடவன் என்னதான் ஆண்பிள்ளையாயிருந்தாலும், திருமணப் பேச்சு எடுத்தவுடன் நாணித் தலை குனிந்தான். மரகதம் விரைந்து சென்று திரை மறைவில் நின்று கொண்டாள்.

பூபதி, மங்கம்மாளின் பாதங்களைத் தொட்டு வணங்கி "மரகதத்திற்கு உற்றார் உறவினர் யாருமில்லை. நான் தான் சகோதரன், தந்தை, என்னை அத்தான் என்று அவள் அழைத்தாலும், அவளுக்கு முறைப்படி மணக்கப் போகும் அத்தான் வேங்கடவனே. அவனுக்கு மரகதம் மாலையிடுகிறான் என்றால் அவள் செய்த பூர்வ ஜென்ம புண்யமே" என்றான்.

மங்கம்மாளிடமிருந்து இரத்தின ஹாரத்தை வாங்கி வேங்கடவன் பூபதியிடம் அளித்தான். பிறகு மரகதத்தை அழைத்து, "மரகதம், தாயின் பாதங்களைத் தொட்டுக் கும்பிடு" என்றான். மரகதம் மங்கம்மாளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியபோது வேங்கடவனும் சேர்ந்து தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

"நீண்ட நெடுங்காலம் மரகதத்துடன் இனிது வாழ்ந்து புத்திர பௌத்திரர்களைப் பெற்று சுகமாக வாழ்வாயாக" என்று மங்கம்மாள் வாழ்த்தினாள்.

அனைவரின் விழிகளிலும் ஆனந்தக் கண்ணீர் அரும்பியது.

இரத்தினஹாரம் சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்துவிட்டது.